amnesty international




# இலங்கை

# விமர்சனக் கருத்துகளை ஒடுக்குதல்

**7 பிப்ரவரி 2008**

சர்வதேச பொது மன்னிப்பு சபை பட்டியல்: ASA 37/001/2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரங்கில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகளை மதித்துப் பேணுவதையும் பாதுகாக்கப்படுவதையும் வலியுறுத்தும் உலகளாவிய பக்கச்சார்பற்ற மக்கள் இயக்கம் பொது மன்னிப்பு சபை ஆகும். 22 லட்சம் பேருக்கும் அதிகமானோர் இதில் உறுப்பினர்களாய் உள்ளனர். 150 க்கும் மேற்பட்ட நாடுகளில் இதற்கு ஆதரவாளர்கள் இருக்கின்றனர்.

பிரசுரித்தோர்:
சர்வதேச பொது மன்னிப்பு சபை (அம்னெஸ்டி இண்டர்நேஷனல்)
Peter Benenson House
1 Easton Street
London WC1X ODW
United Kingdom

© சர்வதேச பொது மன்னிப்பு சபை பிரசுரங்கள் 2008

இப்பிரசுரத்திற்கான அனைத்து உரிமைகளும் தக்கவைத்துக் க்கொள்ளப்படுகிறது. பிரசுர உரிமைக் காப்பீட்டுச் சட்டத்தால் இப்பிரசுரம் பாதுகாக்கப்படுகிறது. ஆனால் கட்டணம் வசூலிக்காமல் ஆலோசனை வழங்கும் நோக்கிலோ, பிரச்சார நோக்கிலோ அல்லது கல்வி நோக்கிலோ இதனை மறு பிரசுரம் செய்யலாம். இருந்தபோதும் இதனை மீண்டும் விலைக்கு விற்க முடியாது. இந்த பிரசுரத்தை அனுமதிக்கப்பட்ட வழியில் பயன்படுத்துவோர் பிரசுரத்தின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதை முன்னிட்டு தம்மிடம் பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்று பிரசுர உரிமை உடையவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள். மற்ற சூழல்களில் இந்த பிரசுரத்தின் நகலைப் பயன்படுத்தவோ, மற்ற பிரசுரங்களில் பயன்படுத்தவோ அல்லது மொழி மாற்றி, வாசகங்களை மாற்றி பயன்படுத்தவோ விரும்புவோர் பிரசுரதாரர்களிடம் இருந்து எழுத்து மூல முன்–அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். இதற்கு ஒரு கட்டணம் செலுத்த வேண்டி வரலாம்.

இந்த அறிக்கையின் வாசகங்களை www.amnesty.org என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.


தலைப்பு: இலங்கை: விமர்சனக் கருத்துகளை ஒடுக்குதல்
சர்வதேச பொதுமன்னிப்பு சபை வரிசை: ASA 37/001/2008

அறிக்கையின் மூல மொழி: ஆங்கிலம்

அச்சிட்டோர்: சர்வதேச பொது மன்னிப்பு சபை, சர்வதேச செயலகம், ஐக்கிய இராஜ்ஜியம்.

*ஊடகப் பணியாளர்கள் மற்றும்*
*தொழிற்சங்கவாதிகளின் போராட்டம்*
*பிரசுர உரிமையாளர்: லங்காஈநியூஸ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இலங்கை வரைபடம்** © டெக்ஸாஸ் பல்கலைக்கழக நூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

1. அறிமுகம்....4
2. பின்னணி....7
3. கருத்துச் சுதந்திரம்: சர்வதேச தர அளவுகோள்கள்....12
3.1 கருத்துச் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள்....12
3.2 இலங்கையில் கருத்துச் சுதந்திரம் தொடர்பான சட்ட வடிவமைப்பு....15
3.3 அவசரகால விதிமுறைகள்....16
3.4 அவசரகால விதிமுறை (பயங்கரவாதம் மற்றும் குறிப்பிட்ட பயங்கரவாதச் செயல்களைத் தவிர்ப்பதும் தடுப்பதும்) 2006 விதி எண் 7 ....19
4. இலங்கை இனப்பிரச்சினையின் பின்னணியில் பத்திரிகையாளர்கள் மற்றும் பிற ஊடகப் பணியாளர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள்....22
4.1 பத்திரிகையாளர்கள் மற்றும் பிற ஊடகப் பணியாளர்கள் சட்டவிரோதமாகக் கொலைசெய்யப்பட்ட சம்பவங்கள்....22
4.2 பத்திரிகையாளர்கள் கடத்தப்பட்ட சம்பவங்கள் ....31
4.3 பத்திரிகையாளர்கள் கைதுசெய்யப்பட்ட சம்பவங்கள் ....32
4.4 புலிகளின் குரல் வானொலி நிலையம் குண்டுத் தாக்குதலுக்குள்ளான சம்பவம் ....38
4.5 மிரட்டல்கள் மற்றும் பிற வடிவிலான அச்சுறுத்தல்கள் ....38
5. விடுதலைப் புலிகளின் அத்துமீறல்கள் ....43
5.1 வன்னியில் மாற்றுக் கருத்துகளை ஒடுக்கும் போக்கு ....43
5.2 புலம்பெயர்ந்து வாழ்வோர் நடத்தும் ஊடகங்களை இலக்குவைத்து விடுதலைப் புலிகள் செயற்பட்டமை ....46
6. சுடர் ஒலி மற்றும் தினக்குரல் நாளிதழ்களை கருணா பிரிவினர் அச்சுறுத்தியது ....46
7. ஊடகங்கள் மீதான அதிகரித்துவரும் அரசாங்கக் கட்டுப்பாடுகள் ....48
7.1 "நீங்கள் எங்களுடனா, எங்களுக்கு எதிராகவா" ....50
7.2 இனப்பிரச்சினை மற்றும் ஊழல் விவகாரங்களைப் பற்றி செய்தி வழங்கும் பத்திரிகையாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் ....52
7.3 போராட்டங்களின்போது பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள் ....55
7.4 *சண்டே லீடர்* பிரசுர அலுவலகத்தில் தீவைக்கப்பட்ட சம்பவம்...55
7.5 கலை கலாச்சார படைப்புகளின் கருத்துச் சுதந்திரம் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகிறது ....56
7.6 *அக்ஷர்யா* தணிக்கை செய்யப்பட்ட சம்பவம் ....57
7.7 *மாவ்பீமா* செய்தித்தாள் இலக்குவைக்கப்பட்டு அதன் குரல் ஒடுக்கப்பட்ட சம்பவம் ....60
7.8 செய்திச் சேவைகள் தடுக்கப்பட்டது & இடைநிறுத்தப்பட்டது.......61



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பொறுப்பேற்கவைக்கும் தன்மை மற்றும் சட்ட நடவடிக்கைகள் இல்லாத சூழ்நிலை ....63
9. அபிப்பிராயம் மற்றும் கருத்துச் சுதந்திரத்தை மதிப்பதும் அவை மதிக்கப்படுவதை உறுதிசெய்வதும் ....66
10. பரிந்துரைகள் ....68



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை

## மாற்றுக் கருத்தை ஒடுக்குதல்

### 1. அறிமுகம்

இலங்கையில் கடந்த 2006ல் ஆயுத மோதல்கள் மீண்டும் துவங்கியதிலிருந்து ஊடகங்கள் மற்றும் ஊடகச் சுதந்திரம் மீதான அச்சுறுத்தல்கள் மிக மோசமடைந்துள்ளன. 2006ஆம் ஆண்டுத் துவக்கத்திலிருந்து குறைந்தபட்சம் 10 ஊடகப் பணியாளர்கள் சட்டவிரோதமாக கொலைசெய்யப்பட்டுள்ளார்கள் என்றும் பாதுகாப்புப் படைகளின் பிடியில் இருந்த சமயத்தில் இரண்டுபேர் காணாமல் போயுள்ளனர் என குற்றம்சாட்டப்படுகிறது என்றும் அரசாங்கத்துக்கு பெரும் அதிகாரத்தை வழங்கும் அவசரகால விதிமுறைகளின்கீழ் பலர் யதேச்சதிகாரமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர், சித்ரவதை செய்யப்பட்டுள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஊடகப் பணியாளர்கள் – குறிப்பாக தமிழ் பத்திரிகையாளர்களின் உயிருக்கு அரச படைகள் மற்றும் பிறரால் கடும் அச்சுறுத்தல் நிலவுகிறது. சில சந்தர்ப்பங்களில் தமிழ் ஆயுதக் குழுக்கள் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்; அவர்கள் அரச படைகளின் ஒத்திசைவுடன் இவற்றைச் செய்துள்ளதாகத் தெரிகிறது. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP), கருணா அணி என்றழைக்கப்படும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (TMVP)[1] போன்றவை இந்த தமிழ் ஆயுதக் குழுக்களில் அடங்கும். 1980களிலிருந்து இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் சிறுபான்மையினருக்கென தனி நாடு கேட்டுப் போராடிவரும் விடுதலைப் புலிகள் அமைப்பும் தனது பங்குக்கு தனது கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் பக்கச்சார்பற்ற உள்ளூர் ஊடகங்கள் செயலாற்ற அனுமதிப்பதில்லை. மேலும் ஊடகவியலாளர்களின் பணியை அது உன்னிப்பாக கண்காணித்தும் கட்டுப்பாடுகளை விதித்தும் வருகிறது.

மனித உரிமை மீறல்களைச் செய்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை - அவர்களது செயலுக்கு அவர்களை பொறுப்பேற்க வைக்கும் சூழல் இல்லை என்பது ஒரு பெரும் கவலையாக இருக்கிறது. ஊடகப் பணியாளர்கள் சட்டவிரோதமாக கொலைசெய்யப்பட்டது பற்றி

---

[1] விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதியான கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளீதரன், 2004ல் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து சென்று ஏப்ரல் 2004ல் TMVP அமைப்பை உருவாக்கினார். மட்டக்களப்பு மாவட்டம்தான் கருணா அணியினர் வலுவாக இருந்த பிரதேசம். கருணா அணியினருக்கும் அரசாங்கப் படைகளுக்கும் இடையில் தொடர்புகள் இருந்ததாக ஹியூமன் ரைட்ஸ் வாட்ச் அமைப்பு, ஐ.நா.மன்ற மூத்த அதிகாரி அலென் ரொக் உட்பட பலர் குற்றம்சாட்டியுள்ளனர். ஆனால் கருணா அம்மான் இலங்கையிலிருந்து வெளியேறி, 2 நவம்பர் 2007 அன்று லண்டனில் கைதாகியிருக்கும் நிலையில், 2007 அக்டோபர் முதற்கொண்டு திருகோணமலையைச் சேர்ந்த பிள்ளையான் என்பவர் தலைமையிலான பிரிவு ஆதிக்கம் செலுத்திவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரணைகள் வேண்டுமென ஊடக அமைப்புகளும் பிறரும் கோரிவந்தாலும், சந்தேக நபர்களை நம்பத்தகுந்த சாட்சிகள் அடையாளம் காட்டிய பின்னரும், குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதில் முன்னேற்றம் இல்லை.

இலக்குவைக்கப்படும் ஊடகத்துறையைச் சேர்ந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும், 2006 முதல் அரசாங்க அதிகாரிகளும் அரசு ஆதரவு தமிழ் ஆயுதக் குழுக்களும் பெரும்பான்மை சிங்கள சமூகத்தை சேர்ந்தவர்களையும் அதிக அளவில் இலக்குவைத்து வருகிறார்கள். இனத் தகராற்றுக்கு எதிராகவும், அரசியல் தீர்வு ஒன்றுக்கு ஆதரவகவும் குரல் எழுப்புகின்ற அல்லது மற்ற விடயங்களில் அரசாங்கத்தின் கொள்கையை விமர்சிக்கின்றவர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். பத்திரிகையை மூடியது, இணையதளத்தை தடைசெய்தது, அவசரகால விதிமுறையின்கீழ் யதேச்சதிகாரமாக கைதுசெய்தது தடுத்துவைத்தது, செய்தித் தணிக்கை செய்தது, மிரட்டியது போன்றவை ஊடகத்துறையின் செயல்பாடை ஒடுக்கும் நடவடிக்கைகளில் அடங்கும். இப்படியான நடவடிக்கைகள் கலைஞர்கள் மற்றும் சினிமாக்காரர்களுக்கு எதிராக எடுக்கப்படுவதும் அதிகரித்துவருகிறது.

தகவல் தேடுவதிலும், பெறுவதிலும், வழங்குவதிலும் மற்றும் பல்வேறு விதமான சிந்தனைப் பரிமாற்றத்திலும் சுதந்திரத்தைப் பேணுவது மற்றும் பாதுகாப்பது தொடர்பான சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தத்திற்கு (ICCPR) இலங்கை உடன்பட்டிருக்கும் நிலையில், ஊடகத்துறைக்கு எதிரான நடவடிக்கைகள் காரணமாக இலங்கை தனக்கிருக்கும் கடப்பாடுகளை மீறுவதாக சர்வதேச பொதுமன்னிப்பு சபை கவலை கொண்டுள்ளது. கருத்துச் சுதந்திரத்துக்கு எதிராக இலங்கையில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், தேசிய பாதுகாப்பு போன்ற காரணங்கள் கருதி நியாயப்படி விதிக்கப்படும் கட்டுப்பாடுகளின் அளவைக் காட்டிலும் மிகவும் அதிகமானது. பத்திரிகையாளர்களின் உயிருக்கு ஆபத்து, சித்ரவதையிலிருந்து இழிவாக நடத்தப்படுவதிலிருந்தும் அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பதை தேசியப் பாதுகாப்பு காரணங்களை சொல்லி நியாயப்படுத்த முடியாது. இந்த நிலையானது, சர்வதேச சட்டங்களின்கீழ் இலங்கை மீதுள்ள கடப்பாடுகளை அது மீறுவதாக அமையும்.

பத்திரிகையாளர்கள் மற்றும் பிற ஊடகப் பணியாளர்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்களைச் செய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான விசாரணைகள் ஏதும் நடந்ததாக இதுநாள்வரை சர்வதேச பொதுமன்னிப்பு சபை அறிந்திருக்கவில்லை. 1990ஆம் ஆண்டு நடந்த கொலைகளுக்குகூட இதே நிலைமைதான். பத்திரிகையாளர்களை இலக்குவைப்பவர்கள், ஏன் கொலைசெய்தவர்கள்கூட ஆண்டுக்கணக்கில் சட்ட நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டவர்களாக இருந்துவருகிறார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது குறித்து சர்வதேச பொதுமன்னிப்பு சபை ஆழ்ந்த கவலைகொண்டுள்ளது.

ஊடகத்துறையினர் துன்புறுத்தப்படுவது, மிரட்டப்படுவது, அளவுக்கதிகமான கட்டுப்பாடுகளுக்கு உள்ளாக்கப்படுவது, தாக்குதலுக்குள்ளாக்கப்படுவது போன்றவற்றை இலங்கை அரசாங்கம் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். அதிலும் குறிப்பாக பத்திரிகையாளர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் பக்கச்சார்பற்ற வகையிலும், பாரபட்சமின்றியும், முறையாகவும் விசாரிக்கப்பட்டு, குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, நீதி கிடைக்க வேண்டும் என்பதை இலங்கை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும்.

இந்த அறிக்கையின் முதல் பகுதி கருத்துச் சுதந்திரம் தொடர்பான சர்வதேச அளவுகோள்களை எடுத்துரைப்பதுடன், இலங்கையில் இது தொடர்பான சட்ட வடிவமைப்பு எவ்வாறு உள்ளது என்பதை விளக்குகிறது. பின்னர் கடந்த இரண்டு ஆண்டுகளில் பத்திரிகையாளர்கள் மற்றும் பிற ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டது மற்றும் அவர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை இந்த அறிக்கை ஆவணப்படுத்துகிறது. நான்கு முறை கோரியிருந்தும், இலங்கை வந்து ஒரு ஆய்வை நடத்த 2007 ஜனவரியிலிருந்து சர்வதேச பொதுமன்னிப்பு சபைக்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை. ஆதலால் வெளிநாட்டிலிருந்தபடியே தொலைபேசி மூலமாகவும் மின் – அஞ்சல் வழியாகவும் இலங்கைக்கு வெளியில் பயணம் மேற்கொண்டிருந்த ஊடகப் பணியாகளிடம் நடத்திய நேர்காணல் மூலமாகவும் கிடைக்கப்பெற்ற இரண்டாம் நிலை ஆதாரங்களைக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. களத்திலிருந்து தகவல்களை சரிவர உறுதிப்படுத்த முடியாமல்போன காரணத்தால் இந்த அறிக்கையின் சில பகுதிகளை எங்களால் முழுமையாக உருவாக்க முடியவில்லை. உதாரணத்திற்கு, விடுதலைப் புலிகளின் துஷ்பிரயோகங்கள் பற்றிய பாகத்தை முழுமையாக உருவாக்குவதில், புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதியில் களத்திலுள்ள சூழலை மதிப்பிடவும், புலிகளின் அத்துமீறல்கள் பற்றிய கவலைகளை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அவர்களின் தலைமைப் பீடத்திடம் நேரடியாக எழுப்ப வேண்டும் என்றும் சர்வதேச பொதுமன்னிப்பு சபை விரும்புகிறது.

அறிக்கையின் இரண்டாவது பகுதியானது இலங்கை இனப்பிரச்சினையின் நேரடிப் பின்னணியைத் தாண்டியும் கருத்துச் சுதந்திரத்தின் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருவதன் சாராம்சத்தைத் தருகிறது. நிறைவாக இந்த அறிக்கை பல பரிந்துரைகளை செய்கிறது. ஐ.சி.சி.பி.ஆர் மற்றும் இதர ஒப்பந்தங்கள் மற்றும் தர அளவுகோள்களின் கீழ் இலங்கைக்குள்ள கடப்பாடுகளை கடைப்பிடிக்கும் விதமாக அரசாங்க அதிகாரிகள் அபிப்பிராயம் மற்றும் கருத்துச் சுதந்திரத்தினை மதிக்கவும் பாதுகாக்கவும் நிறைவேற்றவும் வேண்டும். மேலும், ஊடகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாளர்களுக்கு எதிரான அனைத்து மனித உரிமை மீறல்கள் தொடர்பகவும் உடனடியாக பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ளும் தமது கடப்பாடுகளையும் அதிகாரிகள் நிறைவேற்ற வேண்டுமென சர்வதேச பொதுமன்னிப்பு சபை கோருகிறது. சர்வதேச மனித உரிமை சட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ளதைப் போன்று அசாதரமான சூழ்நிலைகளில் மட்டுமே அவசரகால அதிகாரங்கள் பயன்படுத்தப்பட வேண்டுமென இலங்கையில் அரசியல் சாசன சட்டம் குறிப்பிட வேண்டும். கருத்துச் சுதந்திரத்தை யதேச்சதிகாரத்துடன் கட்டுப்படுத்துவதற்காக 2006 அவசரகால விதிமுறைகள் முறைதவறி பயன்படுத்தப்படுவதை தடுக்கும் விதமாக 'பயங்கரவாதம்' என்ற சொல்லுக்கு அவ்விதிமுறைகளில் உள்ள வரையறை தெளிவுபடுத்தப்பட வேண்டும். இந்த அறிக்கையின் வரைவுப் பிரதி ஒன்றை சர்வதேச பொதுமன்னிப்பு சபை இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பியிருந்தது, ஆனால் 16 ஜனவரி 2008 வரை அரசாங்கத்திடம் இருந்து எவ்வித கருத்தும் வரவில்லை. இந்த அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசுடன் ஆக்கப்பூர்வமான ஒரு கலந்துரையாடலை நடத்த இந்த அமைப்பு ஆர்வமாய் இருக்கிறது.

## 2. பின்னணி

இலங்கையில் பலகாலமாக நீடித்துவரும் இனப்பிரச்சினையானது ஏராளமான மனித உரிமை மீறல்களைக் கண்டுள்ளது. 70,000த்துக்கும் அதிகமானோர்[2] இதில் உயிரிழந்துள்ளனர். கடந்த ஏப்ரல் 2006 முதல் இலங்கை அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் காரணமாக 2,00,000 பேருக்கும் அதிகமானோர் உள்ளாட்டிலேயே இடம்பெயர்ந்து வாழும் நிலைக்கு (IDPs) தள்ளப்பட்டுள்ளனர்[3]. ஆட்கடத்தல்கள் மீண்டும் பரவலாக இடம்பெற

---

[2] இலங்கை இனப்பிரச்சினையின் உந்து சக்திகளும் பரிணாமமும் எளிமையானவை அல்ல. இரண்டு முறை இடதுசாரி சிங்கள இளைஞர்கள் செய்த கிளர்ச்சிகள் இடம்பெற்றுள்ளன (1971; 1988-89), மேலும் இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்களும் பலகாலமாக இழுத்துக்கொண்டு போகிறது. இந்தப் பிரச்சினையின் பல்வேறு பரிமாணங்களை ஆராய்வது இந்த அறிக்கையின் நோக்கமல்ல என்றாலும், ஒரு கொந்தளிப்பான பின்னணியில் பல மனித உரிமை மீறல்கள் நடக்கின்றன என்று விளக்குவதற்காக இது அவசியமாய் இருக்கிறது. இன மோதல்கள் காரணமாக உயிரிழந்தோரின் சரியான கூட்டுத்தொகையை சொல்வது சிரமம் என்றாலும் 1980களின் ஆரம்பம் முதற்கொண்டு பார்க்கையில் குறைந்தபட்சம் 70,000 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கடந்த பல ஆண்டுகளில், பல்லாயிரக்கணக்கானோர் காணாமல்போயுள்ளனர். இதில் சிங்கள இளைஞர்கள் பலரும் அடங்குவர். 1980களின் பிற்பகுதியில் புரட்சிக்கார ஜனதா விமுக்தி பெரமுனவுக்கும் (மக்கள் விடுதலை முன்னணி - JVP) அரசாங்கத்துக்கும் இடையில் நடந்த மோதல்களின்போது இந்த இளைஞர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

[3] 'உள்நாட்டிலேயே புலம்பெயர்ந்து வாழ்வோர் மற்றும் மீளக்குடியேறுவோர் பற்றிய மாவட்டவாரியான விபரங்கள்' 31 அக்டோபர் 2007, மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நா.மன்ற ஒருங்கிணைப்பு அலுவலகம், கொழும்பு. அண்மைய மோதல்களால் உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை இது. நீண்டகாலமாக உள்நாட்டில் புலம்பெயர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்துள்ளது பெரும் கவலை அளிக்கிறது. 2006 முதல் ஆட்கடத்தல் சம்பவங்கள் நூற்றுக்கணக்கில் நடந்திருப்பதை இலங்கை மனித உரிமை ஆணையம் (HRCSL) பதிவுசெய்துள்ளது[4]. அண்மைய மோதலில் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையானோர் நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் அதிகம் வாழுகின்ற சிறுபான்மை தமிழ் சமூகத்தினர் ஆவர்.[5]

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாணும் முயற்சியாய் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் போர்நிறுத்த ஒப்பந்தம் (CFA) ஒன்றை 22 பிப்ரவரி 2002ல் ஏற்படுத்தியிருந்தன. இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு (SLMM) செயலாற்றுவதற்கு அரசாங்கத்திடமிருந்தும் விடுதலைப் புலிகளிடம் இருந்தும் இந்த ஒப்பந்தம் சம்மதம் பெற்றிருந்தது[6]. இந்த ஒப்பந்தத்தை அடுத்து, கணிசமான அளவில் வன்முறை குறைந்திருந்தது. நாட்டின் தென்பகுதியை வடக்குடன் இணைக்கும் முக்கியப் பாதையான A9 நெடுஞ்சாலை மீண்டும் திறக்கப்பட்டது. தனிப்பட்டவர்களும், சமூகக் குழுக்களும் தெற்கிலிருந்து யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருந்த வட பகுதியைச் சென்று பார்க்க அனுமதி கிடைத்தது. 15 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு அரசு தொலைக்காட்சியான ரூபவாஹினி வடக்கில் ஒளிபரப்பை மீண்டும் ஆரம்பித்தது. போர்நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்தும் ஆங்காங்கே மோதல்கள் இடம்பெறவே செய்தன. இருதரப்பினரின் போர்நிறுத்த மீறல் சம்பவங்களை கண்காணிப்புக் குழு

---

வாழ்வோரின் எண்ணிக்கையும் கணிசமானது, 1990 முதல் புத்தலத்தில் இடம்பெயர்ந்து வாழும் முஸ்லிம்கள் இதில் அடங்குவர்.

[4] சர்வதேச பொதுமன்னிப்பு சபை, இலங்கை: ஆட்கடத்தல்களை முடிவுக்கு கொண்டுவருவதற்கான முக்கிய வாய்ப்பு, AI Index: IOR 51/055/2007, 30 ஆகஸ்ட் 2007.

[5] 2007ஆன் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் கொல்லப்பட்ட மக்களில் பெருமளவினர் தமிழர்கள் என்று உள்நாட்டு அமைப்புகளின் குழு ஒன்று கூறுகிறது. கொல்லப்பட்டவர்களில் தமிழர்கள் – 70.7%, சிங்களவர்கள் – 9.1% முஸ்லிம்கள் – 5.9% என்று கூறப்படுகிறது. கொழும்பின், சட்டம் மற்றும் சமூகம் அறக்கட்டளையானது, சிவில் கண்காணிப்பு ஆணையம் மற்றும் சுதந்திர ஊடக இயக்கம் (FMM) உள்ளிட்ட உள்நாட்டு அமைப்புகளுடன் இணைந்து தொகுத்துள்ள ஒரு ஆவணத்தில், 2007 ஜனவரி முதல் ஜூன் வரையில் 547 பேர் கொல்லப்பட்டும் 396 பேர் காணாமல்போயும் இருக்கிறார்கள் என்று பட்டியலிடப்பட்டுள்ளது.

[6] SLMMமின் தலைமையகம் கொழும்பிலும், ஒரு தொடர்பு அலுவலகம் கிளிநொச்சியிலும், மற்ற அலுவலகங்கள் (யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய) ஆறு மாவட்டங்களிலும் அமைந்திருந்தன. மே 2006ல் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் அமைப்பை "பயங்கரவாத" இயக்கங்களின் பட்டியலில் சேர்த்த பின்னர், SLMMமில் இடம்பெற்றிருந்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் வெளியேற வேண்டும் ஏனெனில் அவர்களின் பக்கச்சார்பற்ற தன்மை கேள்விக்குள்ளாக்கப்படும் என்று விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டனர். 1 செப்டம்பர் 2006 முதல் SLMM குறைவான ஆட்களையே பெற்றுள்ளது; ஐஸ்லாந்து, நோர்வே ஆகிய நாடுகளிலிருந்து சுமார் 20 பேர்தான் அதில் இப்போது பங்காற்றுகிறார்கள். ஆனால் ஆரம்பத்தில் இதில் 56 பேர் இருந்தனர். 16 ஜனவரி 2008 அன்றிலிருந்து போர்நிறுத்தம் உத்தியோகபூர்வமாகவே விலக்கிகொள்ளப்பட்டிருப்பதால் SLMM கண்காணிப்பாளர்கள் இனி விலகுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுசெய்திருந்தாலும் குறிப்பாக விடுதலைப் புலிகளின் மீறல்களை குறிப்பாக அது பதிவுசெய்திருதது.[7]

நவம்பர் 2005ல் மஹிந்த ராஜபக்ஷ இலங்கை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்[8]. ஜனாதிபதியின் தேர்தல் பிரச்சாரத்திற்கு சிங்கள தேசியவாதக் கட்சியான ஜே.வி.பி.யும் சில புத்த பிக்குகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தேசியவாதக் கட்சியான ஜாதிக ஹெல உருமயவும் ஆதரவு தந்திருந்தன. விடுதலைப் புலிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற வாக்குறுதிகளின் அடிப்படையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரச்சாரம் செய்திருந்தார்.

2005ன் பிற்பகுதி முதல் இலங்கையில், குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் வன்முறை அதிகரித்துக் காணப்படுகிறது. 2005ன் இறுதியில் இலங்கை பாதுகாப்புப் படைகளை இலக்குவைத்து வடக்கிலும் கிழக்கிலும் விடுதலைப் புலிகள் கிளேமோர் கண்ணிவெடித் தாக்குதல்களை நடத்தினர். 2006 பிப்ரவரியில் அரசாங்கமும் புலிகளும் சந்தித்து போர்நிறுத்த ஒப்பந்தத்தின் அமலாக்கம் பற்றி விவாதித்திருந்தார்கள். ஆனாலும் அந்த ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த இன்னொரு சந்திப்பு இடம்பெறவில்லை. போர்நிறுத்த ஒப்பந்தம் முடிவுக்கு வந்துவிட்டதாக 2006 நடுப்பகுதி வரையில் முறைப்படி எந்தத் தரப்பும் அறிவிக்கவில்லை என்றாலும், யதார்த்தத்தில் அது கைவிடப்பட்டிருந்தது. 16 ஜனவரி 2008 அன்று அது அதிகாரபூர்வமாகவே இடைநிறுத்தப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி ராஜபக்ஷ மூன்று முக்கிய அரசு பதவிகளை தனது சகோதரர்களுக்கு வழங்கியுள்ளார். பாதுகாப்புத் துறையை கோதபய ராஜபக்ஷவின் கீழும், பசில் ராஜபக்ஷவை ஜனாதிபதியின் மூத்த ஆலோசகராகவும்[9], சமல் ராஜபக்ஷவை நீர்ப்பாசனம் மற்றும் நீர் ஆதார நிர்வாக அமைச்சராகவும் நியமித்துள்ளார். இராணுவ செலவினங்களானது 2006ல் ரூ.10,867 கோடியிலிருந்து 2007ல் ரூ.12,900 கோடியாக (US$1.159 billion) கணிசமான அளவில் அதிகரித்துள்ளது.

12 ஏப்ரல் 2006 அன்று விடுதலைப் புலிகள் செய்ததாக குற்றம்சாட்டப்படும் திருகோணமலையில் ஒரு சந்தையில் நடந்த குண்டுவெடிப்பில் ஒரு குழந்தை உள்ளிட்டு ஐந்து பேர் கொல்லப்பட்டனர்.

[7] போர்நிறுத்த காலத்தில் நடந்த பதிவுசெய்யப்பட்ட மீறல்களை SLMM இணையதளமான http://www.slmm.lk// என்ற முகவரியில் பார்க்கலாம். இருந்தாலும் தற்போதைய மீறல் சம்பவங்கள் பற்றிய விபரங்கள் அதில் இல்லை.

[8] ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் (SLFP) தலைவர் மஹிந்த ராஜபக்ஷ. ஏப்ரல் 2004 முதல் ஆட்சியில் இருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (UPFA) என்றழைக்கப்படும் கூட்டணி அரசில் SLFP அங்கம் வகிக்கிறது.

[9] பசில் ராஜபக்ஷ தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தாக்குதலை அடுத்து நடந்த இனக் கலவரத்தில் 20 பேருக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர், சிங்கள சமூகத்தினர் பழிவாங்கும் நோக்கில் நடத்தியதாகத் தோன்றும் தாக்குதல்களில் ஆயிரக்கணக்கானோர் கட்டாயத்தின்பேரில் இடம்பெயர நேர்ந்தது.[10] மோதல்களின் அதிகரிப்பை விளக்கும் ஒரு தருணமாக, 25 ஏப்ரல் 2006 அன்று இலங்கை ராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை இலக்குவைத்து விடுதலைப் புலிகளினால் நடத்தப்பட்டு தோல்வியடைந்த தற்கொலை குண்டுத் தாக்குதல் முயற்சியைச் சொல்லலாம். அந்த படுகொலை முயற்சிக்கு பதிலடியாக இலங்கை அரசாங்கம் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது பெரிய அளவில் வான் மற்றும் பீரங்கித் தாக்குதல்களைத் தொடுத்திருந்தது. பகைமையும் மோதல்களும் மீண்டும் கிளர்ந்தெழ வடக்கிலிருந்து கிழக்கிலிருந்தும் செய்தி வழங்கும் பத்திரிகையாளர்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

அலுவலபூர்வமான மற்றும் அலுவலரீதியில் அல்லாத நடவடிக்கைகள் மூலம் பல வருடங்களாக இலங்கையில் கருத்துச் சுதந்திரத்தின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுவருகின்றன. தேசியப் பாதுகாப்பைக் காரணமாகக் காட்டி, சட்டம் இயற்றியும் அவசரகால விதிமுறைகள் மூலமாகவும், கருத்துச் சுதந்திரத்தின் மீது பெரும் அளவிலும் தெளிவில்லாமலும் கட்டுப்பாடுகளை அரசு இயந்திரம் விதித்துள்ளது. விடுதலைப் புலிகளும் தமது பங்கில், தாம் கட்டுப்படுத்தும் பகுதியில் முழுமையாகவே மாற்றுக் கருத்தை ஒடுக்கிவிட்டிருக்கிறார்கள்.

2007 அக்டோபர் முற்பகுதியில் இலங்கையில் பயணம் மேற்கொண்டு சூழலை அவதானித்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் லூயிர் ஆர்பர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> *"நிறைய எண்ணிக்கையிலான ஆட்கடத்தல்கள், காணாமல்போதல் மற்றும் கொலைச் சம்பவங்கள் பற்றி நம்பத்தகுந்த பொதுத் தகவல்கள் மிகவும் குறைவாக இருப்பதுதான் மிக மோசமான மனித உரிமை பாதிப்புகளாகும்... இச்சம்பவங்கள் ஒழுங்காகப் பதியப்படவில்லை, விசாரிக்கப்படவில்லை, சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை."*[11]

இலங்கையில் மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரும் செய்துள்ள மனித உரிமை மீறல்களின் பெரிய அளவையும் மோசமான

[10] "இலங்கை: வன்முறை அதிகரித்துவரும் நிலையில் மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டுமென சர்வதேச பொதுமன்னிப்பு சபை கோருகிறது", (AI Index: ASA 37/012/2006), 26 ஏப்ரல் 2006, http://web.amnesty.org/libary/Index/ENGASA370122006?open&of=ENG-333.

[11] தனது இலங்கை விஷயத்தின் நிறைவில் மனித உரிமைகள் உயர் ஆணையர் ஊடகங்களுக்கு வழங்கிய அறிக்கை, 13 அக்டோபர் 2007, http://www.unhchr.ch/huricane/huricane.nsf/view01/2C07EE5600DE5B19C12573750034C474?opendocument.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையையும் கருத்தில் கொண்டு பார்க்கையில், அங்கு கருத்துச் சுதந்திரம் பேணப்படுவது மிக அவசியம் ஆகிறது. அப்போதுதான் மக்களுக்கு நம்பத்தகுந்த தகவல்கள் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. கருத்துச் சுதந்திரம்: சர்வதேச தர அளவுகோள்கள்

மனித உரிமைகளுக்கான உலகப் பிரகடனத்தின் 19ஆம் ஷரத்து கருத்துச் சுதந்திர உரிமையை பின்வருமாறு விவரிக்கிறது:

> *"அபிப்பிராயம் மற்றும் கருத்துச் சுதந்திரம் எல்லோருக்கும் உண்டு; குறுக்கீடு இன்றி அபிப்பிராயம் கொள்ளும் உரிமை இதில் அடங்கும். குறுக்கீடு இன்றி தகவல் தேடும், பெறும், வழங்கும் உரிமை இதில் அடங்கும். மேலும் எந்த ஊடகம் வழியாகவும் எல்லைகளுக்கு அப்பாற்பட்டும் சிந்தனைப் பரிமாற்றம் செய்துகொள்ளும் உரிமையும் இதில் அடங்கும்"*

அதேபோல ICCPR ஒப்பந்தத்தின் 19ஆம் ஷரத்து, அபிப்பிராய சுதந்திர உரிமையை பின்வருமாறு விவரிக்கிறது:

> *"1. குறுக்கீடு இன்றி அபிப்பிராயம் வைத்துக்கொள்ளும் உரிமை எல்லோருக்கும் உண்டு.*
>
> *2. கருத்துச் சுதந்திரம் எல்லோருக்கும் உண்டு; குறுக்கீடு இன்றி தகவல் தேடும், பெறும், வழங்கும் உரிமை இதில் அடங்கும். மேலும் எல்லைகளுக்கு அப்பாற்பட்டு சிந்தனைப் பரிமாற்றம் செய்துகொள்ளும் உரிமையும் இதில் அடங்கும். வாய் வழியாகவோ, எழுத்து வடிவிலோ, அச்சிலோ, கலை வடிவிலோ அல்லது தன் விருப்பத்திற்கேற்ப வேறு ஒரு ஊடகம் வழியாகவோ கருத்துப் பரிமாற்றம் செய்யும் உரிமையும் இதில் அடங்கும்.*
>
> *3. இந்த ஷரத்தில் 2ஆம் பத்தியில் விளக்கப்பட்டுள்ள உரிமையை நடைமுறைப்படுத்துவதில் சில விசேட கடமைகளும் பொறுப்புகளும் அடங்கியுள்ளன. ஆதலால் இந்த உரிமை மீது குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம். ஆனால் பின்வரும் காரணங்களை முன்னிட்டு சட்டம் பரிந்துரைக்கும் கட்டுப்பாடுகளை தேவையான அளவில் மட்டுமே விதிக்க வேண்டும்.*
>
> *(a) மற்றவர்களின் உரிமைகளையும் நற்பெயரையும் மதித்துப் பேணுதல்;*
>
> *(b) தேசிய பாதுகாப்பையும், சட்ட ஒழுங்கையும், பொதுமக்களின் சுகாதாரம் மற்றும் நன்னடத்தையையும் பேணுதல்*

### *3.1 கருத்துச் சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள்*

கருத்துச் சுதந்திர உரிமை மீது கட்டுப்பாடுகள் விதிப்பதற்கு அரசாங்கத்துக்கு இருக்கும் உரிமையை 19ஆம் ஷரத்து தெளிவாக எடுத்துரைக்கிறது. விதிக்கப்படும் கட்டுப்பாடு பின்வரும் 3 நிபந்தனைகளில் அனைத்தையும் நிறைவுசெய்ய வேண்டும்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சட்டம் மூலமாகத்தான் கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டும். சட்டம் எல்லோராலும் அணுகக்கூடியதாக இருக்க வேண்டும், குடிமக்கள் தமது நடத்தையை சரிசெய்துகொள்ள இடமிருக்கும் வகையில் இந்தக் கட்டுப்பாடு போதிய அளவு துல்லியமாக வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது இதன் அர்த்தம்.
- ஷரத்து 19(3)ல் விளக்கப்பட்டுள்ள நியாயபூர்வமான நோக்கங்களில் ஒன்றுக்காகத்தான் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும்.
- அந்த நோக்கத்தை அடைவதற்கு இந்தக் கட்டுப்பாடுகள் அவசியம் என்ற நிலையிருக்க வேண்டும். கட்டுப்பாடுகள் பொறுத்தமான அளவுடையதாக இருத்தல் வேண்டும். நோக்கத்தை எட்டுவதற்குத் தேவையான அளவைக்காட்டிலும் கூடுதலான அளவில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படக்கூடாது.

"கருத்துச் சுதந்திரத்தின் மீது அரசு தரப்பு சில கட்டுப்பாடுகளை விதிக்கும்போது, அது கருத்துச் சுதந்திரத்திற்கே குந்தகம் விளைவித்துவிடக்கூடாது" என்று ஐ.நா.மன்ற மனித உரிமைகள் குழு வலியுறுத்தியுள்ளது.[12] வேறு வகையில் சொல்லப்போனால், அரசாங்கத்துக்கு சங்கடம் ஏற்படும், அதற்கு அரசியல் ரீதியில் பாதிப்பு ஏற்படும் அல்லது அதற்கு அவப்பெயர் வரும் போன்ற காரணங்களுக்காக மட்டும் தனிப்பட்டோரும் ஊடகங்களும் அபிப்பிராயம் வெளியிடுவதை அல்லது தகவல் வழங்குவதை தவிர்க்கும் வகையில் கட்டுப்பாடுகள் இருக்கக்கூடாது. பெரிய அளவில் தெளிவற்ற கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு தேசிய பாதுகாப்பை நியாயமான காரணமாகக் காட்ட இயலாது. ஆதலால் யுத்த காலகட்டத்தில், பாதுகாப்பு சம்பந்தப்பட்ட தகவல்களுக்கு அரசாங்கம் ஒட்டுமொத்தத் தடை விதிக்க முடியாது.

நெருக்கடி நேரங்களில் பொது நன்மையைக் கருதி உரிமைகளைப் பேணும் பாதையிலிருந்து அரசாங்கங்கள் வழுவும் அவசியம் ஏற்படலாம் என்பதை சர்வதேச மனித உரிமை சட்டங்கள் ஏற்றுக்கொள்கின்றன. அப்படி ஏற்றுக்கொள்வதால்தான் ICCPR ஒப்பந்தத்தின் 4ஆம் ஷரத்து அவசரகால வழுவல்கள் பற்றிப் ஏசுகிறது. இருந்தபோதும், வரையறுக்கப்பட்ட அளவுகோள்களுக்கு உட்பட்டுத்தான் கட்டுப்பாடுகள் இருக்கவேண்டும். 4ஆம் ஷரத்தானது, அவசரகால கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவது குறித்த கொள்கை விஷயங்களிலும் நடைமுறை விஷயஙளிலும் பல்வேறு நிபந்தனைகளை முன்வைக்கிறது.

தேவையான அளவுக்கு மட்டும்தான் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டுமென்றும் பாரபட்சமான அடிப்படையில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படக் கூடாதென்றும் ICCPR ஒப்பந்தத்தின் 4ஆம் ஷரத்து தெளிவாக

[12] மனித உரிமைகள் குழு, பொதுக் கருத்து எண் 10: கருத்துச் சுதந்திரம் (19ஆம் ஷரத்து), 29 ஜூன் 1983, 4ஆம் பத்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துரைக்கிறது. மேலும், உயிர் வாழும் உரிமை, சித்ரவதை, அடிமை வாழ்க்கை இல்லாதிருத்தல், செய்யும் தருணத்தில் குற்றமாய் இருந்திராத ஒரு செயலுக்காக வழக்கை எதிர்கொள்ளாதிருத்தல் மற்றும் தண்டிக்கப்படாதிருத்தல், சட்டத்தின் முன் ஒரு மனிதராய் அங்கீகரிக்கப்படுதல், சிந்தனை, மனசாட்சி மற்றும் மத சுதந்திரம் போன்ற அடிப்படை உரிமைகளில் இருந்து வழுவவே கூடாது என்றும் 4ஆம் ஷரத்து தெளிவுபடுத்துகிறது.

தேசிய பாதுகாப்புக் காரணங்களுக்காக தகவலை வெளியிடாமல் வைத்திருப்பது குறித்து தற்போது நடைமுறையில் உள்ள அளவுகோள்களை *ஜோஹன்னஸ்பர்க் கொள்கைகள்*[13] கோடிட்டுக் காட்டுகின்றன. கொள்கை எண் 12 பின்வருமாறு கூறுகிறது:

> *"தேசிய பாதுகாப்பு தொடர்பான அனைத்து விஷயங்களையும் பெறவே முடியாது என அரசாங்கம் திட்டவட்டமாகத் தடைவிதிக்கக்கூடாது. நியாயமாகவே தேசிய நலனுக்குத் தேவை என்ற அளவில் சிறு வகையிலான தகவல்களை மட்டும்தான் பெற முடியாது என்கிற வகையில் சட்டங்களைக் கொண்டு அது வடிவமைக்க வேண்டும்."*

அரசாங்கம், நாட்டின் நியாயமான நலன்களைப் பேணுவதற்காக, மேற்சொன்ன கொள்கையின் அடிப்படையில் மட்டும்தான் கருத்துச் சுதந்திரத்தின் மீது கட்டுப்பாடுகளை விதிக்கலாம். தெளிவின்றியோ, பரந்துபட்ட வரையறையுடனோ ஆன கட்டுப்பாடுகள், "சட்டத்தால் விதிக்கப்படுகின்ற" விதிமுறைகளாக இருந்தாலும், பொதுவாக அவற்றை ஏற்றுக்கொள்ள இயலாது, ஏனென்றால் அரசின் நியாயமான நலன்களுக்கு தேவையான அளவில் மட்டும் என்பதை அக்கட்டுப்பாடுகள் மீறிவிடுகின்றன. நியாயமான நலன்களுக்கு அவசியம் என்ற அளவைத் தாண்டியதாக அர்த்தம் காண இடமளிக்கும் அவசரகால சட்டங்களின் தெளிவற்ற பிரிவுகள் குறித்து சர்வதேச பொதுமன்னிப்பு சபை தொடர்ந்து கவலை வெளியிட்டுவந்துள்ளது.

"ஊடகப் பணியாளர்களும் பத்திரிகையாளர்களும் துன்புறுத்தலை எதிர்கொள்கிறார்கள் என்று தொடர்ந்து செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன, கருத்துச் சுதந்திர உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளில் பெரும்பான்மையானவை இலங்கை அதிகாரிகளால் அலட்சியம்

---

[13] தேசிய பாதுகாப்பு, கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல் பெறுவதில் சுதந்திரம் குறித்த ஜோஹன்னஸ்பர்க் கொள்கைகளை, 1 அக்டோபர்1995 அன்று தென்னாப்பிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்க்கில் சர்வதேச சட்டம், தேசிய பாதுகாப்பு மற்றும் மனித உரிமை நிபுணர்கள் குழு ஒன்று கூடி 19ஆம் ஷரத்தின் கீழ் உருவாக்கியிருந்தன. தகவல் தணிக்கைக்கு எதிரான சர்வதேச மையம், விட்வாட்டஸ்ராண்ட் பல்கலைக்கழகத்தின் நடைமுறைச் சட்டங்களுக்கான மையத்தின் ஆதரவுடன் இந்தக் கூட்டத்தை நடத்தியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படவோ நிராகரிக்கப்படவோ செய்கின்றன" என்று 2003ல் மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை வெளியிட்டுள்ளது

*"பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் எவ்விதத்திலும் துன்புறுத்தப்படுவதை தவிர்ப்பதற்கு அரசு தரப்பு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட சம்பவங்கள் உடனுக்குடன் முழுமையாகவும் பக்கச்சார்பின்றியும் விசாரிக்கப்பட்டு குற்றமிழைத்தவர்கள் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாவதை அவர்கள் உறுதிசெய்ய வேண்டும்."*[14]

இலங்கையில் மேற்சொன்னதுபோன்ற நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை, மேலும் மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு தனது முடிவையும் பரிந்துரைகளையும் வழங்கி நான்கு ஆண்டுகள் ஆன நிலையில், சூழல் மேலும் மோசமடையவே செய்திருக்கிறது என்று சர்வதேச பொதுமன்னிப்பு சபை கவலைகொண்டுள்ளது.

### 3.2 கருத்துச் சுதந்திரம் தொடர்பான இலங்கையின் சட்ட வடிவமைப்பு

இலங்கையின் அரசியல் சாசனம் கருத்து சுதந்திரத்திற்கு இடமளிக்கிறது. அதன் 14(1)(a) ஷரத்து பின்வருமாறு கூறுகிறது:

*"பேச்சுரிமை மற்றும் பிரசுர உரிமை உள்ளிட்ட கருத்து சுதந்திரம் அனைத்து குடிமக்களுக்கும் உண்டு"*

ஷரத்து 14(1)(a)வில் விளக்கப்படும் கருத்து சுதந்திரம் மற்றும் பிற "அடிப்படை உரிமைகள்" மீது பல்வேறு வகையில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதற்கு ஷரத்து 15 வழிசெய்கிறது. அடிப்படை உரிமைகள் பின்வரும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது என ஷரத்து 15(2) கூறுகிறது:

*"... இன மற்றும் மத நல்லிணக்கத்தைக் கருதியும், நாடாளுமன்ற சிறப்புரிமை தொடர்பாகவும், நீதிமன்ற அவமதிப்பு, அவப்பெயர் கற்பித்தல், குற்றத்தைத் தூண்டிவிடுதல் தொடர்பாகவும் சட்டங்கள் மூலம் இயற்றப்படும் கட்டுப்பாடுகளுக்கு அடிப்படை உரிமைகள் உட்பட்டாகவேண்டும்."*

*மேலும் 15(7) பின்வருமாறு கூறுகிறது:*

*"தேசிய பாதுகாப்பு, சட்ட ஒழுங்கு, பொதுமக்கள் சுகாதாரம் மற்றும் நன்னடத்தை ஆகியவற்றைப் பேணுவதற்காகவும், அல்லது*

---

[14] இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு அவதானித்து வெளியிட்ட கருத்துகள், UN Doc. CCPR/CO/79/LKA, 1 டிசம்பர் 2003, 18ஆம் பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மற்றவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை அங்கீகரித்து மதித்து நடப்பதற்காகவும், அல்லது ஜனநாயகமான ஒரு சமூகத்தின் பொதுவான நலன்களைக் காப்பதற்கான நியாயமான தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காகவும் சட்டம் மூலம் இயற்றப்படும் கட்டுப்பாடுகளுக்கு அடிப்படை உரிமைகள் உட்பட்டாகவேண்டும். இந்தப் பத்தியைப் பொருத்தமட்டில் "சட்டம்" என்பதில் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி அவ்வப்போது சட்டத்தின் அடிப்படையில் இயற்றப்படும் விதிமுறைகளும் அடங்கும்."*

இலங்கையின் மேற்சொன்ன சட்ட வடிவமைப்பானது சட்டங்கள் மூலமாகவும் அல்லது "பொதுமக்களின் பாதுகாப்பு கருதி அவ்வப்போது சட்டத்தின் அடிப்படையில் இயற்றப்படும் விதிமுறைகள்" மூலமாகவும் கட்டுப்பாடுகளை விதிக்க அரசாங்கத்துக்கு பாரிய அதிகாரங்களை வழங்குகிறது. இதனைப் பயன்படுத்தி தேசியப் பாதுகாப்பு என்ற காரணம் காட்டி ஊடகங்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகளை இனப்பிரச்சினைக் காலம் முழுக்கவுமே அரசாங்கம் மீண்டும் மீண்டும் ஏற்படுத்திவருகிறது.

### 3.3 அவசரகால விதிமுறைகள் (ERs)

கடந்த இருபத்தைந்து ஆண்டுகாலமாக நீடித்துவரும் இலங்கையின் ஆயுதமேந்திய உள்நாட்டுப் போரின் பெரும்பான்மையான காலகட்டங்களில் பல்வேறு அவசரகால சட்டங்கள் அமலில் இருந்துள்ளன. அரசியல் சாசன சட்டம் 155ஆம் ஷரத்தின் கீழ், "அரசியல் சாசன சட்டத்தைத் தவிர்த்து அமலில் உள்ள ஏனைய சட்டங்களின் நடைமுறையை மாற்றியமைக்கக்கூடிய அல்லது இடைநிறுத்தக்கூடிய" அவசரகால விதிமுறைகளை இயற்றும் அதிகாரம் நாட்டின் ஜனாதிபதிக்கு உண்டு. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அதிகாரிகள் ஆரம்பத்தில் நடைமுறைப்படுத்தியிருந்த 1947ஆம் ஆண்டின் 25ஆம் பாதுகாப்பு அவசரச் சட்டத்தை (PSO)[15] இலங்கை சட்டங்களின் ஓர் அங்கம் என்றும் அரசியல் சாசன சட்டம் 155ஆம் ஷரத்து ஆக்கியுள்ளது. அவசர சட்டத்தின் 5ஆம் பிரிவானது நிறைவேற்று அதிகாரிகளுக்கு, வேறுபல அதிகாரங்களுடன், பின்வரும் அதிகாரங்களுடன் கூடிய அவசரகால விதிமுறைகளை இயற்றி நடைமுறைப்படுத்தவும் அதிகாரம் வழங்குகிறது.

- நீதிமன்ற குற்றப் பத்திரிகை இல்லாமலோ வழக்கு விசாரணை நடத்தப்படாமலோ ஒருவரைத் தடுத்துவைத்தல்;[16]
- ஒரு இடத்திற்குள் நுழைந்து, தேடி, பொருட்களைக் கைப்பற்றுதல்
- (அரசியல் சாசனம் தவிர்த்து) ஏனைய சட்டங்களை மாற்றியமைத்தல் அல்லது அதன் நடைமுறையை இடைநிறுத்துதல்;

[15] பாதுகாப்பு அவசரச் சட்டம் 1947 எண் 25 (PSO 16 ஜூன் 1947.

[16] PSO சட்டம் 18ஆம் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அவசரகால விதிமுறைகளின் அடிப்படையில் மற்றும் பிற சட்டங்களின் அடிப்படையில் குற்றவாளிகளாய் இருப்போர் மீது சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்து சட்ட நடவடிக்கை எடுப்பது.

"இதய சுத்தியுடன் கடமை நிமித்தம்" செயல்படும் செயல்படும் அதிகாரிகளுக்கு குற்றவியல் மற்றும் சிவில் நடவடிக்கைகளிலிருந்து விலக்களிக்கும் அதிகாரமும் நிறைவேற்று அதிகாரிகளுக்கு உண்டு.[17]

அவசரகால விதிமுறைகள் போர்நிறுத்தத்தின் சமயத்தில் காலாவதியாகியிருந்தன என்றாலும் வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஷ்மண் கதிர்காமர்[18] படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் 13 ஆகஸ்ட் 2005 அன்று அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அவை மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. அதன் பின்னர் ஒவ்வொரு மாதம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்துவதன் மூலம் அவசரகால விதிமுறைகள் புதுப்பிக்கப்பட்டு அதுமுதல் தொடர்ந்தும் அமலில் இருந்துவருகின்றன.

2005 விதிமுறைகளானது மேற்சொன்னதுபோல PSO அவசர சட்டத்தின் அடிப்படையில் கிடைக்கப்பெறும் அவசரகால அதிகாரங்களை முழுமையாக அமலுக்குக் கொண்டுவந்தது. இந்த விதிமுறைகளின்கீழ் தமிழர்கள் பலர் சுற்றிவளைத்து தேடும் நடவடிக்கைகளின்போது கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. டிசம்பர் 2005ல் நடந்த "ஸ்டிரேஞ்சர்ஸ் நைட் இரண்டு" என்ற தேடுதல் நடவடிக்கையின்போது 1000 பேர் கைதுசெய்யப்பட்டிருந்தார்கள்.[19] 2005 அவசர நடவடிக்கையின் 20ஆம் பிரிவானது, பாதுகாப்பு படைகளைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர், அவர் எந்த மட்டத்தைச் சேர்ந்தவரென்றாலும் அவர் சந்தேகநபர்களைக் கைதுசெய்ய அதிகாரம் வழங்குகிறது. மேலும் நிறைவேற்று அதிகாரிகள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாமலும் வழக்கு நடத்தாமலும் 18 மாதங்கள் வரையில் ஆட்களை தடுத்துவைக்க அதிகாரம் வழங்கும் பயங்கரவாதத் தவிர்ப்புச் சட்டத்தின் (PTA) பிரிவு 9(1)ஐப் அரசாங்கம் பெருமளவில் பயன்படுத்துவதாக சர்வதேச பொதுமன்னிப்பு சபை கவலைகொண்டுள்ளது. PTA சட்டத்தைப் பயன்படுத்துவதை நிறுத்திவைப்பது என்று போர்நிறுத்த உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், பல சந்தர்ப்பங்களில் ஊடகப் பணியாளர்களைத் தடுத்துவைக்க PTA சட்டம் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

[17] 9 மற்றும் 23ஆம் பிரிவுகள்

[18] அவசரகால விதிமுறைகள் (இதியாதி விதிமுறைகள் மற்றும் அதிகாரங்கள்) 2005 எண் 1, அசாதாரண வர்த்தமானி அறிவித்தல் எண் 1405/14ல் 13 ஆகஸ்ட் 2005 அன்று பிரசுரிக்கப்பட்டது.

[19] பிபிசி செய்தி 'இலங்கையில் நூற்றுக்கணக்கானோர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்", 31 டிசம்பர் 2005, http://news.bbc.co.uk/1/hi/world/south_asia/4571270.stm



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரகால விதிமுறையின் கீழ் ஆட்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள இடத்தினை அதிகாரிகள் வெளியிட வேண்டும் என்ற அவசியம் இல்லை, ஆனால் கைதுசெய்யப்பட்ட நபர் "தமது ஒரு உறவினர் அல்லது ஒரு நண்பரைத் தொடர்புகொண்டு, தான் வைக்கப்பட்டிருக்கும் இடத்தின் விபரத்தை குடும்பத்தினரிடம் தெரியப்படுத்த நியாயமான வழி ஏற்படுத்தித் தரவேண்டும் என்று ஜூலை 2006ல் வழங்கப்பட்ட ஜனாதிபதியின் வழிகாட்டு உத்தரவுகள் கூறுகின்றன. ஒவ்வொரு கைது சம்பவத்தின்போதும் கைது நடவடிக்கையின் விபரங்களையும், நபர் தடுத்துவைக்கப்பட்ட இடத்தினையும் இலங்கை மனித உரிமை ஆணையத்திடம் 48 மணி நேரத்திற்குள் தெரிவிக்க வேண்டும், கைதிகளை ஆணைய உறுப்பினர்கள் வந்து சந்திக்க வழியிருக்க வேண்டும்.[20] இலங்கை அரசுக்கு ஆலோசனை வழங்கிவந்த மனித உரிமை விவகார நிபுணர் குழு அக்டோடர் 2007ல் ராஜினாமா செய்திருந்தது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் "குறைந்தபட்ச நடவடிக்கைகளைக்கூட" அதிகாரிகள் எடுக்கத் தவறுவதாகவும், யதேச்சதிகார கைது நடவடிக்கைகள் இடம்பெறாமல் இருக்க வழிசெய்யும் 2006 ஜூலை மாதத்தின் ஜனாதிபதி வழிகாட்டு உத்தரவுகளை இலங்கை பொலிசார் கடைப்பிடிக்கத் தவறுகிறார்கள் என்றும் அக்குழு தெரிவித்திருந்தது.[21]

அந்த மனித உரிமை ஆலோசனைக் குழுவில் இடம்பெற்றிருந்த டாக்டர்.ரோஹன் எதிரிசிங்க பின்வருமாறு கருத்து வெளியிட்டிருந்தார்:

> *"எங்களால் எதுவுமே செய்யமுடியவில்லை..... இந்தக் குழுவில் நாங்கள் ஒன்றரை ஆண்டு காலம் பணியாற்றியிருந்தோம், ஆனால் அந்தக் காலகட்டத்தில் நாட்டின் மனித உரிமைகள் சூழல் மேலும் மோசமாகிக்கொண்டுதான் போனது."*[22]

நிறைவேற்று அதிகாரிகளுக்கு அளவுக்கதிகமான அதிகாரங்களை வழங்கும் அவசரச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கம் PSO அவசர சட்டத்தை கடந்த பல ஆண்டுகளாக அடுத்தடுத்து வரும் இலங்கை அரசாங்கள் பயன்படுத்திவந்துள்ளதாக சர்வதேச பொதுமன்னிப்பு சபை கவலைகொண்டுள்ளது. தேசிய பாதுகாப்பின் பெயரால் தமது மனித உரிமைக் கடப்பாடுகளை கைவிடக்கூடாது என்று உலகின் பல்வேறு அரசாங்கங்களையும் இந்த அமைப்பு மீண்டும் மீண்டும்

---

[20] ஜனாதிபதியால் இந்த வழிகாட்டு உத்தரவுகள் வழங்கப்பட்டிருந்தன, 5 ஜூலை 2006, http://www.peaceinsrilanka.org/peace2005/Insidepage/PressRelease/GOSLreleases/MediaRel050706.asp, முறையே பிரிவுகள் 3(4), 6(ii) மற்றும் 6(i)

[21] "அதிபரின் உத்தரவை பொலிசார் மீறுகின்றனர்" http://www.bbc.co.uk/sinhala/news/story/2007/10/071012_panel_resignation.shtml

[22] மனித உரிமைகள் நிபுணர்கள் குழுவில், சுனில அபயசேகர, டாக்டர்.ரோஹன் எதிரிசிங்க, நிமல்க பெர்னாண்டோ மற்றும் பாக்கியசோதி சரவணமுத்து ஆகியோர் அடங்குவர். "இலங்கை மனித உரிமை ஆலோசகர்கள் எதிர்ப்பு தெரிவித்து விலகினர்" என்ற செய்தியைப் பார்க்கவும். http://uk.reuters.com/article/homepageCrisis/idUKCOL192494._CH_.242020071015.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரிவந்துள்ளது. யாரும் யதேச்சதிகாரமாகக் தடுத்துவைக்கப்படக்கூடாது; பொதுவான நீதிமன்றங்களில் சர்வதேச தரத்தில் நியாயமான முறையில் சந்தேகநபர்கள் விசாரிக்கப்பட வேண்டும்; இந்த உரிமைகளை எல்லா நேரத்திலும் மதிக்கவும் பாதுகாக்கவும் வேண்டுமென்று நாங்கள் கோரிவருகிறோம். மனித உரிமை மீறல்களை இழைத்ததாக சந்தேகிக்கப்படுபவர்கள் நியாயமான வழிமுறைகளில் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தபட வேண்டும், இல்லாவிட்டால் கூடுதலான மனித உரிமை மீறல்களிலிருந்து பாதுகாப்பு அளிப்பதென்பது கடுமையாக பலவீனமடையும்; மேலும் பாதிப்புகளை சரிசெய்துகொள்வதில் குற்றமிழைக்கப்பட்டவர்களுக்கு வழியிருக்காது.

இந்த சட்டத்தின் இயல்பை கருத்தில்கொண்டுப் பார்க்கையில், அவசரகால விதிமுறைகளின் மூலம் கிடைக்கின்ற பெரும் அதிகாரங்களினால் பொதுவாக மக்களுக்கு ஏற்படும் தயக்கத்தைப் பயன்படுத்தி அவர்களை பாதுகாப்புப் படையினர் அச்சுறுத்துகிறார்கள் என்பதில் ஐயமில்லை. உதாரணமாக 2 டிசம்பர் 2007 அன்று கொழும்பில் பெருமளவில் தமிழர்கள் கைதுசெய்யப்பட்ட சம்பவம் போன்றவை தொடர்பாக சர்வதேச பொதுமன்னிப்பு சபை கவலை எழுப்பியுள்ளது.[23]

### *3.4 அவசரகால விதிமுறை (பயங்கரவாதம் மற்றும் குறிப்பிட்ட பயங்கரவாதச் செயல்களைத் தவிர்ப்பதும் தடுப்பதும்) 2006 எண் 7*

அவசரகால விதிமுறைகள் 2005க்கும் கூடுதலாக, நடைமுறையிலுள்ள அவசரகால விதிமுறைகள் மீது டிசம்பர் 2006ல் ஒரு தொகுதி மாற்றங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமல் செய்திருந்தார். பாதுகாப்பு செயலர் கோதபய ராஜபக்ஷ மீது நடத்தப்பட்ட ஒரு படுகொலை முயற்சிக்கு பின்னர் இந்த கூடுதல் விதிமுறைகள் கொண்டுவரப்பட்டிருந்தன.

பரந்துபட்ட அடிப்படை கொண்ட மற்றும் தெளிவில்லாமல் வரையறுக்கப்பட்ட பயங்கரவாத குற்றச்செயல்களை 2006ஆம் ஆண்டின் அவசரகால விதிமுறைகள் அறிமுகப்படுத்தியுள்ளதாக சர்வதேச பொதுமன்னிப்பு சபை கவலைகொண்டுள்ளது. விமர்சனக் கருத்துகளை வெளியிடும் ஊடகங்களின் குரலை ஒடுக்கவும், இலங்கையில் பொதுவாக கருத்துச் சுதந்திரத்தை மீறவும் இந்த விதிமுறைகள் பயன்படுத்தப்படுவதாக நாங்கள் கவலைகொண்டுள்ளோம்.

உதாரணத்திற்கு 6ஆம் விதிமுறையானது பயங்கரவாதம் மற்றும் குறிப்பிட்ட பயங்கரவாதச் செயல்களை மட்டும் கிரிமினல் குற்றங்களாக

[23] "இலங்கை: பெருந்திரளானோர் கைதுசெய்யப்படுவதை சர்வதேச பொதுமன்னிப்பு சபை கண்டிக்கிறது", 4 டிசம்பர் 2007, http://www.amnesty.org/en/for-media/press-releases/sri-lanka-amnesty-international-condemns-mass-arrests-20071204



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிப்பதோடு மட்டுமல்லாமல் "ஒரு நபரோ அல்லது ஒரு குழுவோ, பல குழுக்களோ செய்யும் பயங்கரவாதம் அல்லது குறிப்பிட்ட பயங்கரவாதச் செயலை முன்னெடுக்கும் வகையிலான எந்த ஒரு காரியத்தையும்" கிரிமினல் குற்றமாக அறிவிக்கிறது. 7ஆம் விதிமுறை வேறுபல விஷயங்களுடன் பின்வருமாறும் கூறுகிறது:

> *"இந்த விதிமுறைகளின் 6ஆம் விதியை மீறும் வகையில் ஒரு தனி நபரோ, ஒரு குழுவோ, பல குழுக்களோ, அல்லது ஒரு அமைப்போ மேற்கொள்ளும் செயலை யாரும் முன்னெடுக்கவோ, ஊக்கமளிக்கவோ, ஆதரவு வழங்கவோ, உதவி வழங்கவோ, பிறர் சார்பாக செயல்படவோ அல்லது ஏற்பாடுசெய்யவோ அல்லது பங்குபெறவோ கூடாது"*

"6ஆம் மற்றும் 7ஆம் விதிமுறைகளை" ஒரு தனிநபர் அல்லது ஒரு குழு ஈடுபடும் "ஒரு பரிமாற்றம் எந்த வகையிலாவது மீறுகிறது" என்றால் அப்பரிமாற்றங்களும் குற்றச்செயல்கள் என 8ஆம் பிரிவு கூறுகிறது. இந்த விளக்கங்கள் தெளிவற்ற வாசகங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன; ஆதலால் இவற்றை வெவ்வேறு வகையில் அர்த்தப்படுத்துவதன் மூலமாக பரந்துபட்ட செயல்களை கிரிமினல் குற்றங்களாக்கலாம்; ஊடகத்துறையினர் மேற்கொள்ளும் விசாரணைகள் மற்றும் செய்தி வழங்கலையும் இதன் மூலம் குற்றச்செயல்களாக்க முடியும். உதாரணமாக "முன்னெடுத்துச் செல்லும்"; "உதவும்" "பரிமாற்றங்கள்" என்று குறிப்பிடும்போது, அவை அறிந்து செய்யப்படுகின்ற அல்லது நோக்கத்துடன் செய்யப்படுகின்ற பரிமாற்றமாக இருக்க வேண்டும் என்பதை இந்த விதிமுறைகள் தெளிவுபடுத்திக் கூறவில்லை. ஆகவே ஒருவர் தான் ஈடுபடும் காரியம் சட்டபூர்வமானதுதான் என்று நியாயப்படி நம்பிக்கொண்டிருந்தாலும்கூட, அந்த செயல்களுக்காக அவர் "பயங்கவாதம்" சம்பந்தப்பட்ட குற்றங்களுக்காக சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வாய்ப்பு உள்ளது. உதாரணமாக தகவல் பெறுவது மற்றும் வழங்குவதற்காகக்கூட அவர் அவர் "பயங்கவாதம்" சம்பந்தப்பட்ட குற்றங்களுக்காக சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படலாம்.

2006 அவசரகால விதிமுறைகள் ஊடகங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. பயங்கரவாதம் என்ற பதத்திற்கு பரந்துபட்ட வரையறை இருப்பதால் தாங்களாகவே தணிக்கை செய்து செய்திகளை வெளியிடுவதாக பத்திரிகையாளர்கள் கவலை எழுப்புகின்றனர். உதாரணமாக, 2007 ஆரம்பத்தில் யங் ஏசியா தொலைக்காட்சியின் கட்டிடங்களுக்குள் 2006 அவசரகால விதிமுறைகளின் அடிப்படையில் தேடுதல் நடத்தப்பட்டதுடன் பத்திரிகையாளர்களை பாதுகாப்புப் படையினர் விசாரித்துள்ளனர். தேசிய பாதுகாப்புக் காரணங்களுக்காக அவசரகால விதிமுறைகளின்கீழ் செயல்படுவதாகக் கூறிக்கொண்டு சிலவேளைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பத்திரிகையாளர்களுடைய குடும்ப உறுப்பினர்களின் வீடுகளிலும் அவர்கள் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.[24]

[24] கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் லண்டனிலுள்ள உள்துறை அமைச்சகத்துக்கு எழுதிய ஒரு கடிதத்தில் இதற்கான உதாரணங்கள் வழங்கப்பட்டிருந்தன, வெளியுறவு மற்றும் பொதுநலவாய அலுவலகம்/ பிரிட்டிஷ் தூதரகத்திலிருந்து வரும் தகவல் என்பதைக் காண்க, கொழும்பு, 10 ஏப்ரல் 2007 தேதியிட்ட கடிதம், சம்பந்தப்பட்ட நாட்டிலிருந்து கிடைக்கும் விபரங்கள் என்ற தலைப்பில் உள்துறை அமைச்சகம் வைத்திருக்கும் தகவல்கள், http://www.homeoffice.gov.uk/rds/pdfs06/sri_lanka_021106.doc.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. இலங்கை இனப்பிரச்சினையின் பின்னணியில் பத்திரிகையாளர்கள் மற்றும் பிற ஊடகப் பணியாளர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள்.

### *4.1 பத்திரிகையாளர்கள் மற்றும் பிற ஊடகப் பணியாளர்கள் சட்டவிரோதமாகக் கொலைசெய்யப்பட்ட சம்பவங்கள்*

2006ஆம் ஆண்டின் துவக்கத்திலிருந்து ஊடகத்துறை ஊழியர்கள் 10 பேர் கொலைசெய்யப்பட்டுள்ளனர்; அவர்களில் பெரும்பான்மையானோர் தமிழ் ஊடகச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இனப்பிரச்சினையின் பின்னணியில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் பற்றி செய்தி வழங்கும் முன்னணியில் உள்ள பத்திரிகையாளர்கள் அனைவருக்குமே தங்களது பாதுகாப்பு குறித்த அச்சம் அதிகரித்துவருகிறது. 2006 தொடக்கம் 10 பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு தேடி நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.[25]

வடக்கிலும் கிழக்கிலும் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்களுக்கு அச்சுறுத்தல் மிக அதிகமாக இருக்கிறது. அந்தப் பகுதியின் மனித உரிமை சூழல் குறித்து அவர்கள் செய்தி வழங்குவதற்கும் அல்லது செய்தி வழங்க முற்படுவதற்கும் அவர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல் போக்குகளுக்கும் இடையில் சிலநேரம் தொடர்பு இருப்பது தெரியவருகிறது. ஊழல் விவகாரங்கள் குறித்து செய்தி வழங்குபவர்களும், இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இராணுவ வழியை அரசாங்கம் தெரிவுசெய்வதை விமர்சிப்பவர்களும் அச்சுறுத்தலுக்குள்ளாகும் பிற ஊடகவியலாளர்கள் ஆவர்.

### பத்திரிகையாளர் சுப்ரமணியம் சுகிர்தராஜன் சட்டவிரோதமாகக் கொலைசெய்யப்பட்டது


சுகிர்தராஜன்

**சுப்பிரமணியம் சுகிர்தராஜன்**, திருகோணமலை துறைமுக ஊழியரும் ஒரு பத்திரிகையாளரும் ஆவார். 24 ஜனவரி 2006 சுமார் காலை 6 மணிக்கு அடையாளந்தெரியாத ஆயுததாரிகள் மோட்டார் சைக்கிளில் வந்து இவரை சுட்டுக்கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. *சுடரொலி* தமிழ் செய்தித்தாளில் இராணுவம் மற்றும் கருணா அணியை விமர்சித்து செய்திக் குறிப்புகளும் புகைப்படங்களையும் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் பிரசுரித்திருந்தார். 2 ஜனவரி 2006 அன்று திருகோணமலையில் கொல்லப்பட்ட ஐந்து தமிழ் ஆடவ மாணவர்களைக் காட்டும் அவரது புகைப்படம் காரணமாகத்தான் அவர்கள் எறிகுண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டார்கள் என்று வெளியான ஆரம்பகட்ட அதிகாரபூர்வ செய்திகளை மறுத்துக்கூற உதவியது.

---

[25] ஊடகவியலாளர் நேர்காணல், ஊடகவியலாளர் எண் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலையின் ஸ்ரீகோணேஸ்வர் இந்துக் கல்லூரி மற்றும் புனித சூசையப்பர் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் 2 ஜனவரி 2006 அன்று மாலை 7 மணியளவில் பேசிப் பொழுதைக் கழிப்பதற்காக கடற்கரையில் கூடியிருந்த வேளையில் அப்பக்கமாக சென்ற முச்சக்கர வண்டியிலிருந்து அவர்கள் மீது எறிகுண்டு ஒன்று வீசப்பட்டிருக்கிறது. குண்டு விழுந்தவுடன் அவர்கள் தப்பித்து ஓடினார்கள் என்றாலும், குறைந்தபட்சம் மூன்று பேர் குண்டுவெடிப்பில் காயமடைந்தனர். சற்று நேரம் கழித்து விசேட அதிரடிப் படையின் (STF) சீருடை அணிந்திருந்த 10 முதல் 15 பேர் வரையிலானோர் அங்கு வந்துள்ளனர். காயமுற்றுக்கிடந்தவர்களை தமது ஜீப் வண்டியில் தூக்கிப்போட்டு, துப்பாக்கிக் முனையால் அவர்களைக் குத்தியும் அடித்தும் இருக்கிறார்கள்; பின்னர் அவர்களை வண்டியிலிருந்து சாலையில் கீழே தள்ளிவிட்டுள்ளனர். பின்னர் பாதுகாப்பு படையினர் ரகிஹர் மனோகரன் உள்ளிட்ட ஐந்து மாணவர்களை சுட்டுக் கொன்றதாக சம்பவத்தைக் கண்டவர் ஒருவர் கூறுகிறார்.[26]

2 ஜனவரி 2006 அன்று பிபிசி சிங்கள சேவையானது *சந்தேஷ்ய* வானொலி நிகழ்ச்சியில், கிழக்குப் பகுதி நகரமான திருகோணமலையில் ஐந்து தமிழ் இளைஞர்கள் ஒரு குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டுள்ளதாய் தெரிவிக்கப்படுவதாக செய்தி வெளியிட்டது. “இந்த மாணவர்கள் தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருந்தவர்கள்; அவர்கள் வைத்திருந்த எறிகுண்டு முன்னதாகவே வெடித்ததால் அவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று இலங்கை பாதுகாப்பு அமைச்சகம் கூறியது.”[27] ஆனாலும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த ஒருவர் சந்தேஷ்ய நிகழ்ச்சியில் பேசுகையில், “மாணவர்கள் ஐந்து பேருமே தலையில் சுடப்பட்டுள்ளனர் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது, தண்டிக்கும் விதமாக சுட்டுக்கொல்லும் பாணியில் அவர்கள் சுடப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது” என்று வருணித்துள்ளார்.[28]

மாணவர்களின் கொலையை அடுத்து அவர்களின் சடலங்களைப் பாதுகாப்பு படையினர் பொதுமக்கள் பார்க்க இடமளிக்காமல் நேரடியாக அவற்றை திருகோணமலை மருத்துவமனைக்கு கொண்டுசென்றனர். இராணுவத்தினர் மீது நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த ஒரு தாக்குதல் தோல்வியடைய தாங்கள் வைத்திருந்த குண்டு வெடித்து அந்த மாணவர்கள் கொல்லப்பட்டனர் என்று இராணுவப் பேச்சாளர் தொடர்ந்து கூறிவந்தாலும் சுடரொலியும் மற்ற தமிழ் ஊடகங்களும், அவர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டு

---

[26] “மருத்துவர் டாக்டர் காசிப்பிள்ளை மனோகரன்,” UA 114/06, AI Index: ASA 37/013/2006, 3 மே 2006

[27] “மாணவர்கள் கொலை பற்றி விசாரணைகள் கோரப்படுகின்றன”, பிபிசி சிங்களம், 3 ஜனவரி 2006

[28] பிபிசி சிங்களம், 3 ஜனவரி 2006, அதே கட்டுரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்திருக்கிறார்கள் என்று செய்தி வெளியிட்டன. அம்மாணவர்களின் சடலங்கள் வைக்கப்பட்டிருந்த சவக்கிடங்குக்குள் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் ஒருவாறாகச் சென்று, அவர்களின் பின்னந்தலையில் குண்டுக்காயம் இருப்பதை ஆவணப்படுத்தினார். அவர் எடுத்தப் புகைப்படங்கள் தமிழ் அச்சு மற்றும் இணையதள ஊடகங்களில் பரவலாகப் பிரசுரிக்கப்பட்டன. முழு அளவில் பிரேதப் பரிசோதனைகள் நடத்தப்படுவதற்கு அவை முக்கியக் காரணமாக அமைந்தன; அதன் பின்னர்தான் குண்டுக் காயங்களும் இருந்ததை பிரிகேடியர் பிரசாத் சமரசிங்கே உறுதிசெய்தார். திருகோணமலை குற்றவியல் நீதிமன்றத்தில் 17 ஜனவரி 2006 அன்று இளநிலை மருத்துவ அதிகாரி டாக்டர்.காமினி குணதுங்க வழங்கிய வாக்குமூலம் குண்டுக் காயங்கள் காரணமாக அவர்கள் உயிரிழந்ததை உறுதிசெய்தது.[29]

உள்நாட்டளவிலும் வெளிநாடுகளிலிருந்தும் கண்டனக் குரல்கள் ஓங்கி ஒலித்ததை அடுத்து, இந்தச் சம்பவத்தையும் வேறு 15 சம்பவங்களையும் விசாரிப்பதற்காக செப்டம்பர் 2006ல் விசாரணைக் கமிஷன் ஒன்றை ஜனாதிபதி அமைத்தார். சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் கொலைச் சம்பவம் இந்தப் பட்டியலில் இடம்பெறவில்லை.

2 ஜனவரி 2005 அன்று கொல்லப்பட்ட மாணவர்களில் ஒருவரின் தந்தையான டாக்டர்.மனோகரன் பாதுகாப்பு அச்சங்கள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறினார்.

சுப்பிரமணியம் சுகிர்தராஜன் சட்டவிரோதமாகக் கொல்லப்பட்டதற்கு யார் பொறுப்பு என்பது பற்றி நம்பத்தகுந்த தகவல்கள் இல்லாதிருப்பது, அது பற்றி பக்கசார்பற்ற மற்றும் பாரபட்சமற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதன் அவசியத்தையும் அவசரத்தையும் வலியுறுத்துகிறது.

## அச்சுறுத்தலின் பிடியில் யாழ்ப்பாண ஊடகச் சமூகம்

கடந்த 11 ஆகஸ்ட் 2006 அன்று நாட்டின் தென்பகுதியை வடக்குடன் இணைக்கும் A9 நெடுஞ்சாலை மூடப்பட்டதிலிருந்து யாழ்ப்பாணம் நாட்டின் பிற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல வேண்டும். போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தால் யாழ்குடாவில் வாழும் 5,00,000 பேருக்கும் அதிகமானோருக்கு உணவுப் பொருட்கள் கிடைப்பது பாதிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் பெருமளவில் இலங்கை இராணுவத்தினர் (SLA) குவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பல சோதனைச் சாவடிகளை அமைத்துள்ளதோடு, இரவு நேர ஊரடங்கு உத்தரவையும் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இங்கு சுற்றிவளைத்து சோதனை செய்யும் நடவடிக்கைகள் சகஜம். பெரும்பாலும் தமிழ் ஆடவரும் பெண்களுமே சுற்றிவளைக்கப்பட்டு அவர்களது அடையாள அட்டைகள்

[29] UTHR (J) சிறப்பு அறிக்கை எண் 24, அதே கட்டுரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பற்றப்படுகின்றன. இந்த நடவடிக்கையின் பின்னர் பலர் தடுத்துவைக்கப்படுவதுடன், "சோதனை" நடத்துவதற்காக இராணுவ முகாம்களுக்கு கொண்டுசெல்லப்படுகின்றனர். தடுப்புக்காவலில் இருக்கையில் பலர் சித்ரவதைக்கு ஆளாக்கப்படுவதாக குற்றம்சாட்டப்படுகிறது. HRCSL அமைப்பின் யாழ்ப்பாண அலுவலகம் 2006 முதல் இராணுவ முகாம்களில் பல சித்ரவதைச் சம்பவங்கள் நடந்திருப்பதை பதிவுசெய்துள்ளது. சட்டவிரோத ஆட்கொலைகள், ஆட்கடத்தல்கள், காணாமல்போதல் சம்பவங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துவருகிறது. டிசம்பர் 2005க்கும் செப்டம்பர் 2007க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் இப்பகுதியில் பொதுமக்கள் 900 பேர் காணாமல்போயிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது என்றும் இவர்கள் ஆட்கடத்தலுக்கு உள்ளானவர்கள் என்று கருதப்படுவதாகவும் HRCSL அமைப்பின் யாழ்ப்பாண கிளை கூறுகிறது.

இப்படியான சம்பவங்களில் பல உயர் பாதுகாப்பு வலய பகுதிகளுக்குள் ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ள நேரங்களில் நடந்துள்ளன என்பதை வைத்துப் பார்க்கும்போது இவற்றில் சில சம்பவங்களையாவது பாதுகாப்புப் படையினருடன் அதிலும் குறிப்பாக இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து செயலாற்றுபவர்கள் அல்லது அவர்களுடைய ஒப்புதலுடன் செயலாற்றுபவர்கள் செய்திருக்கக்கூடும் என்று உணர்த்துகிறது, ஏனென்றால் இப்பகுதியின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர்கள் இலங்கை இராணுவத்தினர்தான். யாழ்ப்பாண பகுதிக்கு வழமையாகச் சென்றுவருபவரும் நம்பத்தகுந்த ஆதாரமுமான ஒருவர், "ஒவ்வொரு இரவும் ஆட்கள் கொண்டுசெல்லப்பட்டு கொலைசெய்யப்படுகிறார்கள்... ஆனால் யாழ்குடா நாட்டில் ஒருவித விசாரணையும் கிடையாது, சட்ட நடவடிக்கையும் கிடையாது." என்று குறிப்பிடுகின்றார்.[30]

ஐ.நா.மன்ற மனித உரிமைகள் உயர் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் கடந்த அக்டோபர் 2007ல் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருக்கையில் ஆட்கடத்தல்கள் போன்ற மனித உரிமை மீறல்கள் குறித்து கவலை எழுப்பினார். வடக்கிலும் கிழக்கிலும் ஆட்கள் காணாமல்போவது என்பது விடுதலைப் புலிகளுக்கு பரிவுகாட்டுவோரைக் களைவதற்கு என அரசாங்கம் மேற்கொள்ளும் ஒரு திட்டமிட்ட உத்தி – கிளர்ச்சிக்கெதிரான அரசு நடவடிக்கையின் ஓர் அங்கம் இது என்றும் கூறப்படுகிறது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் 2006ன் முதல் மூன்று மாதங்களிலிருந்து பார்க்கையில் விடுதலைப் புலி ஆதரவாளர்கள் அல்லது பரிவுகாட்டுவோர் என்று கூறப்படுவோர் நூற்றுக்கணக்கானோர்

[30] யாழ்குடாப் பகுதிக்கு சென்றுவரக்கூடிய மத தலைவர்கள் மற்றும் உதவிப் பணியாளர்கள் உள்ளிட்டவர்களிடம் பேசியதன் மூலம் அங்கு பொதுவாக நிலவும் பாதுகாப்பின்மை மற்றும் அச்சங்கள் குறித்து சர்வதேச பொதுமன்னிப்பு சபையால் பதிவுசெய்ய முடிந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லப்பட்டுள்ளனர் என்பதை ஆய்வாளர் ஒருவர் சுட்டிக்காட்டுகிறார்.[31] கூட்டணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் EPDP கட்சியில் ஆயுதப் பிரிவொன்று இருக்கிறது யாழ்குடா பகுதியில் மனித உரிமை மீறல்கள் நடப்பதில் இவர்களுக்கு முக்கியப் பங்கு இருக்கிறது என்பதை பல தகவல்கள் கோடிட்டுக்காட்டுகின்றன. காணாமல்போன ஆட்கள் பலரின் குடும்பத்தினர் ஆட்கள் காணாமல்போன சம்பவங்கள் சிலவற்றிலாவது EPDP கட்சியினர் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்று கவலை எழுப்பியுள்ளனர்.[32] போர்நிறுத்த காலத்தில் நடந்த சமூக கொண்டாட்ட நிகழ்வுகளை உளவுத்துறை அதிகாரிகளும் EPDP உறுப்பினர்களும் சேர்ந்து வீடியோ பதிவு செய்தனர். அந்த சமயத்தில் விடுதலைப் புலிகள் வெளிப்படையாக செயலாற்றியிருந்தனர். அந்த நேரத்தில் ஊர்வலத்திலும் ஆர்ப்பாட்டங்களிலும் கலந்துகொண்டிருந்தவர்கள் திட்டமிட்டு இலக்குவைக்கப்பட்டிருந்தனர். (இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டிருந்தவர்களில் பலர் விடுதலைப் புலிகளின் வற்புறுத்தலின் பேரிலேயே கலந்துகொண்டார்கள் என்று கருதப்படுகிறது. நிறைய பேர் கலந்துகொண்டால்தான், பங்குபெறுவோர் அனைவரும் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்று காட்டும் என்பதற்காக புலிகள் வற்புறுத்தினார்கள் என்றும் கருதப்படுகிறது.)

பாதிக்கப்பட்டோர் சிலரின் குடும்பத்தினர், முகமூடி அணிந்துவந்த ஆட்கள் நன்கு யாழ்ப்பாணத் தமிழில் கதைத்ததாகச் சொல்கின்றனர், சிங்களம் பேசும் பாதுகாப்புப் படையினருக்கு யாழ்ப்பாணத் தமிழில் ஒழுங்காகப் பேசுவதென்பது சிரமம். பாதிக்கப்பட்டவர்கள், அவர்தம் குடும்பத்தினர் மற்றும் இலங்கை இராணுவத்தினர் இடையில் தூதுவர்களாக EPDP தொண்டர்கள் செயல்பட்டார்கள் என்றும் குற்றம்சாட்டப்படுகிறது. தூதுவர்களாக செயல்படுவதற்காக EPDP தொண்டர்கள் பணம் பெற்றார்கள் என்றும் குற்றம்சாட்டப்படுகிறது. யாழ்குடாப் பகுதியில் அச்சம் நிலவும் நிலையில், பல குடும்பத்தினர் முன்வந்து விபரம் தரத் தயங்குகிறார்கள்; மேலும் வெளி ஊடகங்களும் அப்பகுதிக்குள் வருவதில் சிக்கல்கள் இருப்பதாலும் அவர்களுக்குப் பாதுகாப்பு பிரச்சினைகள் இருப்பதாலும், அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டு இந்த தகவல்களை சரிபார்த்து விவரிப்பது சிரமமாக உள்ளது. இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் விசாரணைகளை நடத்தவேண்டுமென சர்வதேச பொதுமன்னிப்பு சபை வலியுறுத்துகிறது.

---

[31] www.transcurrents.com. மில் டி.பி.எஸ்.ஜெயராஜ் எழுதிய "ஆட்கடத்தல் விவகாரம் பற்றிய கண்ணோட்டம்" என்ற கட்டுரை, 13 ஏப்ரல் 2007.

[32] உதாரணத்திற்கு ஆலைப்பிடியில் படுகொலைகள் சம்பவம் EPDPயினர் இலங்கை கடற்படையுடன் இணைந்து செயற்படுகிறார்களா என்ற கேள்வியை எழுப்பியது. யாழ்குடாவில் இருக்கும் வெள்ளணை தீவில் படுகொலைகள் நடந்தன. இத்தீவு EPDPயினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. வெள்ளணை தீவிலுள்ள ஆலைப்பிடியில் 13 மே 2006 அன்று ஒரு ஆறு மாதக் குழந்தை உட்பட 8 பேர் கொல்லப்பட்டனர். 2006ல் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவால் விசாரிக்கப்படும் 16 சம்பவங்களில் இதுவும் ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்சொன்ன விஷயங்களைக் கருத்தில்கொண்டு பார்க்கையில், மனித உரிமை மீறல்கள் குறித்து தகவல் வழங்குவதில் வடக்கிலுள்ள ஊடகங்கள் மிக முக்கியமான ஒரு பங்கை ஆற்றவேண்டியுள்ளது. பத்திரிகையாளர்களும் ஊடகப் பணியாளர்களும் அடிக்கடி அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு வருவதோடு பலர் கொல்லப்பட்டும் இருக்கிறார்கள். 2000ஆம் ஆண்டு அக்டோபரில் (பிபிசிக்கு செய்தி வழங்கிவந்த) மயில்வாகனம் நிமலராஜன் கொலைசெய்யப்பட்டதிலிருந்து பக்கச்சார்பற்ற ஊடகச் செய்திகளை இப்பகுதியிலிருந்து பெறுவதென்பது மென்மேலும் சிரமமாகிவருகிறது. அதன் பிறகு இன்றுவரை யாழ்ப்பாணத்தில் பிபிசிக்கு செய்தியாளர் இல்லை. ஏனென்றால் "யாழ்குடா நாட்டில் நடக்கும் விஷயங்கள் பற்றி செய்தி வழங்கும் வேலையைச் செய்ய யாருமே தயாராக இல்லை."[33]

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் *உதயன்* நாளிதழ் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது.[34] *உதயன்* இலக்குவைக்கப்பட்டதற்கு அரசியல் காரணங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அந்நாளிதழின் தமிழ் தேசியவாத நிலைபாட்டுடன் இது தொடர்புடையதாக இருக்கிறது. 2006 மே மாதத்திலிருந்து யாழ்ப்பாணத்தில் ஊடகப் பணியாளர்கள் ஏழு பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் நான்கு பேர் உதயனில் வேலைபார்த்துவந்தவர்கள். 2 மே 2006 அன்று *உதயன்* அலுவலத்தை மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கிதாரிகள் தாக்கினர். அவர்கள் தேடிவந்ததாகக் கூறப்படும் பத்திரிகையாளர்கள் அங்கு இல்லாத நிலையில், உதவி ஊழியர்களான சுரேஷ் குமார் மற்றும் ராஜீவ் குமார் ஆகிய இருவரையும் அவர்கள் கொன்று சென்றனர். உதயன் நாளிதழின் ஆசிரியர் குறிப்பிடுகையில், "எங்களது தினசரியை யாழ்ப்பாணத்திலிருந்து பிரசுரிப்பதென்பது மென்மேலும் சிரமமாகிக்கொண்டும் ஆபத்தாகிக்கொண்டும் போகிறது. ஆயுதமேந்திய துப்பாக்கிதாரிகள் எங்கள் பணியையையும் வாழ்க்கையையும் தொடர்ந்து அச்சுறுத்திவருகிறார்கள்" என்றார்.[35] உதயன் ஊழியர்கள் இலக்காக்குவைக்கப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த நவம்பர் 2007ல் குறைந்தபட்சம் 60 பேர் அச்சம் காரணமாக வேலைக்கு வரவில்லை. தவிர உதயன் பத்திரிகையாளர் ஒருவர் கடந்த 13 மாதங்களாக உயிரச்சம் காரணமாக செய்தித்தாள் அலுவலகத்தை விட்டு வெளியில் வராமல் அங்கேயே தங்கியிருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.[36]

---

[33] ஊடகவியலாளர் நேர்காணல், நேர்காணல் எண் 2

[34] 1986 முதல் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் தமிழ் நாளிதழ் *உதயன்*. அதன் சகோதரப் பத்திரிகையான *சுடர் ஒலி* 2000ஆம் ஆண்டுமுதல் கொழும்பிலிருந்து பிரசுரமாகிறது.

[35] *உதயன்* நாளிதழிலிருந்து கடிதம், "உதயன் ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள்", 21 மார்ச் 2007, இலங்கை FMM இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டது.

[36] இலங்கைக்கான சர்வதேச ஊடக சுதந்திர அமைப்பு வெளியிட்ட அறிக்கை "யாழ்ப்பாணத்தின் ஊடகங்கள் பயங்கரவாத அச்சுறுத்தலின் பிடியில்", 24 ஆகஸ்ட் 2007, www.rsf.org/article.php3?id_article=23380.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் (UTHR-J) தமது 21ஆம் சிறப்பு அறிக்கையில், 2 மே 2006 அன்று உதயன் பத்திரிகை அலுவலகம் மீது நடந்த தாக்குதலில் முக்கிய சாந்தேகநபர்கள் EPDPயினர்தான் என பெயர் குறிப்பிட்டுள்ளது:

*"உதயன் அலுவலக தாக்குதலுக்கு சற்று நேரம் கழித்து, அந்த அலுவலகத்திலிருந்து உதயன் அலுவலகத்துக்கு செல்லுகின்ற சற்று சுற்றான ஒரு பாதையில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் மீது சிவன்கோயில் பகுதியிலிருந்த இராணுவ காவலர்கள் துப்பாக்கிசூடு நடத்தி அதில் அவர்கள் காயமடைந்தனர் என்ற தகவல்தான் சந்தேகம் எழக் காரணமாய் இருந்தது. காயமடைந்த இருவரும் EPDP தொண்டர்கள் என்ற விபரத்தை நம்பத்தகுந்த ஆதாரம் ஒருவர் சொன்னதும் பின்னர் சொன்னதும் சந்தேகம் உறுதிசெய்யப்பட்டது. ஒருவருக்கு இலேசான காயம் என்றும் மற்றவருக்கு இரண்டு மாதங்கள் பின்னரும் காயத்துக்கு சிகிச்சை பெறவேண்டியிருந்தது என்றும் அந்த ஆதாரம் கூறியிருந்தார்."*[37]

பெயர் குறிப்பிடப்பட்டிருந்த அந்த EPDP சந்தேகநபரை பொலிசார் விசாரணைக்காக கொண்டுசென்றனர் என்றும் ஆனால் விசாரணை ஏதும் நடத்தாமல் அவர் உடனடியாக விடுவிக்கப்பட்டுவிட்டதாக கூறப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதக் கொலைகள் யாருடைய வேலை என்பது பற்றி சர்வதேச நெருக்கடி தவிர்ப்புக் குழு பின்வருமாறு கூறுகிறது:

*"இராணுவ உளவுத்துறை உறுப்பினர்களும் EPDP உறுப்பினர்கள் சிலர் அடங்கிய தமிழ்த் தீவிரவாதிகளும் கொண்ட ஒட்டுக் குழுக்களின் வேலைதான் இது. முன்பு EPDP இருந்து தற்போது அதிலிருந்து விலகி இராணுவத்தினருடன் நெருங்கிச் செயலாற்றுபவர்கள் இவர்கள் என்றும் மற்ற வட்டாரங்கள் குறிப்புணர்த்துகின்றன. எப்படிப் பார்த்தாலும், சட்டத்துக்கு புறம்பான இந்தக் கொலைகளில் பாதுகாப்புப் பிரிவினர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை."*[38]

யாழ்ப்பாணத்தில் வேறுபல பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது. ஆனால் அவை குறித்து சர்வதேச பொதுமன்னிப்பு சபையால் கூடுதல் விபரங்களையோ, அவற்றைச் செய்தவர்கள் பற்றிய தகவல்களையோ உறுதிசெய்ய முடியவில்லை. யாழ்குடாப் பகுதியில் நடக்கும் மனித உரிமை மீறல்களை உறுதிசெய்யக்கூடிய பக்கச்சார்பற்ற ஆதாரங்கள் இல்லை என்பதுதான்

[37] 23 அக்டோபர் 2006 தேதியிட்ட UTHR(J). சிறப்பு அறிக்கை பிரிவுகள் 42, 43 மற்றும் இணைப்பைப் பார்க்கவும்.

[38] "இலங்கையின் மனித உரிமை நெருக்கடி", சர்வதேச நெருக்கடி தவிர்ப்பு குழுவின் ஆசியாவுக்கான அறிக்கை எண் 135, 14 ஜூன் 2007, 10ஆம் பக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதார்த்த நிலை. அங்கு நடப்பதாகத் தெரிவிக்கப்படும் மனித உரிமை மீறல்களின் அளவைக் கருத்தில் கொண்டு பார்க்கையில், இந்த சூழல் பெரும் கவலை அளிப்பதாய் இருக்கிறது.

கடந்த 29 ஏப்ரல் 2007 அன்று **செல்வராஜா ராஜீவராம்** என்ற இளம் *உதயன்* பத்திரிகையாளர் யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகை அலுவலகம் அருகில் சுட்டுக் கொல்லப்பட்டார்.[39] ஆட்கள் காணாமல்போதல் பற்றிய தகவல்களை விசாரித்துவந்தவர் அவர். யாழ்ப்பாணத்தில் HRCSL அமைப்பு செய்த பணிகள் பற்றியும் யாழ்ப்பாணத்தின் பாடம்சொல்லித்தரும் மருத்துவமனையிலிருந்தும் அவர் செய்தி வழங்கியுள்ளார்.

16 ஆகஸ்ட் 2006 அன்று **சதாசிவம் பாஸ்கரன்** என்ற *உதயன்* செய்தித்தாளுக்கு பொருட்களை எடுத்துவரும் ஊழியர் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை ஆயுதப் படைகளின் கட்டுப்பாட்டிலிருந்த ஒரு பகுதியில் தற்காலிகமாக ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டிருந்த வேளையில் உதயன் என்ற பெயர் தெளிவாகப் பொறிக்கப்பட்டிருந்த வாகனத்தில் சென்று நாளிதழ் விநியோகித்துக் கொண்டிருக்கையில் அவர் சுடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.[40]

21 ஆகஸ்ட் 2006 அன்று இலங்கையிலிருந்து வெளியாகும் *நமது ஈழநாடு* செய்தித்தாளின் நிர்வாக இயக்குநரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான **சின்னதம்பி சிவாமராஜா** யாழ்குடாப் பகுதியில் தனது வீட்டுக்கு வெளியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். சிவாமரஜாவின் வீடு இலங்கை இராணுவத்தால் கட்டுப்படுத்தப்படும் ஒரு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இருப்பது, அவரது கொலையாளிகள் பாதுகாப்புப் படையினரின் ஒத்திசைவுடன் நடமாடியிருக்கிறார்கள் என்பதை குறிப்புணர்த்துகிறது.

யாழ்பல்கலைக்கழகத்தின் ஊடக ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தின் மாணவரும் பகுதி நேர பத்திரிகையாளரும் ஆன 22 வயது **சஹாதேவன் திலுக்ஷான்**, 2 ஆகஸ்ட் 2007 அன்று யாழ் நகரில் வைத்து இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இராணுவத்தினரிடம் இருந்து பல்வேறு அனுமதி அட்டைகளை வாங்கியாக வேண்டும் என்பதாலும், மற்ற யாழ் வாசிகளைப் போல குடாநாட்டிலிருந்து வெளியே வர இராணுவத்தின் அனுமதியைப் பெற்றாக

[39] ஊடகவியலாளர் பாதுகாப்புக்கான குழுவின் அறிக்கையைக் காண்க, http://www.cpj.org/news/2007/asia/sri20apr07na.html.

[40] இலங்கைக்கான சர்வதேச ஊடக சுதந்திர அமைப்பின் பயணம் வழங்கிய "யாழ்ப்பாண ஊடகம் பயங்கரவாத அச்சுறுத்தலின் பிடியில்" என்ற அறிக்கையில் "ஊடகங்களுக்கு எதிராய் அதிகரித்துவரும் வன்முறைகள்" என்ற தலைப்பைக் காண்க, 24 ஆகஸ்ட் 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதாலும் யாழ்ப்பாணத்தின் ஊடகப் பணியாளர்கள் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். செப்டம்பர் 2007ல் கொழும்பில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த தெற்கு ஆசிய ஊடகங்களின் மாநாட்டில், இந்தியாவின் பிரண்ட்லைன் சஞ்சிகை பின்வருமாறு கூறியது:

> *"இராணுவத்தினர் வழங்கிய "பயண அனுமதி"யைப் பெற்ற பின்னரே யாழ்ப்பாணத்திலிருந்து பிரதிநிதிகள் இங்கு வர முடிந்திருக்கிறது. தேச பாதுகாப்புக்கு இவர்களைக் கொண்டு ஊறுவிளையாது என்று பல நிறுவனங்கள் பச்சைக் கொடி காட்டிய பின்னர்தான் அவர்களுக்கு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பத்து நாட்கள் மட்டும்தான் இந்த அனுமதி, யாழ்ப்பாணம் திரும்பியவுடன் சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகளிடம் அதனை அவர்கள் ஒப்படைத்தாகவேண்டும். பாதுகாப்பு அதிகாரிகளிடம் இருந்து இந்த அனுமதியைப் பெற பத்திரிகையாளருக்கு ஒரு வாரத்திற்கும் மேல் பிடித்திருக்கிறது. இவ்வளவுக்கும் அவரிடம் தேசிய அடையாள அட்டை, இலங்கை பத்திரிகைத்துறை உறுப்பினர் அட்டை, யாழ்ப்பாணத்தின் இராணுவ அதிகாரிகள் வழங்கிய மற்றொரு அடையாள அட்டை ஆகியவை இருந்திருக்கின்றன."*[41]

## கொழும்பு மற்றும் வவுனியாவில் நடந்த சட்டவிரோதக் கொலைகள்

2006ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்பில் சிங்களப் பத்திரிகையாளர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஒப்பந்த அடிப்படையில் பலருக்கும் பணியாற்றும் சிங்களப் பத்திரிகையாளரான **சம்பத் லக்மல் டி சில்வா** பாதுகாப்பு விவகாரங்கள் பற்றிச் செய்தி வழங்கிவந்தார். 2 ஜூலை 2006 அன்று இவர் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொழும்பு தெகிவளையிலுள்ள தனது வீட்டிலிருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவில் இவர் சடலம் கண்டெடுக்கப்பட்டது. தன்னைத் தொலைபேசியில் அழைத்த இனந்தெரியாத ஒருவரைச் சந்திப்பதற்காக கடைசியாக அவர் வெளியில் சென்றிருந்தார். தான் கொல்லப்பட்ட சமயத்தில், *சத்தின* வார சஞ்சிகைக்காக அரச படையினர் மற்றும் விடுதலைப் புலிகள் இடையிலான மோதல் குறித்து அவர் செய்தி வழங்கிவந்தார். இவர் கொலை சம்பந்தமாக ஒரு லெ.ஃப்டினண்ட் மற்றும் ஒரு உளவுப் பிரிவு அதிகாரி ஆகிய இருவர் உட்பட இலங்கை இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் ஆரம்பத்தில் தெகிவளை பொலிசாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். ஆனால் பொலிசாரின் விசாரணை பாதியில் நின்றதற்குக் காரணம் இராணுவம் தந்த அழுத்தம் என்று கூறப்படுகிறது.

---

[41] "குரல்வளை நசுக்கப்படும் ஊடகங்கள்", பி.முரளீதர் ரெட்டி, பிரண்ட்லைன், நூல் -24 இதழ் 18: செப்டம்பர் 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்மல் டி சில்வாவின் தாயார் ரூபா டி சில்வா, சி.ஐ.டி. பொலிசார் போல் வந்த இனந்தெரியாத நபர்கள் தன்னைக் கொன்றுவிடுவதாய் மிரட்டிவிட்டுச் சென்றனர் என்று ஆகஸ்ட் 2007ல் புகார் தெரிவித்திருந்தார்.[42] சர்வதேச பொதுமன்னிப்பு சபைக்கு எட்டியவரை சம்பத் லக்மல் டி சில்வாவின் கொலை தொடர்பான விசாரணைகள் முடங்கியே கிடக்கின்றன.

வவுனியா நகரத்திலும் தமிழ் பத்திரிகையாளர் ஒருவர் கொலைசெய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

*நிலம்* என்ற கையெழுத்துப் பிரதி மாத சஞ்சிகையின் ஆசிரியரும் கவிஞருமான 32 வயது **சுபாஷ் சந்திரபோஸ்** (அல்லது சந்திரபோஸ்) 16 ஏப்ரல் 2007 அன்று வவுனியாவில் தனது வீட்டிலிருந்த சமயத்தில் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். லண்டனிலிருந்து வெளியாகும் *தமிழ் உலகம்* சஞ்சிகைக்கு இவர் ஒப்பந்த அடிப்படையில் செய்தி வழங்கிவந்துள்ளார்.

### *4.2 பத்திரிகையாளர்கள் கடத்தப்பட்ட சம்பவங்கள்*

யாழ்ப்பாணத்தில் இரண்டு பத்திரிகையாளர்கள் கடத்தப்பட்டுள்ளனர். இந்த சம்பவங்களை சர்வதேச பொதுமன்னிப்பு சபை கூர்ந்து கண்காணித்துவருகிறது.

2001ஆம் ஆண்டு முதல் *யாழ் தினக்குரல்* மற்றும் *வலம்புரி* ஆகிய நாளிதழ்களின் வடமராச்சி செய்தியாளராகப் பணியாற்றிவந்த 37 வயதான **சுப்பிரமணியன் ராமச்சந்திரனை** 15 பிப்ரவரி 2007லிருந்து காணவில்லை. இதுபற்றி எல்லைகள் அற்ற செய்தியாளர்கள் அமைப்பு கூறுகையில், "சட்டவிரோத மணல் கொள்ளையில் தொழிலதிபர்களும் இராணுவ அதிகாரிகளும் ஈடுபடுகிறார்கள்" என்று குற்றம்சாட்டும் செய்திக்குறிப்பு ஒன்றை தந்ததன் பின்னர் அவர் காணாமல்போயுள்ளார் என்று தெரிவித்துள்ளது.[43] வடக்கிலுள்ள ஒரு இராணுவ முகாமில் அவர் தடுத்துவைக்கப்பட்டிருப்பதாக செய்திகள் கூறின. ஆனால் தடுப்புக்காவலிலேயே அவர் இறந்துவிட்டதாகவும் அவரது உடல் இரகசியமான முறையில் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டதாகவும் கூறும் ஊகங்கள் அதிகரித்துள்ளன.

*உதயன்* நாளிதழில் எழுத்துப் பிழை திருத்தும் பணி செய்துவந்த **வடிவேல் நிர்மலராஜனை** கடந்த 17 நவம்பர் 2007 முதல் காணவில்லை

---

[42] "கொல்லப்பட்ட பத்திரிகையாளரின் தாய்க்கு கொலைமிரட்டல் என்ற குற்றச்சாட்டு" டெய்லி மிர்ரர் இணையதள செய்தி, 7 ஆகஸ்ட் 2007, http://www.dailymirror.lk/2007/08/07/news.asp.

[43] "ஐந்து வாரங்களுக்கு முன் காணாமல்போனதாகக் கூறப்படும் தமிழ் ஊடகவியலாளரை இராணுவத்தினர் வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது", 23 மார்ச் 2007, http://www.rsf.org/print.php3?id_article=21420.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் கடத்தப்பட்டிருக்கலாம் என்று சர்வதேச பொதுமன்னிப்பு சபை கவலைகொண்டுள்ளது. இச்சம்பவம் பற்றி எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு குறிப்பிடுகையில், " செய்தித்தாள் அலுவலகத்தில் செய்திகளை சரிபார்க்கும் இரவு வேலையை முடித்துவிட்டு சைக்கிளில் வீடு திரும்புகையில் நாவலர் சாலை ரயில்வே அருகில் வைத்து EPDP உறுப்பினர்களால் இவர் கடத்தப்பட்டார் என்று கருதப்படுகிறது" என்று கூறுகிறது.[44] யாழ்ப்பாணத்திலுள்ள HRCSL அலுவலகத்தில் அவருடைய குடும்பத்தினர் புகார் செய்துள்ளனர்.

## *4.3 பத்திரிகையாளர்கள் கைதுசெய்யப்பட்ட சம்பவங்கள்*

இனப்பிரச்சினை அல்லது வேறு விஷயங்கள் தொடர்பான அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிக்குக் கட்டுரைகள் சம்பந்தமாக அனைத்து சமூகங்களிலிருந்தும் பத்திரிகையாளர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

*மாவ்பீமா* என்ற சிங்கள நாளிதழில் பணியாற்றும் தமிழ் பெண் பத்திரிகையாளர் **பரமேஷ்வரி முனுசாமி**. விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் காரணமாக 21 நவம்பர் 2006 அன்று விசேட அதிரடிப் படையினரால் (STF) கைதுசெய்யப்பட்டு "பயங்கரவாதிகள் விவாரணைப் பிரிவு" (TID) தலைமையகத்தில் அவசரகால விதிமுறைகளின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.[45] கைதுசெய்யப்படும் வேளையில் எதற்காக, எந்த சட்ட அடிப்படையில், கைதுசெய்யப்படுகிறார் என்பன பற்றிய விபரங்கள் பரமேஷ்வரி முனுசாமியிடம் தெரிவிக்கப்படவில்லை. எவ்வித குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்படாமல் நான்கு மாதங்கள் சிறையில் அடைத்துவைக்கப்பட்டபின் 22 மார்ச் 2007 அன்று அவர் விடுவிக்கப்பட்டார். தமிழ் சமூகம் தொடர்பான விவகாரங்கள் குறித்தும் கொழும்பில் நடந்த ஆட்கடத்தல்கள் ஆட்கள் காணாமல்மோதல் சம்பவங்கள் பற்றிய தகவல்களை விசாரித்தும் பத்திரிகையில் எழுதியமைக்காக அறியப்பட்டிருந்தவர் அவர். மனித உரிமை மீறல்கள் தொடர்பாக *மாவ்பீமா* செய்தித்தாளில் தான் எழுதிய கட்டுரைகளுக்காகவே இவர் தடுத்துவைக்கப்பட்டிருந்தார் என்று சர்வதேச பொதுமன்னிப்பு சபை நம்புகிறது.

*சண்டே லீடரில்* வேலைபார்த்துவந்த தமிழ் பத்திரிகையாளரான **ஆர்தர் வாமணன் ஸ்வர்ணலிங்கம்** 24 அக்டோபர் 2007 அன்று குற்ற புலன்விசாரணைத் துறையினரால் (CID) கைதுசெய்யப்பட்டார். ஆர்தர் வாமணன் அமைச்சர் மனோ விஜெரத்னவை தொலைபேசியில் அழைத்து "மனைவியின் ஊர்சுற்றும் செலவுகளுக்கு ஆபரணக் கற்கள் அதிகாரிகளை

---

[44] "யாழ்ப்பாணத்தில் அச்சுப்பிழை திருத்துபவரைக் காணவில்லை" RSF அறிக்கை, 22 நவம்பர் 2007, http://www.rsf.org/article.php3?id_article=24490.

[45] சர்வதேச பொதுமன்னிப்பு சபை அறிக்கை UA ASA 37/003/2007ஐக் காண்க. 27 பிப்ரவரி 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் கொடுக்கவைத்த அமைச்சர்"[46] என்ற தலைப்பில் 21 அக்டோபர் 2007 அன்று சண்டே லீடரில் வெளியான ஒரு செய்தி பற்றி கருத்து கேட்டதற்காக அவர் கைதுசெய்யப்பட்டார் என்று கூறப்படுகிறது. அமைச்சர் மனோ விஜெரத்ன தந்த அழுத்தம் காரணமாகவே ஆர்தர் வாமணன் கைதுசெய்யப்பட்டார் என்ற கவலை ஒருபுறமிருக்க, தடுப்புக்காவலில் அவர் மோசமாக நடத்தப்படலாம் என்றும் *சண்டே லீடர்* கவலை வெளியிட்டது:

> *"ஆர்தர் ஒரு தமிழர் என்பதை அறிந்தும், தனது வாக்குமூலத்தை தமிழிலோ ஆங்கிலத்திலோதான் எழுதுங்கள் என்று அவர் கேட்டும், அதை சிங்களத்திலேயே அவர்கள் எழுதியுள்ளார்கள். பின்னர் அவரை பலவந்தப்படுத்தி அதில் கையெழுத்து போடவைத்திருக்கிறார்கள். இதெற்கெல்லாம் உச்சமாக, வாக்குமூலம் பதிவுசெய்தபோது சட்டத்தரணி ஒருவர் உடனிருக்க அனுமதிக்கப்படவில்லை."*[47]

தான் கைதுசெய்யப்பட்டதன் சட்டபூர்வத் தன்மையைக் கேள்வியெழுப்பி உச்ச நீதிமன்றத்தில் நவம்பர் 2007ல் அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்கு ஒன்றை ஆர்தர் வாமணன் ஸ்வர்ணலிங்கம் கைதுசெய்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஸ்டண்டர் நியூஸ்பேப்பர்ஸ் தனியார் நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவரான **துஷ்யந்த பஸ்நாயகெ**, PTA சட்டத்தின் கீழ் TID அதிகாரிகளால் 26 பிப்ரவரி 2007 அன்று கைதுசெய்யப்பட்டார். அவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருக்கிறார் என்று சந்தேகிக்கப்படுவது அவர் செய்யப்பட்டதற்கான காரணம். ஆனால் இனப்பிரச்சினையின் தன்மை மற்றும் போக்கு குறித்து அதற்கு முன்புவரை ஸ்டண்டார்ட் பத்திரிகை கேள்விகள் எழுப்பி வந்ததினால், பத்திரிகையை ஒடுக்குவதற்காகவே அவர் கைதுசெய்யப்பட்டார் என்று அப்பத்திரிகை நம்புகிறது. "மாவ்பீமாவை இலக்குவைத்து அதன் குரலை ஒடுக்கியது"[48] என்ற தலைப்பின் கீழ் உள்ளவற்றைக் கீழே பார்க்கவும். எவ்வித குற்றச்சாட்டும் பதிவுசெய்யப்படாமல் துஷ்யந்த பஸ்நாயகெ பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

---

[46] "மனைவியின் ஊர்சுற்றும் செலவுகளுக்கு ஆபரணக் கற்கள் அதிகாரிகளை பணம் கொடுக்கவைத்த அமைச்சர்"[46] *சண்டே லீடர்* 21 அக்டோபர் 2007

[47] *சண்டே லீடர்*, 21 நவம்பர் 2007, அதே கட்டுரை.

[48] *மாவ்பீமா* நாளிதழ் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு எழுதிய கடிதம், 14 மார்ச் 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *அகுனா* தொழிற்சங்கவாதிகள் வழக்கு

தொழிற்சங்க பிரசுரமான *அகுனா*வை (இடி) தயாரிப்பதில் உதவிய **லலித் சேனவிரத்ன**[49], **நிஹல் சேரசிங்க** மற்றும் சிசிர பிரியங்கர ஆகியோர் 5 பிப்ரவரி 2007 அன்று தடுத்துவைக்கப்பட்டனர். லலித் செனவிரத்ன தான் கைதுசெய்யப்பட்டது பற்றி தனது வழக்கறிஞரிடம் கூறுகையில், கொழும்பின் ஹொரகந்தர வடக்கிலுள்ள தனது இல்லத்துக்கு வந்த சீறுடை அணிந்திராத அரசு அதிகாரிகள் தன்னைக் கூட்டிச்சென்றதாக குறிப்பிட்டார். அச்சமயம் அவரது மனைவி தலையிட்டபோது, அரசாங்கம்தான் அவரைக் கூட்டிச்செல்வதாக மனைவியிடம் தெரிவிக்கப்பட்டது. அஹுருகிரிய காவல்நிலையத்தில் அவர் உடனடியாக புகார் ஒன்றைக் கொடுத்தார். ஆனால் மேற்சொன்னவர்களைத் தாங்கள் தடுத்துவைத்தில்லை என்றும் அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று தங்களுக்குத் தெரியாது என்றும் ஆரம்பத்தில் அதிகாரிகள் கூறிவந்தனர்.[50] ஆனால் 48 மணி நேரம் முடிவடையாத நிலையில், அவர்களைத் தடுத்துவைத்திருப்பதை அரசாங்கம் ஒப்புக்கொண்டது. விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கியது மற்றும் குண்டுவெடிப்புகளில் ஈடுபட்டது உள்ளிட்ட "பயங்கரவாத" செயல்களில் அந்த தொழிற்சங்கவாதிகள் ஈடுபட்டதாக அரசாங்கம் குற்றம்சாட்டியது. 7 பிப்ரவரி 2007 அன்று கொழும்பில் ஒரு செய்தியாளர் கூட்டத்தில் காண்பிக்கப்பட்ட ஒரு வீடியோவில் இருந்த ஒப்புதல் வாக்குமூலங்களின் அடிப்படையில் அவர்கள் குற்றம்சாட்டப்பட்டிருந்தனர். ஆனால் இந்த ஒப்புதல் வாக்குமூலங்கள் சித்ரவதை செய்து பெறப்பட்டவை என்று கூறி அரசாங்கத்தின் குற்றச்சாட்டுகளை அத்தொழிற்சங்கவாதிகளின் சட்டத்தரணிகள் எதிர்க்கிறார்கள்.

இலங்கையின் உள்நாட்டுப் போரை உரத்த குரலில் எதிர்க்கும் இடதுசாரி அரசியல் குழுவான புரட்சிகர விடுதலை அமைப்பைச் சேர்ந்தவர்கள் அந்த தொழிற்சங்கவாதிகள், இக்கொள்கை காரணமாக அவ்வமைப்பின் உறுப்பினர்கள் சிங்களக் கோட்டி (சிங்களப் புலிகள்) என்று வெளிப்படையாகவே அழைக்கப்படுகின்றனர். யுத்த எதிர்ப்புக் குழுவினருடன் சேர்ந்து அவர்கள் நடத்திய பல ஆர்ப்பாட்டங்கள் இடையூறுக்குள்ளாக்கப்பட்டிருந்தன.

---

49 *ஹிரு* சஞ்சிகையில், *கெனிமாடல*வில் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாளிதழான *தினகர*வில் பக்க வடிவமைப்பாளர் எனவும் லலித் சேனவிரத்ன நிறைய நாளிதழ்களில் பணியாற்றியுள்ளார்.இந்த விபரங்கள் 7 பிப்ரவரி 2007 அன்றைய செய்தியாளர் கூட்டத்தில் தெரிவிக்கப்படவில்லை.

50 பிபிசி செய்தி "விடுதலைப் புலிகளுக்கு உதவியதை பத்திரிகையாளர்கள் 'ஒப்புக்கொள்கின்றனர்'", 7 பிப்ரவரி 2007, http://www.bbc.co.uk/sinhala/news/story/2007/02/070207_journalists_ltte.shtml.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த தொழிற்சங்கவாதிகள் புலிகளின் ஒற்றர்களாகவும், தூண்டிவிடும் ஆட்களாகவும் செயல்படுவதில் பங்காற்றினார்களா அல்லது தொழிற்சங்கவாதி என்ற ரீதியில் கருத்துச் சுதந்திரத்தை வலியுறுத்தி இயல்பான தமது வேலையைத்தான் செய்தார்களா என்பது பற்றி பலவிதமான விளக்கங்கள் தரப்பட்டு இந்த வழக்கு சிக்கலடைந்திருக்கிறது. தெளிவு வேண்டி இவ்வழக்கு தொடர்பாக சர்வதேச பொதுமன்னிப்பு சபை விசாரணைகளைச் செய்துவருகிறது. என்னதான் குற்றச்சாட்டுகள் இருந்தாலும், நியாயமான முறையில் வழக்கை எதிர்கொள்ளும் சந்தர்ப்பம் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு கிடைக்கவேண்டும். எந்தக் குற்றச்சாட்டாக இருந்தாலும் முறையான நீதித்துறை விசாரணைக்கு அவை உட்படுத்தப்பட வேண்டும்.

தொழிற்சங்கவாதிகள் கைது மற்றும் தடுப்புக்காவல் நடவடிக்கை யதேச்சதிகார போக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சுதந்திர ஊடக இயக்கம் (FMM) விமர்சித்துள்ளது.

> *"இந்த மூன்று தொழிற்சங்கவாதிகளுக்கும் "பயங்கரவாத" தொடர்புகள் இருப்பத்தாகக் காட்டும் தகவல்கள் வெளியிடப்பட்ட விதம் கவலை எழுப்பியுள்ளது. தேசிய பாதுகாப்பு காரணத்திற்காக அனைத்துவிதமான எதிர்ப்புகளையும், ஊடக சுதந்திரத்தையும் ஒடுக்கும் தன்மை அதில் காணப்பட்டது."*[51]

அகுனா தொழிற்சங்கவாதிகள் 7 ஜூன் 2007 வரையில் TID தலைமையிடத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர், பின்னர் அவர்கள் நாட்டின் தெற்கிலுள்ள பூசா தடுப்புக்காவல் முகாமுக்கு மாற்றப்பட்டிருந்தனர். இயல்பாக இந்த வழக்கு விசாரணைக்கு வருவதற்கு முன்பாக வரிசை மாற்றி வழக்கு விசாரிக்கப்படுமாறு TID அதிகாரிகள் செய்தனர், இதனால் விளைவாக 23 மார்ச் 2007 அன்று இந்த வழக்கு விசாரணக்கு வந்தபோது தடுத்துவைக்கப்பட்டவர்கள் சார்பாக சட்டத்தரணி ஆஜராக முடியாமல் போனது என்று தடுத்துவைக்கப்பட்ட மூவர் சார்பான சட்டத்தரணி ரத்னவேல் கூறுகிறார். **லலித் சேனவிரத்ன, நிஹல் சேரசிங்க மற்றும் சிசிர பிரியங்கர** ஆகியோரை குற்றத்தை ஒப்புக்கொள்வதாக கூறும் ஆவணத்தில் கையொப்பம் இடச்சொல்லி வற்புறுத்தியதாக அவர்களை 29 மே 2007 அன்று சென்று சந்தித்த உறவினர்கள் கூறினர். அவர்கள் கையொப்பமிட மறுத்து உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை துவங்கினர். TIDயில் உள்ள பொலிசார் அவர்களை அடித்ததாகக் கூறப்படுகிறது. இதுபற்றி அவர்களின் குடும்பத்தினர் HRCSL அமைப்பில் புகார் தெரிவித்துள்ளனர். (4 ஜூன் 2007 தேதியிட்ட புகார் எண்: HRC 3253/07). தடுத்துவைக்கப்பட்டவர்களை அவர்தம் குடும்பத்தினரும்

---

[51] "ஊடகங்களும் பயங்கரவாதமும்" செய்தி வெளியீடு, 8 பிப்ரவரி 2007, http://www.ifex.org/20fr/layout/set/print/content/view/full/81062.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தரணியும் வந்து பார்ப்பதில் தடைகள் இருந்துள்ளன. தங்களை சித்ரவதை செய்து வற்புறுத்தி குற்றத்தை ஒப்புக்கொள்ளும் ஆவணத்தில் கையெத்து வாங்கியதாக அவர்கள் குற்றம்சாட்டினர்.[52]

இவர்கள் யதேச்சதிகாரமாகத் தடுத்துவைக்கப்பட்டதை எதிர்த்து 400க்கும் மேற்பட்ட தொழிற்சங்கவாதிகள் 6 பிப்ரவரி 2007 அன்று கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர்.[53] அகுனா தொழிற்சங்கவாதிகள் கைதுசெய்யப்பட்டதில் சட்டப்படியான நடத்தைகள் கடைப்பிடிக்கப்படவில்லையே என்று ரவய பத்திரிகையின் செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு பதிலளித்த சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சர் சம்பிக ரனவக்க[54], அரசியல் அதிருப்தியாளர்களுக்கு எதிராக சட்டபூர்வ நடவடிக்கைகளையும் தாண்டி எல்லா வழிமுறைகளையும் பயன்படுத்துவதை ஆதரித்துப் பேசினார்.

> *"காட்டுக் கழுதைக்கு இருப்பதுபோன்று எல்லாவற்றுக்கும் சுதந்திரம் என்பதை வைத்துக்கொண்டு எங்களால் எதுவும் செய்ய முடியாது. இருக்கிற சட்டங்களைக் கொண்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாதென்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடிய வேறு வழிகள் எங்களுக்குத் தெரியும். அந்தத் தேவடியாப் பசங்களை சட்டத்தைக் கொண்டு ஒடுக்க முடியவில்லை என்றால் வேறு வழிகளை நாங்கள் பயன்படுத்தித்தான் ஆகவேண்டும், ஆமாம் பயன்படுத்தித்தான் ஆகவேண்டும்"*[55] என்றார் அமைச்சர் ரனவக்க.

---

[52] "சிங்கள கோட்டி" (சிங்களப் புலிகள்) வழக்கு என்றறியப்படும் இவ்வழக்கில், லலித் சேனவிரத்ன, நிஹல் செரசிங்க, சிசிர பிரியங்கர, உதய தென்னகோன், அஜித் குமார, சஞ்சீவ சுதத் சமிந்த மற்றும் சுரேஷ் குமார உள்ளிட்ட சந்தேகநபர்களுக்காக வாதிட்ட சட்டத்தரணி ரத்னவேல், நீதிமன்றத்தில் வாதங்களை சமர்ப்பிக்கும் உரிமை என்பது ஒரு அடிப்படை உரிமை என்றும் நீதிவழங்கள் சட்டம், குற்ற நடைமுறைச் சட்டம், அரசியல் சாசன சட்டம் ஆகியவை இந்த உரிமையை வழங்குகின்றன என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தார். டெய்லி மிர்ரர், 9 ஏப்ரல் 2007

[53] 'இலங்கை: அச்சுறுத்தலில் தொழிற்சங்கவாதிகள்', , http://www.labourstart.org/cgi-bin/solidarityforever/show_campaign.cgi?c=210, அகுனா தொழிற்சங்கவாதிகள் மூவரின் கைதை விமர்சித்து தொழிற்சங்கத்தினர் எடுத்த நடவடிக்கையின் விளைவாக, தொழிற்சங்கத் தலைவர்களுக்கு கொலைமிரட்டல்கள் உள்ளிட்ட பல அச்சுறுத்தல்கள் வந்தன. 21 பிப்ரவரி 2007 அன்று FTZGSEU மற்றும் HSTUA ஆகியவை தங்களுடைய உயிருக்கு பாதுகாப்பு கோரியும், தொழிற்சங்க நடவடிக்கைகளை தாங்கள் தொடருவதில் பாதுகாப்பு கோரியும் பொலிசில் நிறைய புகார்களைக் கொடுத்தார்கள்.

[54] பாடலி சம்பிக ரனவக்க, JHU கட்சியில் திட்டமிடுபவர்களில் முக்கியமானவர், சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சராக 1 பிப்ரவரி 2007 அன்று அவர் பதவியேற்றார்.

[55] ரவய செய்தித்தாளில் 18 பிப்ரவரி 2007 அன்று பிரசுரமான "த்ரஸ்த விரோதய சலகுன குமக்ட" ("பயங்கரவாத எதிர்ப்பின் அறிகுறிகள் என்ன?"), "அமைச்சரின் பிரச்சினைக்குரிய அறிக்கைக்கு உடனடியாக விளக்கம் கேட்கப்படுகிறது", FMM 19 பிப்ரவரி 2007ஐயும் காண்க. www.freemediasrilanka.org/index.php?action=con_news_ full&id=468&section=news.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FMM கூற்றுப்படி:

*"பயங்கரவாததிற்கு எதிரான தேசிய இயக்கம் (NMAT) என்ற தீவிரவாத இயக்கம் அண்மையில் நடத்திய சுவரொட்டிப் பிரச்சாரத்தை அமைச்சர் தனது ஆதரவை வெளிப்படுத்தினார். அமைச்சரின் கட்சியான ஜாதிக ஹெல உருமயவின் (JHU) நெருங்கிய தோழமை இயக்கம் (NMAT) ஆகும். விடுதலைப் புலிகளின் நோக்கத்துக்கு உதவுகிறார்கள் என்று JHU மற்றும் NMAT கருதும் அனைவரையும் - சமாதானத்தை ஆதரிக்கும் சிவில் சமூக மற்றும் ஊடகத்துறை ஆர்வலர்கள் உள்ளிட்டு அனைவரையும் இல்லாதுசெய்ய வேண்டும் என்று அவர் குரலெழுப்பினார்."*[56]

லலித் சேனவிரத்ன, நிஹல் சேரசிங்க, சிசிர பிரியங்கர ஆகியோர் தொடர்ந்து பூசா முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது இன்றுவரை முறைப்படியான குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. அவர்களை ஒருமுறை மட்டுமே இதுவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருப்பதாக அவர்களுடைய சட்டத்தரணி கூறுகிறார். நீதிமன்றத்திலிருந்து திரும்பியவுடன் தொழிற்சங்கவாதிகளில் ஒருவர் தாக்கப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

அகுனா வழக்கு தொடர்பாக நேரடியாகப் பேசிய அரசு தகவல்துறை அமைச்சர் கெஹிலிய ரம்புக்வெல, "இந்தக் கைது நடவடிக்கைகளை எதிர்ப்பவர்களின் குரல்களை ஒலிக்கவிடாமல் செய்ய அரசாங்கத்தினால் முடிந்திருக்கிறது" என்று கூறினார்.[57]

இப்படிப்பட்ட அறிக்கைகள் மற்றும் கருத்துகள் குறித்து சர்வதேச பொதுமன்னிப்பு சபை பெரும் கவலைகொண்டுள்ளது.. அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் உள்ளிட்டு அனைவருமே தமது கருத்தை அமைதியான முறையில் தடையின்றி வெளிப்படுத்துவதை அது ஊக்குவிக்கவும், வசதி ஏற்படுத்தித்தரவும், பாதுகாக்கவும் வேண்டும், அதை விடுத்து அவர்களுக்கெதிராக அச்சுறுத்தத்தக்கூடாது. இப்படியான அறிக்கைகளிலிருந்து இலங்கை அரசாங்கம் தன்னை விலக்கிக்கொள்ள வேண்டும் என்றும் பொதுவாக மனித உரிமைகளையும் குறிப்பாக கருத்துச் சுதந்திரத்தையும் மதிப்பதிலும் பாதுகாப்பதிலும் தனக்கிருக்கும் ஈடுபாட்டை அது வலியுத்த வேண்டுமென்றும் எமது அமைப்பு கோருகிறது.

---

[56] "அமைச்சரின் பிரச்சினைக்குரிய அறிக்கைக்கு உடனடியாக விளக்கம் கேட்கப்படுகிறது", FMM 19 பிப்ரவரி 2007. www.freemediasrilanka.org/index.php?action=con_news_full&id=468&section=news.

[57] "ஊடகங்களும் பயங்கரவாதமும் – அண்மைய ஆட்கடத்தல்களும் அதன் பிறகு நடந்தவையும்", FMM அறிக்கை, 9 பிப்ரவரி 2007, http://www.freemediasrilanka.org/index.php?action=con_news_full&id=464&section=news.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.4 புலிகளின் குரல் வானொலி நிலையம் குண்டுத் தாக்குதலுக்குள்ளான சம்பவம்


குண்டு வீசப்பட்ட புலிகளின் குரல் வானொலி

27 நவம்பர் 2007 அன்று இலங்கை இராணுவம் நடத்திய வான் தாக்குதலில் புலிகளின் குரல் வானொலியின் அலுவலக வளாகமும் அருகிலிருந்த சில பொதுமக்களின் வீடுகளும் அழிக்கப்பட்டன. விடுதலைப் புலிகள் வழங்கும் செய்திகள் மற்றும் தகவல்களை புலிகளின் குரல் வானொலி ஒலிபரப்புகிறது. விமானப் படை ஜெட் விமானங்கள் நடத்திய இந்த குண்டுவீச்சில் முன்னறிவிப்பு எதையும் அறிந்திராத மூன்று வானொலி ஊழியர்களும் பொதுமக்கள் ஆறு பேரும் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலைக் கண்டித்த எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு, "விடுதலைப் புலிகளால் நடத்தப்படும் பிரச்சார வானொலி புலிகளின் குரல் என்றாலும் யுத்த விதிமுறைகள் தெளிவாகக் கூறுவது – இராணுவ குண்டுவீச்சும் குண்டுவெடிப்புகளும் இராணுவ இலக்குகள் மீது மட்டுமே நடத்தப்பட வேண்டும் என்பதைத்தான்."[58]

### 4.5 மிரட்டல்கள் மற்றும் பிற வடிவிலான அச்சுறுத்தல்கள்

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் இருக்கக்கூடிய ஒப்பீட்டளவில் மிகச் சிறியதான ஊடகச் சமூகத்தினர் தொடர்ந்தும் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றனர். செய்தி ஆசிரியர்கள் வழமையாக இராணுவ முகாம்களுக்கு சென்று சமூகமளிக்கவேண்டும் என்று வற்புறுத்தல்களும் பின்னிரவில் இனந்தெரியாத ஆயுததாரிகள் செய்தித்தாள் அலுவலகங்களுக்குள் நுழையும் சம்பவங்களும் தொடரவே செய்கின்றன. 6 நவம்பர் 2006 அன்று இலங்கை இராணுவத்தின் 512ஆம் பிரிவின் அதிகாரிகள் யாழ்ப்பாணம் செய்தியாளர்களை வரவழைத்து வரவிருக்கும் "மாவீரர் தின"த்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வழங்கும் உரையை பிரசுரிக்கக்கூடாது என்று எச்சரித்து அனுப்பியதாகக் கூறப்படுகிறது. 5 ஜனவரி 2006 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தமிழ் நாளேடான யாழ் தினக்குரலின் அலுவலகம் இராணுவ உறுப்பினர்களால் சோதனையிடப்பட்டுள்ளது.[59]

---

[58] "புலிகளின் வானொலி நிலையம் மீதான வான் தாக்குதலை 'போர்க் குற்றம்' என்கிறது எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பு" http://www.freemediasrilanka.org/index.php?action=con_all_full&id=95&section=news_in.

[59] "மற்றுமொரு யாழ்ப்பாண பத்திரிகை அலுவலகம் படையினரால் சோதனையிடப்பட்டுள்ளது", 9 ஜனவரி 2006, http://www.ifex.org/en/content/view/full/71451/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கடத்தல்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இருப்பதை விமர்சித்து யாழ்ப்பாண மாணவர்கள் நிறைய ஆர்ப்பாட்டங்களை நடத்தியதன் பின்னர், 9 ஜனவரி 2007 அன்று இலங்கை இராணுவத்தினர் *தினக்குரல், உதயன்* மற்றும் *வலம்புரி* பத்திரிகை அலுவலகங்களுக்குச் சென்று யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வழங்கும் செய்திகளைப் பிரசுரிக்கக்கூடாது என்று மிரட்டிவிட்டுச் சென்றதாகக் கூறப்படுகிறது.

மனித உரிமை விவகாரங்கள் தொடர்பான செய்திகளை இராணுவம் எவ்வாறு கட்டுப்படுத்துகிறது என்பதற்கு மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐ.நா.,மன்ற துணை செயலாளர் நாயகம் சர் ஜொன் ஹோம்ஸ் ஆகஸ்ட் 2007ல் யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்ட விஜயம் பற்றிய ஊடகச் செய்திகளில் இராணுவத்தினர் தலையிட்டதாகக் கூறப்படுவதை ஓர் உதாரணமாகச் சொல்லலாம். விஜயத்திற்கு முதல் நாள் யாழ்ப்பாணத்தின் பத்திரிகையாளர்களையும் அரசு சாரா உதவி அமைப்புகளையும் அழைத்து மனித உரிமை விவகாரங்கள் பற்றி வாய் திறக்கக்கூடாது என்று இராணுவத்தினர் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. இச்சம்பவம் பற்றி சிவில் சமூகக் குழுக்கள் வெளியிட்ட ஒரு அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

> *"திரு.ஹோம்ஸ் யாழ்ப்பாணம் வருவதற்கு முதல் நாள், பலாலி இராணுவ தலைமையகத்தில் இராணுவக் கமாண்டர் கூட்டம் ஒன்றுக்கு ஏற்படுசெய்திருந்தார். ஹோம்ஸைச் சந்திக்கும்போது அரசு சாரா உதவி நிறுவனங்களும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் மனிதாபிமான உதவிகள் பற்றி மட்டுமே பேச வேண்டும், மனித உரிமை விவகாரங்கள் பற்றிப் பேசக்கூடாது என்று அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தனர்."*[60]

27 டிசம்பர் 2007 அன்று தொழிலாளர் நல அமைச்சர் டாக்டர்.மர்வின் சில்வா தனது ஆதரவாளர்கள் சிலருடன் இலங்கை ரூபவாஹினி (SLRC) நிறுவனத்துக்குள் நுழைந்து செய்திப் பிரிவு இயக்குநர் திரு.டி.எம்.ஜி.சந்திரசேகரவைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது. மாதரையில் நடந்த ஒரு கூட்டத்தில் தான் ஆற்றிய உரையை ஒளிபரப்பாமல் விட SLRC எடுத்த முடிவினால் அமைச்சர் ஆத்திரம் அடைந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் அந்த உரையில் ஒளிபரப்பப் பொருத்தமில்லாத மோசமான குறிப்புகள் பல இருந்ததாக SLRC வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

[60] ஐ.நா.மன்ற மனிதாபிமான விவகாரங்களுக்கான துணை செயலாளர் நாயகத்துடன் யாழ்ப்பாண அரசு சாரா அமைப்புகள் நடத்தவிருந்த சந்திப்பில் இராணுவம் குறுக்கீடு செய்ததைக் கண்டிக்கும் அறிக்கை, 9 ஆகஸ்ட் 2007, மாற்றுக் கொள்கைகளுக்கான மையம், FMM, INFORM, மனித உரிமைகள் ஆவண மையம், அனைத்து விதமான இன பாகுபாட்டுக்கும் எதிரான சர்வதேச இயக்கம், சட்டம் மற்றும் சமூகம் அறக்கட்டளை, ரைட்ஸ் நவ் அமைப்பு ஆகியவை இதில் கையெழுத்திட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.சந்திரசேகர இரண்டு முறை தாக்கப்பட்டு பின்னர் நிறுவன தலைவரின் அலுவலகத்துக்கு இழுத்துச்செல்லப்பட்டுள்ளார்.

அமைச்சர் மர்வின் சில்வா ஊடகங்கள் மீது தாக்குதல்களை முன்னின்று நடத்திய முந்தைய சம்பவங்களும் இருக்கவே செய்கின்றன. இந்த சம்பவங்களை அடுத்து சரிவர விசாரணைகள் நடந்திருக்கவில்லை என்பதுதான் அமைச்சர் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவத்தை அடுத்து SLRC ஊழியர்கள் அவரை மூன்று மணி நேரம் பணயக்கைதியாக பிடித்துவைத்திருக்கக் காரணம் என்று SLRC அலுவலகத்தில் அந்நேரம் இருந்த பத்திரிகையாளர் ஒருவர் குறிப்பிடுகின்றார். SLRC செய்திப் பிரிவு இயக்குநரைத் தாக்கியதற்காக மன்னிப்பு கேட்கவேண்டுமென பணியாளர்கள் விரும்பினர். SLRC செய்திப் பிரிவு ஆசிரியரை அமைச்சர் மர்வின் சில்வாவின் உதவியாளர்கள்தான் தாக்கினார்கள் என்று கூறப்படும் நிலையில் இச்சம்பவத்தில் அவர்கள் ஆற்றிய பங்கு என்ன என்பது பற்றி முறையான விசாரணை நடத்தப்பட வேண்டுமென கொழும்பு தலைமை மாஜிஸ்திரேட் மக்கி முகமது வலியுறுத்தியுள்ளார். அமைச்சர் சில்வாவின் உதவியாளர்களில் ஒருவரான குடு நுவன் (ஹெரொயின் நுவன்) என்றழைக்கப்படும் நுவன் குணதிலகவை SLRC செய்திப் பிரிவு இயக்குநரைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் பொலிசார் கைதுசெய்தனர். பின்னர் அவர் பிணையில் வெளிவந்துள்ளார். குடு நுவன், அமைச்சரின் அதிகார்வபூர்வ பாதுகாவலர் குழுவைச் சேர்ந்தவரல்ல, அமைச்சருடைய தனிப்பட்ட மெய்க்காவலர் அவர். கொழும்பில் சட்டவிரோதமாக ஹெரொயின் போதைப்பொருள் விநியோகித்தது தொடர்பாக அவர் மீது நிறைய வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. ஒரு கொலை வழக்கிலும் அவர் சந்தேகநபர். SLRC சம்பவம் பற்றி விசாரணை நடத்துவதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய நிர்வாகக் குழு நியமித்த மூன்று உறுப்பினர் கொண்ட விசாரணைக் குழு கடந்த ஜனவரி 26 வரை சந்திக்கவே இல்லை என்று *சண்டே டைம்ஸ்* கூறியுள்ளது.[61]

SLRC சம்பவத்தைத் தொடர்ந்து, அமைச்சர் சில்வாவை பிடித்துவைத்திருந்ததில் தாங்கள் ஆற்றிய பங்கு பற்றி பொலிசார் பத்திரிகையாளர்களை விசாரித்துள்ளனர். அதிகாரிகளின் விசாரணைகளுக்கு அப்பாற்பட்டு, அச்சுறுத்தும் வகையிலான தொலைபேசி அழைப்புகள் குடு நுவனின் ஆயுதக் கும்பலிடம் இருந்து வந்துள்ளதாக சில SLRC பத்திரிகையாளர்கள் கூறுகிறார்கள். இதனால் தமக்கு உயிரச்சம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அமைச்சர் சில்வா மற்றும் அவர்தம் உதவியாளர்களின் செயல்களைக் கண்டித்து 27 டிசம்பர் அன்று SLRC வளாகத்தில் பொதுமக்கள் மத்தியில்

[61] "ரூபவாஹினி தொடர் நாடகத்தில் மற்றொரு வன்முறையான திருப்புமுனை", *சண்டே டைம்ஸ்*, 27 ஜனவரி 2008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாற்றிய தொழில்முறை பத்திரிகையாளர்கள் சங்கத் (PJA) தலைவர் சனத் பாலசூர்ய, அனைத்து தரப்பினருமே அமைதிவழியிலான ஒரு தீர்வைத் தேடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பாலசூர்யவுடன் பணியாற்றும் (PJA) சங்கத்தின் பொதுச் செயலாளருக்கு அதன் பின்னர் இலக்குவைக்கப்பட்டுள்ளது. பொட்டல ஜெயந்த என்ற அவரது வீட்டுக்குள் 7 ஜனவரி 2008 அன்று சிவில் உடையணிந்த ஒரு கும்பல் நுழைந்தது. அச்சம்பவம் பற்றி ஜெயந்த விவரிக்கையில், "அதிகாலை சுமார் 3 மணியளவில் இனந்தெரியாத கும்பல் ஒன்று என் வீட்டுக் கதவைத் தட்டியது, சில தகவல்கள் வேண்டும் என்று கேட்டு என்னை வெளியில் வரச் சொன்னது"[62]. சிவிலியன் உடைகளில் சென்ற பொலிஸ்காரர்கள் அவர்கள் என்று தெரிகிறது ஏனென்றால் அவர்கள் வந்த வாகனம் GC 0306 என்ற பதிவு எண் கொண்ட பொலிஸ் ஜீப் வண்டி ஆகும்.[63] ஜனவரி 10 அன்று நடந்த ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில், ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாபா, பொலிசார் அவர் வீட்டுக்கு தவறுதலாக சென்றுவிட்டார்கள் என்று கூறினார். அதிகாலை 3 மணிக்கு பொலிஸ் குழு ஒன்று பொட்டல ஜெயந்த வீட்டுக்குச் சென்றதன் காரணம் என்ன என்று PJA கேள்வியெழுப்பியுள்ளது. பொலிசார் சீருடை அணியாமல், அதிகாரபூர்வ உத்தரவுகளோ ஆவணங்களோ இல்லாமல் இரவு நேரங்களில் தேடுதல் மற்றும் கைதுநடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் என்ற சூழ்நிலை கவலை அளிப்பதாய் இருக்கிறது.

27 டிசம்பர் 2007 அன்று SLRCயில் நடந்த சம்பவத்தில் ஈடுபட்டதற்காக லால் ஹேமந்த மாவலகே என்ற SLRC ஊடகவியலாளரும் இலக்குவைக்கப்பட்டுள்ளார் என்று தெரிகிறது. டிசம்பர் 2007 கடைசியிலிருந்து அவருக்கு தொடர்ந்து அச்சுறுத்தல்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. 25 ஜனவரி 2008 அன்று அதுருகிரிய பகுதியில் லால் ஹேமந்த மாவலகே சென்றுகொண்டிருந்த கார், இரவு சுமார் 11 மணியளவில் நிறுத்தப்பட்டு இரண்டு ஆட்கள் அவரைக் கத்தியால் குத்த முயற்சித்திருக்கிறார்கள். மாவலகே தற்போது கொழும்பு தேசிய மருத்துவமனையில் காயங்களுக்காக சிகிச்சை பெற்றுவருகிறார். இலங்கை ஊடக அமைப்புகள் பல இந்தத் தாக்குதலைக் கண்டித்திருப்பதோடு, 27 டிசம்பர் 2007 அன்று SLRCயில் நடந்த சம்பவத்துடன் இத்தாக்குதல் தொடர்புகொண்டது என்று கூறியுள்ளன.

இதனிடையே 6 ஜனவரி 2008 அன்று ஒரு தொலைபேசி அழைப்பில் மிரட்டல் விடுக்கப்பட்டதாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் *உதயன்* நாளேடு செய்தி வெளியிட்டது. தொலைபேசியில் பேசியவர் தான் வெள்ளணை தீவிலிருந்து கதைப்பதாகவும் *உதயன்* பத்திரிக்கை பிரசுரத்தை

[62] மேலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.
[63] ஊடகவியலாளர் தலைவர் அச்சுறுத்தப்பட்டுள்ளார், 7 ஜனவரி 2007, http://www.bbc.co.uk/sinhala/news/story/2008/01/080107_poddala_threatened.shtml



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்த வேண்டும் என்று மிரட்டியதாகவும், பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் இ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. விடுதலைப் புலிகளின் அத்துமீறல்கள்

## 5.1 வன்னியில் மாற்றுக் கருத்துகளை ஒடுக்கும் போக்கு

அண்மைக்காலம் வரையில், நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் பல பகுதிகளின் கட்டுப்பாடு யதார்த்தத்தில் விடுதலைப் புலிகள் வசம்தான் இருந்தது என்று சொல்லலாம். ஆனால், 2007ன் முதல் பாதியில் கிழக்கில் இலங்கை அரச படையினர் மேற்கொண்ட இராணுவ தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பிறகு தற்போது யாழ்குடாவிலும் வன்னியிலும் (யாழ்குடாவிற்கு தெற்கில் உள்ளது) மட்டுமே புலிகள் கட்டுப்பாட்டில் இடங்கள் இருக்கின்றன. விடுதலைப் புலிகளின் தலைமையகம் அமைந்துள்ள கிளிநொச்சி வன்னியில்தான் இருக்கிறது. இங்கு புலிகள் தனியாக "பொலிஸ் படையும்" "நீதிமன்றங்களும்" வைத்திருக்கிறார்கள். வவுனியாவிலிருந்து புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு ஒருவர் செல்லவேண்டியிருந்தால் அவர் முதலில் விசேட அதிரடிப்படையினர் (STF) பின்னர் விடுதலைப் புலிகள் அமைத்துள்ள நிறைய சோதனைச் சாவடிகளைக் கடந்து செல்லவேண்டும். இந்த முன்னரங்கப் பகுதிகளுக்கு இடைப்பட்ட ஆள்நடமாட்டம் இருதரப்பினராலும் கூர்ந்து கவனிக்கப்படுகிறது. கடந்த 11 ஆகஸ்ட் 2006ல் வடக்கில் பெரிய அளவிலான மோதல் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பத்திலிருந்து இப்பகுதியில் ஆள்நடமாட்டம் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மாற்றுக் கருத்துக்கள் ஒடுக்கப்படுகின்றன என்பது குறித்து சர்வதேச பொதுமன்னிப்பு சபை திரும்ப திரும்ப கவலை எழுப்பியுள்ளது.[64] இது தொடர்பாகவும் புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் வேறு விவகாரங்கள் தொடர்பிலும் கூடுதல் ஆய்வுகளை மேற்கொள்ள எமது அமைப்பு பெரிதும் ஆர்வம்காட்டிவருகிறது. 2007ன் முற்பகுதியில் அரசு மற்றும் புலிகள் கட்டுப்பாட்டு பிரதேசங்கள் என்று இரண்டு பகுதிகளிலுமே களஆய்வை மேற்கொள்ள பலமுறை அரசாங்கத்திடம் இருந்து எமது அமைப்பு அனுமதி கோரியிருந்தது. ஆனால், அதற்கு உகந்த சூழல் நாட்டில் எப்பகுதியிலுமே இல்லை என்று அரசாங்கம் பதில் தெரிவித்திருந்தது. மனித உரிமைகள் ஆணையர் லூயிஸ் ஆர்பர் கடந்த 2007 அக்டோபரில் இலங்கைக்குப் பயணம் சென்றிருந்தபோது புலிகள் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்ல அவருக்கு அரசாங்கம் அனுமதி மறுத்ததாகக் கூறப்படுகிறது. பாதுகாப்பு அச்சங்களும், அந்த சந்தர்ப்பத்தை விடுதலைப் புலிகள் ஒரு பிரச்சாரமாக பயன்படுத்திக்கொள்வார்கள் என்பதும் அனுமதி மறுக்கப்பட்டதற்கு

[64] எமது முந்தைய அறிக்கைகளைக் காண்க. "இலங்கை: விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட கொலைகள் சட்ட நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டு தொடருகின்றன", சர்வதேச பொதுமன்னிப்பு சபை, 7 ஆகஸ்ட் 2003 மற்றும் "இலங்கை:சிறார்களைப் படையில் சேர்ப்பதற்காக குடும்பத்தினரை அடிக்கும் விடுதலைப் புலிகள்" சர்வதேச பொதுமன்னிப்பு சபை, 7 ஜூலை 2004, www.amnesty.org. என்ற முகவரியில் காண்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக கூறப்பட்டிருந்தது. ஒரு நாட்டில் - அதிலும் குறிப்பாக ஆயுத மோதல் நடக்கும் ஒரு இடத்தில், உள்ளூர் மற்றும் சர்வதேச ஆர்வலர்கள் பக்கச்சார்பற்ற முறையில் சூழ்நிலையை ஆராய்வவதென்பதும் சரிபார்ப்பதென்பதும் அங்கு கருத்துச் சுதந்திரத்தையும் தகவல் பரிமாற்றத்தையும் வளர்க்கும் முக்கிய வழியாகும். இப்படிப்பட்ட காரணங்களுக்காவே இலங்கையில் ஆராய்ச்சிகளை நடத்த விரைவில் அனுமதி கிடைக்க வேண்டும், ஆராய்ச்சிகளை நடத்துவதன் மூலம் தமது ஆய்வுகளை முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்றும் சர்வதேச பொதுமன்னிப்பு சபை எதிர்பார்க்கிறது.

இலங்கை இனப்பிரச்சினை சரித்திரத்தின் பெரும்பான்மையான காலகட்டத்தில் பல்வேறு அச்சு மற்றும் ஒலிபரப்பு ஊடங்கள் கிடைக்கப்பெறுவதில் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாழும் பொதுமக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுவந்துள்ளது. "புலிகளின் குரல்" வானொலியும் புலிகளின் கட்டுப்பாட்டில் செயல்படும் பத்திரிகைகளுமே அங்குள்ளவர்களுக்கு பெரும்பாலும் தகவல் வழங்கிவருகின்றன. சட்டவிரோத ஆட்கொலைகள். சிறார்களைப் படையில் சேர்த்தல், ஆட்கடத்தல்கள், இயக்கத்தை விமர்சிக்கும் பத்திரிகையாளர்களையும் மற்றவர்களையும் அச்சுறுத்தியது போன்ற மனித உரிமை மீறல்களை விடுதலைப் புலிகள் இயக்கம் பெருமளவில் செய்துள்ளது. புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு சென்றுவரக்கூடியவர்களான உதவிப் பணியாளர்களிடம் விசாரித்ததில், ஆயுத மோதல் மீண்டும் துவங்கலாம் என்பதற்காக தங்களை தயார்செய்துகொள்ளும் விதமாக 2006ஆம் ஆண்டின் முற்பகுதியில் பெரிய அளவில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் ஒருங்கிணைத்து நடத்தியதாகத் தெரிவித்தனர். அப்பகுதியில் ஊடகவியலாளர்களின் செயற்பாடுகலை புலிகள் உன்னிப்பாக கண்காணித்துவருகிறார்கள்.

போர்நிறுத்தம் சமயத்தில் தங்களுடைய சில பகுதிகளுக்கு பத்திரிகையாளர்கள் வந்துபோக புலிகள் அனுமதித்திருந்தாலும், ஒரு செய்தியாளர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> *"பிரச்சினையான வடபகுதியில் ஊடகவியலாளர்கள் செய்தி சேகரிக்க முனையும்போது, புலிகளின் வேண்டுகோளுக்கிணங்க "பழகுவதற்கு உகந்த உதவியாளர்கள்" அவர்களுக்கு வழங்கப்படுவார்கள்., தடைசெய்யப்பட்ட இடங்களுக்குள் பத்திரிகையாளர்கள் வழிதவறியும் சென்றுவிடக்கூடாது என்பதற்காக இந்த ஏற்பாடு. ஊடகவியலாளர்கள் வன்னிக்கு வெளியிலிருந்து தமிழ் பேசும் ஆட்களை வழிகாட்டியாகக் கொண்டுவருவார்கள், ஏனென்றால் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பெரும்பான்மையான மக்கள் தமிழ் மட்டுமே பேசுவார்கள் என்பதால் பெரும்பாலும் மொழிபெயர்ப்பாளர் தேவைப்படுவார். பொதுவாக இப்படிப்பட்ட வழிகாட்டிகளை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விடுதலைப் புலிகள் தாங்களாகவே பொறுக்கியெடுத்துத் தருவார்கள். புலிகளின் அனுமதியின்றி வெளியிலிருந்து வந்தோர்க்கு வழிகாட்டியாக செயல்படுவதை மற்றவர்கள் பார்த்தால் ஆபத்து என்று அந்த ஊர்வாசிகள் தயங்குவார்கள்"*[65]

யதார்த்தப்படி சொல்லப்போனால், விடுதலைப் புலிகள் கட்டுப்படுத்தும் இடங்களில் பக்கச்சார்பற்ற செய்தியாளர் என்று யாரும் கிடையாது. தமிழ் மக்களின் ஒரே பிரதிநிதியாக தங்களைக் கூறிக்கொள்ளும் புலிகளுடைய கூற்றைக் கேள்விக்குள்ளாக்கும் விமர்சகர்களை அவர்கள் அச்சுறுத்திய சம்பவங்களைக் கருத்தில் கொண்டு பார்க்கையில், விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ நிலைபாட்டுக்கு எதிராக செய்தி வழங்கக்கூடியவர் எவரும் வன்னியில் வாழ வாய்ப்பில்லை என்பது புரியும்.

விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும், வவுனியாவிலும் கிழக்கிலும்கூட EPDP கட்சியின் செய்தித்தாள்கள் தடைசெய்யப்பட்டுள்ளன, அந்த செய்தித்தாள்களை விநியோகித்ததாகத் தெரியவந்த ஆட்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். EPDP செய்தித்தாள்கள் தீயிடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.[66] 27 டிசம்பர் 2007 அன்று *தினமுரசு* நாளிதழ்கள் ஏற்றிச்சென்ற ஒரு EPDP வண்டி கிளேமோர் குண்டில் சிக்கியது. புலிகள்தான் இதை வைத்தது என குற்றம்சாட்டப்படுகிறது.

சில சமயங்களில் வன்னிப் பிரதேசத்திற்கு வெளியிலும் ஊடகவியலாளர்கள் விடுதலைப் புலிகளின் இலக்காகியுள்ளனர். உதாரணத்திற்கு, 12 ஆகஸ்ட் 2005 அன்று கொழும்பின் பம்பலப்பிட்டியில் வைத்து ஊடகவியலாளர் **ரெலங்கி செல்வராஜாவும்** அவருடைய கணவரும் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் கொல்லப்பட்டனர். அச்சமயம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் (SLBC) வேலைபார்த்துவந்த ரெலங்கி அதற்கு முன்பு இலங்கை ரூபவாஹினியில் (SLRC) தொலைக்காட்சி தொகுப்பாளராக பணியாற்றியவர். இவரது கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று பல தகவல்கள் குற்றம்சாட்டுகின்றன. தான் கொல்லப்படுவதற்கு முன் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை விமர்சித்த *"உதயன் தரிசனம்"* என்ற நிகழ்ச்சியை அவர் வழங்கியிருந்தார். விடுதலைப் புலிகளின் எதிரி அமைப்பான புளொட் இயக்கத்துக்கு (தமிழீழ

---

[65] ஏசியாமீடியா பிளாக், *'மோதலுக்கும் நெருக்கடிக்கும் மத்தியில் செய்தி வழங்குதல்'*, பைசல் சமத், 14 ஜனவரி 2005, http://www.asiamedia.ucla.edu/article.asp?parentid=19776.

[66] "தினமுரசு ஏற்றிச்சென்ற வண்டி புலிகளால் தாக்கப்பட்டதில் நால்வர் காயம்", *Lankanewspapers.com*, http://www.lankanewspapers.com/news/2005/11/4283.html.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் விடுதலை இயக்கம்) ரெலங்கி செல்வராஜாவும் அவருடைய கணவரும் நெருக்கமானவர்களாக இருந்தனர்.[67]

## *5.2 புலம்பெயர்ந்து வாழ்வோர் நடத்தும் ஊடகங்களை இலக்குவைத்து விடுதலைப் புலிகள் செயற்பட்டமை*

இலங்கைக்கு வெளியிலுள்ள தமிழ் அச்சு மற்றும் ஒலிபரப்பு ஊடகங்களை விடுதலைப் புலி ஆதரவாளர்கள் மீண்டும் மீண்டும் அச்சுறுத்தி வந்துள்ளனர். 8 ஜூன் 2006 அன்று, இங்கிலாந்தின் மிடில்செக்ஸ், ஹெரோவில் ரெனர்ஸ் லேன் வீதியிலிருந்து ஒலிபரப்பாகும் தமிழ் செயற்கைக்கோள் வானொலியான தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் (TBC) மீது வன்முறைமிக்க தாக்குதலை நடத்தியதில் நடராஜா சேதுபரன், அனுஸ்ரீகுமார் தாமோதரம்பிள்ளை மற்றும் கந்தையா உதயகுமார் என்ற மூன்று பேர் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. நடராஜா சேதுபரன் வானொலி நிலையத்திற்குள் வந்து, வேலைசெய்துகொண்டிருந்தவர்களை துர்வார்த்தைகளால் பேசி, விடுதலைப் புலிகளின் பெயரைச் சொல்லி மிரட்டிவிட்டுப் போனதாகக் கூறும் தகவல்களை ஹெரோ நீதிமன்றத்தில் நடந்த ஒரு வழக்கு ஆராய்ந்தது.[68] விடுதலைப் புலிகள் கருணா அணியினர் ஆகியோரிடம் இருந்து தொலைபேசியில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் TBC செய்தி வெளியிட்டது.

விடுதலைப் புலிகள் மற்றும் கனடாவிலும் பிரான்சிலும் புலம்பெயர்ந்து வாழ்வோர் நடத்தும் ஊடகங்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பாக பல குற்றச்சாட்டுகள் தொடர்பாக சர்வதேச பொதுமன்னிப்பு சபை விசாரித்துவருகிறது.

## 6. சுடர் ஒலி மற்றும் தினக்குரல் நாளிதழ்களை கருணா பிரிவினர் அச்சுறுத்தியது

மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய கிழக்கு மாவட்டங்களில் *சுடர் ஒலி* மற்றும் *தினக்குரல்* நாளிதழ்களின் விநியோகத்தை குறைந்தது ஜனவரி 2007லிருந்து கருணா அணியினர் நிறுத்திவிட்டதாகக் கூறப்படுகிறது. ஆங்கில தினசரியான *டெய்லி மிர்ரர்*, தங்களுக்கு வந்த அச்சுறுத்தல்களுக்கும், கிழக்கில் கருணா அணியினர் சிறார்களைப் படையில் சேர்த்தது மற்ற மனித உரிமை மீறல்கள் செய்தது பற்றி தாங்கள் வழங்கிய செய்திகளுக்கும் இடையில் தொடர்பு இருப்பதாகக் கூறியது.[69] "எங்களது சமூகத்துக்காக நாங்கள் குறைக்கிற வேஷம்

---

[67] 'பிரச்சினையான காலகட்டங்களில் ஊடகவியல் – ஊடக சுதந்திரத்திற்கான போராட்டம்', IFJ ஊடகச் சுதந்திர அறிக்கை, பக்கம் 34, http://www.ifj-asia.org/files/ifj_south_asia_press_freedom_report_2005-2006.pdf.

[68] TBC இயக்குநர் திரு.ராமராஜுடனான நேர்காணல், அக்டோபர் 2007.

[69] ஊடகவியலாளருடனான நேர்காணல், நேர்காணல் எண் 1.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுகிறோம். வேறு வழியில்லை" என்று இலங்கையிலிருந்து செய்தி வழங்குவோர் கூறுவதாக சர்வதேச ஊடகவியலாளர் ஒருவர் கூறுகிறார்.[70]

22 அக்டோபர் 2006 அன்று மட்டக்களப்பிலுள்ள கிரான் அருகே *வீரகேசரி* நாளிதழ்களை ஏற்றிவந்த வாகனத்தைப 10 – 15 பேர் கொண்ட ஆயுதக் கும்பல் ஒன்று நிறுத்தி பத்திரிகையின் 10,000 பிரதிகளை தீயிட்டுக் கொளுத்தினர்.[71] அந்த ஆயுதக் கும்பல் கருணா அணியினர் என்று தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

[70] ஊடகவியலாளருடனான நேர்காணல், நேர்காணல் எண் 2.

[71] '*வீரகேசரி* தமிழ் நாளிதழின் 10,000 பிரதிகள் துணை-ராணுவக் குழுக்களால் தீயிடப்பட்டன' FMM அறிக்கை, 25 அக்டோபர் 2006, http://www.newssafety.com/hotspots/countries/srilanka/fmm/srilanka251006.html.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. ஊடகங்கள் மீதான அதிகரித்துவரும் அரசாங்கக் கட்டுப்பாடுகள்

*"பாதுகாப்பு படைகளை விமர்சிப்பவர் எவரானாலும் அவரை தேசத்தைக் காட்டிக்கொடுத்தவராக நாங்கள் கருதுகிறோம்"*
தேசிய பாதுகாப்பு ஊடக மையத்தின் தலைமை இயக்குநர் லக்ஷ்மண் ஹுல்லுகல்ல 8 அக்டோபர் 2007 அன்று இப்படிக் கூறினார்.

இலங்கை இனப்பிரச்சினையின் முந்தைய பல கட்டங்களில் ஊடகச் சுதந்திரத்தின் மீது கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. மோதல்கள் குறித்து செய்தி வழங்குவது, உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் மூலமாகவும் மற்ற வழிகளிலும் கடந்த ஆண்டுகளில் தடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. உதாரணத்திற்கு, ஜுன் 1998 தொடங்கி பல்வேறு காலகட்டங்களில் அதிபர் சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க உள்நாட்டு ஊடகங்களை தணிக்கை செய்யும் நடவடிக்கைகள் அடங்கிய சட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளார். எடுத்துக்காட்டாக 3 மே 2000 தேதியிட்ட ஒரு அசாதாரண அரசு வர்த்தமானி அறிவிக்கையில், யாழ்ப்பாணம் அருகிலுள்ள ஆணையிறவிலிருந்து அரச படையினர் பின்வாங்கச் செய்யப்பட்டதைப் பற்றி ஊடகங்கள் செய்தி வழங்குவதை தடுக்கும் நோக்கில் அதிகாரிகளுக்கு பாரிய அதிகாரங்களை வழங்கும் புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. வெளிநாட்டு ஊடங்களை தணிக்கை செய்வதென்பதும் இதில் அடங்கும். சட்டம் வந்து சில வாரங்களே ஆன நிலையில், மூன்று செய்தித்தாள்களை தணிக்கைக் குழு மூடியதோடு ஏராளமான கட்டுரைகளை வெளிவராமல் செய்தது. 2000ஆம் ஆண்டு ஜுலையில் அரசு கொண்டுவந்திருந்த கடுமையான ஊடக தணிக்கை முறையை ரத்துசெய்யும் வகையிலான உத்தரவை இலங்கை உச்சநீதிமன்றம் வழங்கியது. இருந்தபோதும், பதிலுக்கு இலங்கை அரசாங்கம் புதிய சட்டங்களை இயற்றியது. இறுதியில் ஒருவாராக மே 2001ல் தணிக்கை முறை அகற்றப்பட்டது.

மோதல்கள் மீண்டும் ஆரம்பித்துள்ளன என்பதை வைத்துப் பார்க்கையில் 90களின் பிற்பகுதியில் இருந்ததுபோன்ற தணிக்கை முறையை இப்போது அமல்செய்யாமல் இருப்பதற்காக அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டும். தற்போதைய நிர்வாகத்தின் கீழ் உத்தியோகபூர்வ தணிக்கை முறை இல்லையென்றாலும் ஊடகங்களின் மீது உத்தியோகபூர்வமாகவும் பிற வகையிலும் கட்டுப்பாடுகள் இருப்பது குறித்து சர்வதேச பொதுமன்னிப்பு சபை பல்வேறு கவலைகளைக் கொண்டுள்ளது.

பல்வேறு ஊடகங்களையும் அரசாங்கம் கட்டுப்படுத்துவது என்பது இலங்கையில் செய்தித் தணிக்கையை தீவிரப்படுத்துவதாய் அமைந்துள்ளது. வானொலி தொலைக்காட்சி உள்ளிட்ட பல்வேறு ஊடக வலையமைப்புகளில் அரசாங்கம் ஆதிக்கம் செலுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்ஸோசியேடட் நியூஸ்பேப்பர்ஸ் ஆ∴ப் சிலோன் லிமிடெட் (ANCL அல்லது ‘லேக் ஹவுஸ்’ என்று பொதுவாக அறியப்படும்) அதாவது இலங்கை செய்தித்தாள் குழுமம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. லேக் ஹவுஸ் மூன்று முக்கிய மொழிகளில் 20க்கும் மேற்பட்ட பிரசுரங்களைக் கொண்டுள்ளது. இது ஏராளமான எண்ணிக்கையிலும் நாட்டின் மூலைமுடுக்குகளில் எல்லாம் வாசகர்களைப் பெற்றுள்ளது. அரசு விளம்பரங்களாலும் இது பயனடைகிறது. இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் (வானொலி), இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் (தொலைக்காட்சி) மற்றும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பின் (ITN) வானொலிகள் மற்றும் தொலைக்காட்சிகளையும் அது கட்டுப்படுத்துகிறது.[72] தனியார் வானொலி சேவைகள் நேயர்களில் கணிசமான பங்கைப் பெற்றுள்ளனர் என்றாலும் அவர்களின் ஒலிபரப்பு திறன்கள் குறைவு. அவர்களால் பண்பலையில் மட்டுமே ஒலிபரப்ப முடிகிறது. ஆனால் SLBC ஒலிபரப்புகள் நாடு முழுக்கவுமாக சிற்றலை, மத்திய அலை மற்றும் பண்பலையில் ஒலிபரப்பாகின்றன. வானொலி அலைவரிசைகளுக்கு உரிமம் வழங்கும் அதிகாரம் அரசாங்கம் வசம் இருக்கிறது என்பதும் தனியார் வர்த்தக வானொலிகள் மீது மேலதிக கட்டுப்பாடுகளை ஏற்படுத்துகின்றன.

இலங்கையின் இரண்டு பெரிய தனியார் தொலைக்காட்சிகளில் ஒன்றான CBNS தொலைக்காட்சி குற்றப் புலன்விசாரணை துறையினரால் (CID) மூடப்பட்டது.[73] முறைதவறி உரிமம் வாங்கப்பட்டிருந்தது, Fashion TV ஒலிபரப்பினார்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் தொடர்பு இருக்கிறது போன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. விடுதலைப் புலிகள் தொடர்பு இருக்கிறது என்கிற குற்றச்சாட்டு எவ்வாறு கிளம்பியது என்றால், CBNS நிறுவனம் தனது தொலைக்காட்சி அலைவரிசைகளை மக்களுக்குக் கொண்டுசேர்க்கப் பயன்படுத்தும் PanAmSat 12 என்ற செயற்கைக்கோளைத்தான் புலிகளின் தொலைக்காட்சியான Eelam Sat NTTயும் பயன்படுத்துகிறது என்று அறிய வந்ததால்தான். ஆனால் உலகில் ஒளிபரப்பாகும் ஒவ்வொரு நான்கு தொலைக்காட்சிகளிலும் ஒன்றாவது இந்த செயற்கைக்கோளைப் பயன்படுத்துகின்றன என்று சொல்லும் அளவுக்கு அதிக சேனல்களை ஒளிபரப்பும் சர்வதேச செயற்கைக்கோள் தொலைக்காட்சி நிறுவனம் அது. CBNS தொலைக்காட்சி மூடப்பட்டதன் காரணமாக உலக செய்திகளும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளையும் பார்க்கும் வசதி இலங்கையருக்கு இல்லாதுபோனது.[74]

---

72 ‘இலங்கையில் ஊடகங்கள் பற்றிய ஒரு ஆய்வு’ (வடக்கு கிழக்கு அல்லாத), ஏப்ரல் 2005, மாற்றுக் கொள்கைகளுக்கான மையம், பக்கம் 3ஐயும் காண்க.

73 CBN sat மூடப்பட்டது பற்றிய அறிக்கை, 3 அக்டோபர் 2006, சுதந்திர ஊடக அமைப்பு, http://www.freemediasrilanka.org/index.php?action=con_news_full&id=330&section=news.

74 CBN sat மூடப்பட்டது பற்றிய அறிக்கை, 3 அக்டோபர் 2006, சுதந்திர ஊடக அமைப்பு, http://www.freemediasrilanka.org/index.php?action=con_news_full&id=330&section=news.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் ஊடகங்களில் அரசாங்கம் செலுத்தும் ஆதிக்கமானது அங்கு கருத்துச் சுதந்திரத்தைக் பாதிக்கும் வகையில் அமைந்திருப்பதுடன், இனப்பிரச்சினை மற்றும் மோதல்கள் தொடர்பான தகவல்களை பொதுமக்கள் பெறுவதில் தடைகளை ஏற்படுத்துகிறது.

## 7.1 "நீங்கள் எங்களுடனா, எங்களுக்கு எதிராகவா"

> *"நேரடியாகவோ மறைமுகமாகவோ பயங்கரவாதத்திற்கு உதவிக்கொண்டு அதேநேரம் ஜனநாயகம் பற்றிப் பேசுவதற்கு இனி இடமே இல்லை. ஏனென்றால் ஜனநாயகத்துக்கு கொடுக்கப்படுகின்ற இடத்தைத்தான் பயன்படுத்தித்தான் அவர்கள்(விடுதலைப் புலிகளை குறிப்பிடுகிறார்) மொத்த சமூகத்தையுமே அழிக்க முயல்கிறார்கள். பயங்கரவாதத்திற்கு ஒரு சந்தர்ப்பம் தரும் ஜனநாயகத்தை கேலிக்கூத்து என்றுதான் – பகடி என்றுதான் சொல்லவேண்டும். அது சாதாரணப் பகடி அல்ல பயங்கர ஆபத்தான ஒரு பகடி. அந்தப் பகடி காரணமாக ஏற்கனவே நமது கண்களிலிருந்து ரத்தம் வழிந்திருக்கிறது."*
> ஜனாதிபதி ராஜபக்ஷ டிசம்பர் 2006ல் தேசத்துக்கு ஆற்றிய ஓர் உரையில் இப்படிக் குறிப்பிட்டார்.

மோதல்கள் மீண்டும் துவங்கியதிலிருந்தே, பாதுகாப்பு படைகளின் செயற்பாடுகளை விமர்சிக்கும் வகையில் ஊடகங்கள் செய்தி வெளியிடக்கூடாது என்று அரசாங்கம் பல்வேறு எச்சரிக்கைகளை விடுத்துள்ளது. தேசிய பாதுகாப்பு நலன்களைக் கருதி இராணுவம் பற்றிய அனைத்து செய்திகளுக்கும் செய்தி ஆசிரியர்கள் இராணுவத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும் என உள்நாட்டு ஊடகங்களிடம் இராணுவ அமைச்சு செப்டம்பர் 2006ல் அறிவித்திருந்தது.[75] மோதல்கள் குறித்த செய்திகளை பாதுகாப்பு விவகாரங்களுக்கான ஊடகத் தகவல் மையத்திடம் சமர்பிப்பதில் தாங்கள் அழுத்தங்களை உணருவதாக பல ஊடகவியலாளர்கள் தொலைபேசி நேர்காணல்களின்போது சர்வதேச பொதுமன்னிப்பு சபையிடம் தெரிவித்துள்ளனர். ஊடகங்களும் அதன் பணியாளர்களும் தாங்கள் தெரிவுசெய்வது "பயங்கரவாதிகளையா" அல்லது இலங்கையின் மக்களைக் "காக்கின்ற" அரசாங்கத்தையா என்பதை என்பதைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்; அதுவே தங்கள் கருத்து என இலங்கை அரசாங்கம் தெளிவுபடுத்தியுள்ளது. "பயங்கரவாதத்துக்கெதிரான யுத்தம்" என்ற பாணியிலான பிரசங்கங்களை அரசாங்கம் மீண்டும் மீண்டும் செய்வதன் காரணமாய் சுய தணிக்கை செய்துகொள்ளச் செய்கின்ற பெரும் அழுத்தம் மக்களிடம் ஏற்பட்டுள்ளது. அரசாங்க நிலைபாட்டை விட்டு

---

[75] நாட்டின் மனித உரிமைகள் நடைமுறை பற்றிய அறிக்கை, 'இலங்கை 2006', ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் நலனுக்கான அலுவலகம் வெளியிட்டது, 6 மார்ச் 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுவிச் செல்பவர்கள் "பயங்கரவாதிகள்" அல்லது "துரோகிகள்" என்று முத்திரை குத்தப்படும் ஆபத்தை எதிர்கொள்கின்றனர்.

24 மே 2007 அன்று *டெய்லி மிர்ரர்* நாளிதழில் "நான் தேசவிரோதி" என்ற தலைப்பில் கட்டுரை எழுதிய சஞ்சன ஹட்டுடொவ[76] பின்வருமாறு கருத்து கூறுகிறார்:

> *"அரசாங்கம் செய்வது சரியா என்று கேள்வியெழுப்பும் சிவில் சமூக மற்றும் சிவில் உரிமைகள் ஆர்வலர்களை அரசாங்கத்தில் உள்ளவர்கள் தேசவிரோதிகள் என்று குற்றம்சாட்டுவது அதிகரித்துவருகிறது. துரோகிகள், தீண்டத்தகாதவர்கள் என்று முத்திரை குத்தப்பட்டவர்கள், கடந்த ஆண்டில் பகைமை பாராட்டும் ஒரு அரசாங்கத்தை மட்டும் எதிர்கொள்ளவில்லை. அதிகரித்துவரும் பகைமை கொண்ட தென்னிலங்கை மக்களையும் அவர்கள் எதிர்கொள்கிறார்கள். நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பே கடுமையாக அரித்துப்போகச் செய்துள்ள இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக பொதுமக்கள் அறிந்துகொள்ளக்கூடிய வகையிலான தகவல்கள்களுக்கு பெரும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. இந்த அரசாங்கத்தை ஏன் நாங்கள் எதிர்க்கிறோம் என்று அம்மக்கள் புரிந்துகொள்ளவில்லை... தான் எதிர்த்துப் போராடிவரும் பயங்கரமாகவே இந்த அரசு மாறிவருகிறது. அந்த பயங்கரவாதத்தையே இது மென்மேலும் முன்னெடுத்துவருகிறது."*

நவம்பர் 2007ல் நடந்த ஒரு அமைச்சரவைக் கூட்டத்தில், லங்கா இ-நியூஸ் என்ற இணைய தள செய்திச் சேவையை வருணித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ "விடுதலைப் புலிகளுக்கு இவர்கள் எவ்விதத்திலும் மேம்பட்டவர்கள் அல்ல" என்று குறிப்பிட்டதை ஒரு உதாரணமாகச் சொல்லலாம்.[77] கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் JVP கட்சியின் செயலாளர் விமல் வீரவன்ச, 1 பிப்ரவரி 2006 அன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில், சண்டே லீடர் பத்திரிகையின் முதன்மை செய்தி ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கெவை ஒரு துரோகி என்றும் விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து அவர் சதிசெய்கிறார் என்றும் குறிப்பிட்டதாகக் கூறப்படுகிறது. மாற்றுக் கருத்துச் சொன்னாலே துரோகி என்று முத்திரை குத்தப்படும் இந்த அவல நிலை, முந்தைய பல சம்பவங்களில் விடுதலைப் புலிகள் விமர்சனங்களைக் கையாண்ட விதத்தை எதிரொலிப்பதாக இருக்கிறது. தற்போது அரசாங்கத்தை விமர்சிப்பவரகள் விடுதலைப் புலி

---

[76] "நான் தேசவிரோதி", 23 மே 2006, *டெய்லி மிர்ரர்,* http://www.dailymirror.lk/2007/05/23/opinion/03.asp.

[77] ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்படி முத்திரை குத்தியதை விமர்சித்து வெளிப்படையான பதில் ஒன்றை லங்கா ஈநியூஸ் 29 அக்டோபர் 2007 அன்று பிரசுரித்தது. இது சிங்கள மொழியிலுள்ள இணையப் பக்கங்களில் மட்டுமே இருக்கிறது. இதனைப் பார்ப்பதற்கான முகவரி: http://www.lankaenews.com/Sinhala/news.php?id=3448.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவாளர்கள் என்றும் "துரோகிகள்" என்றும் முத்திரை குத்தப்படுவது பற்றி கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான உயன்கொட பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> *"மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான விவகாரங்களில் அரசாங்கம் இப்படி விடுதலைப் புலிகளின் கண்ணாடிப் பிம்பமாக இருப்பது அரசாங்கத்துக்கு தன் மீது தானே மண்ணை வாரி இறைத்துக்கொள்ளும் விஷயமாகும். இம்மாதிரியான போக்குகள் அரசாங்கம் தார்மீக அடிப்படையில் வலுவான இடத்தைப் பிடிப்பதை தடுத்துவிடும்."*[78]

மீடியாவைஸ் அமைப்பு மற்றும் நாடுகடந்து வாழும் ஊடகவியலாளர்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் 10 அக்டோபர் 2007 அன்று ஐக்கிய ராஜ்ஜியத்தின் ஹவுஸ் ஆஃப் காமன்ஸில் இலங்கையில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு குறித்து கூட்டம் ஒன்று நடந்தது. FMM இயக்கத்தைச் சேர்ந்த சுனந்த தேஷப்பிரிய, ABC (இலங்கை) வானொலியைச் சேர்ந்த நடராஜா குருபரன் உள்ளிட்ட பலர் அக்கூட்டத்தில் உரையாற்றினார்கள். "லண்டன் சென்று இலங்கையில் பத்திரிகையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்காக விடுதலைப் புலிகளிடம் இருந்து அந்த இலங்கைப் பேச்சாளர்கள் பணம் வாங்கியிருக்கிறார்கள்" என்று அரச ஊடகங்களின் சில பிரிவுகள் அவர்கள் இலங்கை திரும்பியவுடன் செய்தி வெளியிட்டுள்ளன.[79]

மனித உரிமைகள் மதிக்கப்படுவதற்கும் பாதுகாக்கப்படுவதற்கும் ஆதரவான பிரச்சாரத்தில் ஈடுபட்டுவரும் ஊடகப் பணியாளர்கள் உள்ளிட்ட மனித உரிமை பாதுகாவலர்களுக்கு எதிராக இலங்கையின் அரசு ஊடகாங்களும் சில அரசு அதிகாரிகளும் மக்கள் மத்தியில் தொடுத்துள்ள பிரச்சாரம் குறித்து சர்வதேச பொதுமன்னிப்பு சபை கவலைகொண்டுள்ளது. மார்ச் 2007ல் ஜெனிவாவில் மனித உரிமைகள் சபையின் கூட்டம் நடைபெறப்போவதற்கு சற்று முன்னதாக மனித உரிமை ஆர்வலர்களை மோசமாகக் காட்டும் பல கட்டுரைகளும் உரையாடல் நிகழ்ச்சிகளும் இலங்கை அரச ஊடகங்களில் இடம்பெற்றுள்ளன.[80]

## *7.2 இனப்பிரச்சினை மற்றும் ஊழல் விவகாரங்களைப் பற்றி செய்தி வழங்கும் பத்திரிகையாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள்*

அரசாங்க வார சஞ்சிகையான சண்டே அப்சர்வர் பத்திரிகையின் ஆசிரியர் **ராஜ்பால் அபெய்நாயகெ** அக்டோபர் 2006ல் தனது பதவியிலிருந்து

[78] 'யுத்தமும் அதனால் பாதிக்கப்படும் பிறரும்', ஜெயதேவ உயன்கொட, 14 நவம்பர் 2007, http://www.dailymirror.lk/2007/11/14/opinion/01.asp

[79] http://www.freemediasrilanka.org/index.php?action=con_news_full&id=746&section=news.

[80] "துரோகி என்று முத்திரை குத்தப்படுவதை அரசு சாரா உதவி அமைப்புகள் நிராகரித்துள்ளன", எழுதியவர் ஈஸ்வரன் ரட்ணம்,4 ஜூலை 2007, http://www.dailymirror.lk/2007/04/11/front/04.asp



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கப்பட்டார். "ஊக்கமளிக்க வேண்டிய நேரத்தில், தனது "துருப்புகளை" விரக்தியடையச் செய்யும் ஒரு அரசாங்கம்" என்ற தலைப்பில் இராணுவ அமைச்சை விமர்சித்த கட்டுரை ஒன்றை பிரசுரித்தார் என்பதற்காக அவர் பதவிநீக்கப்பட்டிருந்தார்.[81] *மாவ்பீமா* செய்தித்தாளின் கட்டுரைப் பிரிவு இயக்குநர் **ருவன் பெர்னாண்டெஸ்** தனக்கு தொலைபேசியில் கொலை மிரட்டல்கள் வருவதாக ராஜகிரிய காவல் நிலையத்தில் 22 ஜனவரி 2007 அன்று புகார் செய்திருந்தார். பாதுகாப்பு செயலர் கோதாபய ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் பற்றி கட்டுரைகள் எழுதுவதை நிறுத்திக்கொள்ளவேண்டும் என இனம்தெரியாத ஆட்கள் ருவன் பெர்னாண்டெஸை எச்சரித்துள்ளனர். கொழும்பிலிருந்து வெளியாகும் *டெய்லி மிர்ரர்* நாளிதழின் ஆசிரியர் **சம்பிக லியநாரச்சி**க்கு 17 ஏப்ரல் 2007 அன்று பாதுகாப்பு செயலர் கோதபய ராஜபக்ஷவிடமிருந்து கொலை மிரட்டல்கள் வந்துள்ளன. ஆயுத மோதல்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் சிரமங்கள் குறித்து கட்டுரைகள் எழுதியதற்காக அப்பத்திரிகையின் செய்தியாளர் ஒருவரை "ஒழித்துக்கட்டிவிடுவோம்" என்றும் பாதுகாப்பு செயலர் அச்சுறுத்தியுள்ளார்.[82] இலங்கை மத்திய வங்கியில் முறைகேடுகள் நடப்பதாகக் குற்றம்சாட்டிய ஒரு விசாரணைக் கட்டுரை தொடர்பாக CID பிரிவினர் *மார்னிங் லீடரின்* ஆசிரியர் **சொனாலி சோமரசிங்கவை**" விசாரித்துள்ளனர்.[83] அக்கட்டுரைக்காக விபரம் வழங்கியவர் யார் என்று கேட்டு பொலிசார் அழுத்தம் தந்த விதத்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டித்துள்ளது. "தங்களுக்கு விபரம் வழங்கியவர்கள் யார் என்று பத்திரிகையாளர்கள் தெரிவிக்க வேண்டுமென்று வற்புறுத்தி அதிகாரிகள் மேற்கொண்ட இதுபோன்ற நடவடிக்கை விசாரித்து உண்மை கண்டறியும் ஊடகவியலுக்கே அச்சுறுத்தலாக அமைந்துள்ளது" என்று அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது.[84]

மின்–அஞ்சல்கள் மூலமாக பத்திரிகையாளர்களுக்கு விடுக்கப்படும் கொலை மிரட்டல்கள் குறித்தும் சர்வதேச பொதுமன்னிப்பு சபை கவலைக்கொண்டுள்ளது. *லங்கா ஈ நியூஸ்* ஆசிரியர் **சதருவன் சேனதீர**வுக்கு நடந்ததை ஒரு உதாரணமாகச் சொல்லலாம். பட்டினிக்கு எதிரான போராட்டம் (ACF) என்ற அமைப்பின் 17 உதவிப் பணியாளர்கள் இலங்கையில் தண்டிக்கப்படும் பாணியில் பயங்கரமாகக் கொல்லப்பட்டது

[81] காண்க http://www.sundayobserver.lk/2006/10/08/fea02.asp.

[82] இந்தச் சம்பவம் பல்வேறு ஊடகங்களில் வெளிவந்தது. 'இலங்கையில் ஊடகமும் சுதந்திரமும்?' இண்டர் பிரஸ் சர்வீஸ்; *'புரிதலுக்கு அப்பாற்பட்டு இலங்கை'*, IPS செய்தியாளர்கள், http://ipsnews.net/news.asp?idnews=37582, 2 மே 2007; 'இலங்கையில் மனித உரிமைகளும் அரசியல் மாற்றுக் கருத்துகளும் மதிக்கப்பட வேண்டும்' அமீன் இஸ்ஸதீன் எழுதியது.
http://www.khaleejtimes.com/DisplayArticleNew.asp?xfile=data/opinion/2007/April/opinion_April80.xml&section=opinion&col=

[83] 'மார்னிங் லீடர் செய்தி ஆசிரியர் CIDக்களால் விசாரிக்கப்பட்டதை ஊடக கண்காணிப்பு அமைப்பு கண்டிக்கிறது' *தமிழ்நெட்*, 16 மே 2007.

[84] "BASL அமைப்பு சொனாலிக்கு ஆதரவாக குரலெழுப்பியுள்ளது", டெய்லி மிர்ரர், 25 மே 2007.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி செய்தி வழங்கியதற்காக சேனதீரவுக்கு கொலை மிரட்டல்கள் வந்தன.[85] "17 உதவிப் பணியாளர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தில் குற்றவியல் தடையங்கள் அழிக்கப்பட்டுள்ளன" என்ற தலைப்பில் 27 ஜூன் 2007 அன்று *லங்கா ஈ நியூஸ்* கட்டுரை ஒன்றை வெளியிட்டது. கட்டுரை வெளியான சில நேரத்திலேயே அச்சுறுத்தும் வகையிலான பல தொலைபேசி அழைப்புகள் சதருவன் சேனதீரவுக்கு வந்திருந்தன. கொலை மிரட்டல் விடுக்கும் மின்-அஞ்சல் ஒன்றும் அவருக்கு வந்திருந்தது. "பத்திரிகைக்காரர்கள் உண்மையை திரித்துக்கூறி நாட்டை ஆபத்தில் தள்ளும்போது எனக்கும் இந்த நாட்டின் அப்பாவி மக்களுக்கும் ஒரே ஆசைதான் தோன்றும். உங்கள் மீது எவ்வளவுக்கு சீக்கிரம் ஒரு 5.52 எம்.எம். அல்லது ஒரு 7.62 எம்.எம். குண்டு பாய்கிறதோ அவ்வளவுக்கு நல்லது என்று ஆசைப்படுவோம்." என்று அந்த மின் - அஞ்சலில் குறிப்பிடப்பட்டிருந்தது.[86]

ஊழல் விவகாரங்கள் பற்றி செய்திவழங்கும் ஊடகவியலாளர்களும் இவ்வாறு இலக்குவைக்கப்பட்டுள்ளனர். இராணுவ விவகாரங்கள் பற்றி கட்டுரை எழுதும் **இக்பால் அதாஸ்**சுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக அரசாங்கம் நியமித்திருந்த மெய்காவலர்கள் 16 ஆகஸ்ட் 2007 அன்று விலக்கப்பட்டிருந்தார்கள். ஆயுத பேரங்கள் சம்பந்தமாக அதாஸ் எழுதிய கட்டுரைகளின் காரணமாக ஆத்திரமடைந்த பாதுகாப்பு படை உறுப்பினர்களால் மீண்டும் மீண்டும் அச்சுறுத்தல்கள் வரவே அவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. *சண்டே டைம்ஸ்* பத்திரிகையின் இணை இயக்குநரும், *ஜேன்ஸ் பாதுகாப்புதுறை வார சஞ்சிகை* மற்றும் *சி.என்.என்.* தொலைக்காட்சியின் நிருபரும் ஆன இக்பால் அத்தாஸ், இலங்கை இராணுவம் மிக்-27 ரக யுத்த விமானங்கள் வாங்கியதில் ஊழல் நடந்துள்ளது என்று குற்றம்சாட்டும் கட்டுரை ஒன்றை 11 ஆகஸ்ட் 2007 அன்று வெளியிட்டிருந்தார்.[87] அதிகாரிகளின் இந்த அச்சுறுத்தல்கள் இக்பால் அதாஸை ஆபத்தில் தள்ளியுள்ளது; அதிலும் குறிப்பாக அவர் எளிதில் தாக்கப்படும் சூழ்நிலை நிலவும் நேரத்தில் இப்படி நடந்துள்ளது; ஆயுத பேரங்கள் பற்றி அவர் கட்டுரைகள் எழுதுவதை மிரட்டி நிறுத்த வேண்டும் என்கிற முயற்சியாகவே இது நடந்துள்ளது என்று சர்வதேச பொதுமன்னிப்பு சபை கவலைகொண்டுள்ளது.

---

[85] காண்க: சர்வதேச பொதுமன்னிப்பு சபை அறிக்கை UA issued AI Index: ASA 37/016/2007, 4 ஜூலை 2007

[86] காண்க, 'இலங்கை: பாதுகாப்பு அச்சம் / கொலை மிரட்டல்: சதருவன் சேனதீர', AI Index: ASA 37/016/2007.

[87] 'மிக் 27 ஒப்பந்தத்தின் இரகசியங்களை வெளியிட்டதால் கட்டுரையாளர் இக்பால் அதாஸுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு விலக்கிகொள்ளப்பட்டது' லங்கா ஈநியூஸ், 16 ஆகஸ்ட் 2007,
http://www.lankaenews.com/English/news.php?id=4551&PHPSESSID=30da23b0e68afbfbd2ce1bf694169182.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *7.3 போராட்டங்களின்போது பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள்*

ஐக்கிய மக்கள் இயக்கம் (UPM) என்ற சமாதான அமைப்பு 8 ஜனவரி 2007 அன்று நடத்திய ஆர்ப்பாட்டத்தில் ஒரு அமைச்சர் தலைமையில் சுமார் நூறு பேர் கொண்ட கும்பல் தடியடி நடத்தியுள்ளது. மோதல்கள் மீண்டும் ஆரம்பித்திருப்பதைக் கண்டித்தும், இலங்கையில் விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்தும் UPM இயக்கத்தினர் அப்போராட்டத்தைச் செய்தனர். எதிர்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி (UNP), வேறுபல இடதுசாரிக் கட்சிகள் உள்ளிட்டு முன்னணி சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகள் இந்த ஆர்ப்பாட்டக் கூட்டத்தில் உரையாற்றவிருந்தனர். பத்திரிகையாளர் அஜித் சேனவிரத்ன இது பற்றி பின்வருமாறு கூறுகிறார்:

> *"நான் மேடைக்கு அருகில் சென்றுகொண்டிருக்கையில், அதோ பாருங்கள் மார்வின் சில்வா என்று யாரோ ஒருவர் குரல்கொடுத்தார். (தொழிலாளர் நல துணை அமைச்சரான மார்வின் சில்வா, அந்த இடத்துக்கு ஆயுதக் கும்பலை கூட்டிவந்திருந்ததைப் பலர் பார்த்திருந்தனர்.) "அவனை அடியுங்கள், எல்லோரையும் அடித்து நொறுக்குங்கள்" என்று அமைச்சர் கத்தினார். பின்னர் அந்த கும்பல் என்னைத் தாக்கத் தொடங்கியது."[88]*

அன்றைய தினம் தாக்கப்பட்டவர்களில் *லங்கா ஈ நியூஸைச்* சேர்ந்த **அஜித் சேனவிரத்ன** மற்றும் *ஹரய* என்ற மாதசஞ்சிகை மற்றும் பிபிசி சிங்கள சேவைக்கு செய்தி வழங்கும் **ஞானஸ்ரீ கொத்திகொட** ஆகியோரும் அடங்குவர். ஒப்பந்த அடிப்படையில் பலருக்காகவும் பணியாற்றக்கூடிய புகைப்பட நிபுணர் ஒருவரும் தாக்கப்பட்டு அவர் புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்த கருவியும் அபகரிக்கப்பட்டுள்ளது. பொலிசாரிடம் முறையிட்டும் அவர்களில் ஒருவரும் சம்பவ இடத்திற்கு வரவில்லை.[89]

## *7.4 சண்டே லீடர் பிரசுர அலுவலகத்தில் தீவைக்கப்பட்ட சம்பவம்*

20 நவம்பர் 2007 அன்று லீடர் குழுமத்தின் பிரசுர அலுவலகம் முகமூடி அணிந்த ஆயுததாரிகளால் தாக்கப்பட்டது.[90] கல்கிசை பொலிசாரின் கூற்றுப்படி, சுமார் 10 ஆயுததாரிகள் அச்சகத்திற்குள் பலவந்தமாக நுழைந்து,

---

[88] 'இலங்கையில் யுத்த எதிர்ப்பு கூட்டத்தில் கும்பல் புகுந்து தாக்குதல்', எழுதியவர் சரத் குமார், 13 ஜனவரி 2007, http://www.wsws.org/articles/2007/jan2007/sril-j13.shtml.

[89] 'யுத்த எதிர்ப்பு கூட்டத்தில் செய்தி வழங்கிய இரண்டு ஊடகவியலாளர்களைத் தாக்கிய கும்பல், புகைப்படக்காரரை அடித்து, கெமராவைப் பிடுங்கியது' FMM அறிக்கை, 11 ஜனவரி 2007, http://www.ifex.org/es/content/view/full/80264/

[90] காண்க, " இலங்கை பத்திரிகையின் பிரசுர அலுவலகம் தாக்கப்பட்டு தீவைக்கப்பட்டதை IFJ கண்டிக்கிறது' 21 நவம்பர் 2007, FMM http://www.freemediasrilanka.org/index.php?action=con_all_full&id=93&section=news_in மற்றும் http://www.transcurrents.com/tamiliana/archives/423.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீக்கிரையான சண்டே லீடர் அச்சகம் © லங்கா ஈநியூஸ்

அச்சகப் பணியாளர்களை மண்டியிடச் செய்துவிட்டு, இயந்திரங்கள் மீதும் பத்திரிகைகள் மீதும் பெட்ரோல் ஊற்றி தீவைத்துள்ளனர். ரதமாலன இராணுவ மற்றும் உள்நாட்டு விமான நிலையத்திற்கு அருகில் உயர் பாதுகாப்பு வலய பகுதியில் இந்தப் பிரசுர அலுவலகம் அமைந்துள்ளது.

இலங்கை செய்தி ஆசிரியர்கள் சங்கம் இத்தாக்குதலை கண்டித்ததுடன் பின்வருமாறு தெரிவித்தது:

*"அந்த பிரசுரக் குழுமத்தின் வெளியீடுகளான இருடினா, சண்டேச்லீடர், மார்னிங் லீடர் ஆகியவை தற்போதைய அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்துவந்தன என்பதால் பிரசுர அலுவலகத்தின் பாதுகாப்பை உறுதிசெய்வது என்பது அதன் நிர்வாகத்துக்கு பெரும் சுமையாக மாறிவிட்டிருக்கிறது"*

## *7.5 கலை கலாச்சார படைப்புகளின் கருத்துச் சுதந்திரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிவருகிறது*

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் உக்கிரமடைந்துந்த அதேநேரம் நடிகர்கள், எழுத்தாளர்கள் மற்றும் சினிமா இயக்குநர்கள் உள்ளிட்ட கலைஞர்களுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாக தெரிவிக்கும் செய்திகளும் கவனத்தை ஈர்க்கும் அளவுக்கு அதிகரித்துள்ளன.

**புனித குடும்ப மடத்தின் நாடகக் குழு அச்சுறுத்தலுக்குள்ளான சம்பவம்**

கலுத்தரையின் புனித குடும்ப மடத்தைச் சேர்ந்த மாணவர்கள் *தூதிகவோ* (முடிவில்லா நடவடிக்கை) என்ற பெயரில் யுத்த எதிர்ப்பு நாடகம் ஒன்றை கொழும்பின் லியோனல் வெண்ட் அரங்கத்தில் 8 டிசம்பர் 2005 அன்று நடத்தினார்கள். நாடகம் நடக்க ஆரம்பித்த சில நாட்களிலேயே, அதன் இயக்குநரும் புனித குடும்ப மடத்தின் முதல்வருமான, சகோதரி தீபா பெர்னாண்டோவுக்கு கடுமையான மிரட்டல்கள் வந்தன. 12 டிசம்பர் 2005 தேதியிட்ட கடிதம் ஒன்று விநியோகிக்கப்பட்டது, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு "பயங்கரவாதி" என்கிற ஒரு வரியை சேர்க்கும் வகையில் நாடகம் மாற்றப்படவேண்டும் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. வீதிய பண்டார இயக்கத்தினரால் அனுப்பப்பட்டிருந்த அக்கடிதத்தின் சில வரிகள் பின்வருமாறு:

*" அமைதியின் பெயரால் ஒரு எச்சரிக்கை!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தசாப்தங்கள் பழமையான இந்த மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் பெருந்தடை, இந்த நாட்டில் பயங்கரவாதிகளுக்கு பாதுகாப்பு வழங்குகின்ற அமைப்புகள் இருப்பதுதான். பிரபாகரன் என்ற அந்தக் காட்டுமிராண்டிக் கொலைகாரன் வடக்கில் ஒரு ஆயுத மோதலை நடத்திக்கொண்டிருக்க இங்கே தெற்கிலும் ஒரு குழு பிரபாகரனுடைய மோதல்களை நடத்திக்கொண்டிருக்கிறது... இந்த நாடகத்தை நீங்கள் மறுபடியும் அரங்கேற்றுகிறீர்கள் என்றால், பிரபாகரன் ஒரு பயங்கரவாதி என்று நீங்கள் தெரிவிக்க வேண்டும். எங்களுடைய இந்த எச்சரிக்கையை நீங்கள் ஒழுங்காக கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்...விளைவுகள் விபரீதமாக இருக்கும்."*

இந்தக் கடிதத்தின் பிரதி ஒன்று மடத்தின் முதல்வருக்கும், நாடக ஆசிரியர் மஹிந்த நமலுக்கும், கொழும்பில் மாணவர்கள் நாடகத்தை அரங்கேற்ற ஆதரவு தந்த சினிமா இயக்குநர் தர்மஸ்ரீ பண்டாரநாயகவுக்கும் அனுப்பப்பட்டிருந்தது. *தூதிகவோ* நாடகத்தை அரங்கேற்றுவதை இயக்குநரும் மாணவர்களும் நிறுத்திவிட்டனர்.[91] வீதிய பண்டார என்பவர் ஒரு சிங்கள தேசியவாத நாயகன். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் JVP மற்றும் JHU ஆகிய இரண்டு கட்சிகளுமே வீதிய பண்டாரவின் பெயரில் இயக்கங்களை வைத்துள்ளன

## 7.6 அக்ஷர்யா தணிக்கை செய்யப்பட்ட சம்பவம்

**அசோக ஹண்டாகம**வின் *அக்ஷர்யா* (நெருப்பு எழுத்து) என்ற திரைப்படம் தணிக்கை செய்யப்பட்டதை எதிர்த்து கடந்த ஏப்ரல் 2006ல் பல்வேறு சிவில் சமூக குழுக்கள் போராட்டங்களை நடத்தியிருந்தன. இத்திரைப்படத்தின் கதை ஒரு சற்று மேம்பட்ட நடுத்தர வர்க்க குடும்பத்தைப் பற்றியது. ஒரு கொலையைச் செய்த தனது மகனை ஒரு குற்றவியல் நீதிபதி சட்டத்தின் பிடியிலிருந்து மறைத்து வைக்கிறார் என்பதாக இப்படம் செல்லும். இலங்கை திரைப்பட தணிக்கை குழுவும் பொதுமக்கள் நுகர்வுக்குரிய கலைப் படைப்புகள் வாரியமும் (PPB) *அக்ஷர்யா*வுக்கு ஆரம்பத்தில் இது வயதுவந்தோர் மட்டும் பார்க்கக்கூடிய படம் என்று தரம் பிரித்து அனுமதி வழங்கியது. நாட்டுக்குள் இப்படத்தை திரையிட 2006 ஏப்ரல் முற்பகுதியில் அனுமதி கிடைத்திருந்தது. ஆனால் படம் வெளியாகி சிறிது காலத்தில், கலாச்சார அமைச்சர் மஹிந்த யாபா அபயவர்தன, இந்தப் படம் உருவாக்கப்பட்டபோது குழந்தைகள் துஷ்பிரயோகம் நடந்தது என்று கூறி, இந்தப் படத்திற்கு வழங்கியிருந்த அனுமதியை PPB வாரியம் திரும்பப் பெறவேண்டும் என உத்தரவிட்டார்.[92]

[91] இந்த சம்பவம் குறித்த ஆவணப் படம் ஒன்றை *தூதிகவோ* என்ற பெயரிலேயே தர்மஸ்ரீ பண்டாரநாயகெ எடுத்தார். த்ரிகோண் கலை மையம்,2006

[92] 'அக்ஷர்யா (நெருப்பு எழுத்து) திரைப்படத்துக்கு இலங்கை அரசு தடை', எழுதியவர் விஜெ தியாஸ், *ஏஷியன் ட்ரிபியூன்*, 30 மே 2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய், தன் மகனுடன் நிர்வாணமாக குளியல் தொட்டியில் இருப்பதுபோன்ற ஒரு காட்சி இப்படத்தில் உண்டு, "வயதுவந்தோர்க்கு மட்டும்" என்ற வரையறையுடன் PPB வாரியம் இக்காட்சியை முன்பு அனுமதித்திருந்தது. ஆனால் இந்தப் படத்தில் முக்கிய வேடத்தில் நடித்த சிறுவனும் தாய் வேடத்தில் நடித்தவரும் குற்ற புலன்விசாரணை துறையினரால் பிடித்துச்செல்லப்பட்டு, படத்தில் வரும் அந்தக் காட்சி படமாக்கப்பட்ட விதம் குறித்து விசாரிக்கப்பட்டனர். இந்தப் படத்தில் நடித்த பிறரும், தொழில்நுட்பக் கலைஞர்களும்கூட விசாரிக்கப்பட்டனர். இந்தப் படத்தில் நிர்வாணக் காட்சிகள் இடம்பெற்றமை அது தடைசெய்யப்பட்டதற்கான உண்மையான காரணம் அல்ல என்று எம்மிடம் தொலைபேசியில் பேசிய பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார். ஊழல் விபச்சாரம் போன்றவை மலிந்து கிடக்கும் கொழும்பு வாழ்க்கையின் இருள் படிந்த விஷயங்கள் குறித்து இத்திரைப்படம் கேள்விகளை எழுப்பியதே காரணம் என்று கூறப்படுகிறது.

கலாச்சார அமைச்சர் இவ்விஷயத்தில் தலையிட்டது, இலங்கையில் திரைப்படம் மற்றும் பிற கலைப் படைப்புகளைத் தீர்மானிக்கும் ஒரே நடுவராக அமைந்துள்ள PPB வாரியத்தின் சுயாதீனத்தைக் கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது. கலாச்சார மற்றும் கருத்துச் சுதந்திர விஷயங்களில் ஆர்வம் காட்டுவோரின் அமைப்பான நவம்பர் குழு பின்வருமாறு குறிப்பிட்டது:

> *"சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தத்திற்கு இலங்கை உடன்பட்டுள்ளது என்பதை இந்நாட்டின் மக்களாகிய நாங்களும் அதன் அதிகாரிகளும் கருத்தில் கொள்ளவேண்டும். தகவல் பெறுவதற்கும், கருத்துப் பரிமாறுவதற்கும், மொழியைப் பயன்படுத்துதற்கும் மக்களுக்கு உள்ள உரிமைகளை அரசாங்கம் மீறக்கூடாது என்பதுடன், அதை ஊக்கத்துடன் பாதுகாக்கவும் வேண்டும் என்று அந்த ஒப்பந்தத்தின் நன்கு அறியப்பட்ட 19ஆம் ஷரத்து கூறுகிறது."*[93]

டாக்டர். லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், வசந்த ஒபெயசேகர, தர்மசேன பதிராஜா, தர்மஸ்ரீ பண்டாரநாயக மற்றும் பிரன்ன விதனகே உட்பட்ட இலங்கையின் மூத்த திரைப்பட இயக்குநர்கள் இந்தப் படம் திரையிட அனுமதிக்கப்பட வேண்டும் என்று கோரிப் பிரச்சாரம் செய்தார்கள்.

அக்ஷர்யா திரையிடப்படுவதற்குத் தடைவிதித்த அரசாங்கத்தின் முடிவை எதிர்த்து அசோக ஹண்டாகம தொடர்ந்த அடிப்படை உரிமை வழக்கு விசாரணையின்போது, இந்தப் படம் நீதித்துறையை மோசமாகக்

[93] நவம்பர் இயக்கம் எழுதி வெளியிட்ட கடிதம், ஏப்ரல் 2007.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுகிறது என்று தலைமை நீதிபதி கருத்துக் கூறினார். ஹண்டாகமவையும் அவருடன் பணியாற்றியவர்களையும் "நீங்கள் காவலர்கள் வைத்துக்கொண்டு நடமாடுகின்ற நிலை வரலாம்"[94] என்று நீதிமன்றத்தில் கூறி அச்சுறுத்தியதாகவும் கூறப்படுகிறது. "உணர்வலைகளைத் தூண்டும் அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் சினிமாவில் இடம்பெறுவதைத் தடுக்கும்" அரசாங்க நடவடிக்கையின் ஒரு அங்கமாகவே அரசாங்கம் இப்படத்திற்கு தடைவிதிக்க முயற்சிக்கிறது என்று அதன் இயக்குநர் கூறுகிறார்.[95] இயக்குநர் தொடுத்த அடிப்படை உரிமைகள் வழக்கு உச்சநீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. யுத்த எதிர்ப்பு கருத்துகளுடனான ஹண்டாகமவின் முந்தையப் படைப்புகளுக்காகவும் அவர் விமர்சனம் செய்யப்பட்டுள்ளார். *அக்ஷர்யா* தணிக்கை செய்யப்பட்டது குறித்து விமுக்தி ஜெயசுந்தர என்ற இயக்குநர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> *"...ஏதாவது ஒன்று அரசாங்கத்தின் அதிகாரத்தை விமர்சித்தாலோ அல்லது புத்தமத கலாச்சார கட்டமைப்பு என்று சொல்லப்படுகின்றதே – அதை எதிர்த்துக் கேள்விகேட்டாலோ அது தடைசெய்யப்படும் என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது... யுத்த எதிர்ப்புத் திரைப்படங்களில் நியாயமாகவே இராணுவத்தின் ஆட்சேபனைக்குரிய சில விடயங்கள் இருக்கலாம் என்று சிலபேர் தவறுதலாக எண்ணியிருக்கக்கூடும். ஆனால் இதெல்லாம் கலைஞர்கள் மற்றும் திரைப்பட இயக்குநர்களின் கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் விஷயம் என்பதுதான் உண்மை என்று இப்போது தெளிவாகியிருக்கிறது."*[96]

*சுடு கருரோ பெதி* (வெள்ளைச் சூடம்) என்ற ஒரு வாராந்திர தொலைக்காட்சித் தொடரில் படையினர் தொடர்பான சில வசனங்கள் (இரண்டு கற்பனைக் கதாபாத்திரங்கள் இடையில் நடக்கும் ஒரு உரையாடலின் அங்கமாக) இடம்பெற்றவுடன் செப்டம்பர் 2006ல் அத்தொடர் ஒளிபரப்பாகிக்கொண்டிருக்கும்போதே பாதியில் நிறுத்தப்பட்டது. இத்தொடரை தொடர்ந்து ஒளிபரப்புவதை இலங்கை ரூபவாஹினி இடைநிறுத்தியது. இந்த தொலைக்காட்சித் தொடர் பாதுகாப்புப் படைகளை

---

[94] 'அக்ஷர்யா திரைப்படம் அழிக்கப்பட வேண்டும்; அறிவு மூளையில் இருக்க வேண்டுமே தவிர முலையில் அல்ல", என்கிறார் தலைமை நீதிபதி', லங்கா ஈநியூஸ், 31 ஜூலை 2007, http://www.lankaenews.com/English/news.php?id=4481.

[95] அசோக ஹண்டாகமவை தொலைபேசியில் பேட்டிகாணப்பட்டது, 10 ஆகஸ்ட் 2007

[96] 'கலைக்கு இடமளிக்க வேண்டிய அவசியம் நமக்கிருக்கிறது', விமுக்தி ஜெயசுந்தரவுடனான பேட்டி, பேட்டி கண்டவர் ரிச்சர்ட் பிலிப்ஸ், 2 அக்டோபர் 2006, WSW இணையதளம், http://www.wsws.org/articles/2006/oct2006/jaya-o02.shtml.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழிவுபடுத்திவிட்டதாக SLFGயின் தலைவர் நியூடன் குணரத்ன ஊடகங்களில் தெரிவித்தார்.[97]

### *7.7 மாவ்பீமா செய்தித்தாள் இலக்குவைக்கப்பட்டு அதன் குரல் ஒடுக்கப்பட்ட சம்பவம்*

ஸ்டாண்டர்ட் நியூஸ்பேப்பர் நிறுவனத்தின் வெளியீடுகளான *மாவ்பீமா* மற்றும் *சண்டே ஸ்டாண்டர்ட்* ஆகிய இரண்டின் பிரசுரமும் பிப்ரவரி 2007ல் நிறுத்தப்பட்டன. 1970களுக்குப் பிறகு அதிகாரிகளால் மூடப்படும் முதல் சிங்களப் பத்திரிகை *மாவ்பீமா*தான். இந்தப் பத்திரிகையில் எழுதிவந்த ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்:

> *"மாவ்பீமாவை மூடியது என்னைப் பாதித்துள்ளது ஏனென்றால் நான் எழுத விரும்புவதை எழுத எனக்கு வேறு இடமில்லை. எங்களது கலாச்சாரம் பற்றி உரையாடவும் விமர்சனம் செய்யவும் இந்த செய்தித்தாள் ஒரு களமாக இருந்தது. ஆனால் இப்போது அந்த களம் இல்லை. எனது கட்டுரைகளை பிரசுரிக்க எனக்கு வேறு இடமும் இல்லை."*[98]

*மாவ்பீமா* பத்திரிகையின் சொந்தக்காரர் டிரன் அல்லிஸ் என்பவர், பிப்ரவரி 2007ல் அதிபர் ராஜபக்ஷவினால் பதவியகற்றப்பட்ட முன்னாள் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவுடன் சம்பந்தப்பட்டவர் என்று அறியப்படுபவர் இந்த டிரன் அல்லிஸ். ஜூலை 2006ல் துவங்கப்பட்ட *மாவ்பீமா* நடந்துவரும் இனப்பிரச்சினைக்கு அதிபர் ராஜபக்ஷ இராணுவ ரீதியில் தீர்வு தேடுவதாகக் தோன்றுவது குறித்து கேள்விகளை எழுப்பியிருந்தது.

18 ஜனவரி 2007 அன்று *மாவ்பீமா*வின் அலுவலகங்கள் வருவாய்த்துறை அதிகாரிகளால் அதிரடி சோதனைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தன. அதற்கு முந்தைய வாரம்தான், இலங்கை காப்பீட்டுத் ஸ்தாபனத்தை தனியார்மயமாக்குவதில் அப்போதைய அமைச்சர் மிலிந்த மொரகொடவினால் கடுமையான முறைகேடுகள் நடந்திருப்பதாக குற்றம்சாட்டி *மாவ்பீமா* கட்டுரை வெளியிட்டிருந்தது. அந்தக் கட்டுரை வெளிவந்த பின்னர்தான், மூத்த அரசாங்க அதிகாரிகள் வருவாய்த்துறை அதிகாரிகளை *மாவ்பீமா* அலுவலங்களைச் சோதனையிடச்சொல்லி பணித்தார்கள் என்று குற்றம்சாட்டப்படுகிறது. அவசரகால விதிமுறைகளைப் பயன்படுத்தியும் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருக்கிறது என்று

---

[97] 'இலங்கையின் அரசு தொலைக்காட்சி நாடகத் தொடரை தணிக்கை செய்துள்ளது', எழுதியவர் பனினி விஜெஶ்ரீவர்தன, 24 அக்டோபர் 2006, www.wsws.org/articles/2006/oct2006/suda-o24_prn.shtml.

[98] ஊடகவியலாளருடனான பேட்டி, பேட்டி எண் 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகப்படுவதாகக் கூறியும் அந்த நிறுவனத்தின் சொத்துகளையும் அரசாங்கம் முடக்கியுள்ளது.[99]

ஸ்டாண்டர்ட் நியூஸ்பேப்பர்ஸ் தனியார் நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவரான **துஷ்யந்த பஸ்நாயகெ**வையும் TID அதிகாரிகள் 26 பிப்ரவரி 2007 அன்று கொழும்பில் கைதுசெய்துள்ளனர் (மேலே பார்க்கவும்).

## *7.8 செய்திச் சேவைகள் தடுக்கப்பட்டது மற்றும் இடைநிறுத்தப்பட்டது*

இணைய சேவை வழங்குவோருக்கு (ISPs) இலங்கை அரசாங்கம் அழுத்தம் தந்து 15 ஜூன் 2006 அன்று *தமிழ்நெட்* இணையதளம் மக்களுக்கு வரவிடாமல் செய்தது.[100] *தமிழ்நெட்* இணையதளம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயல்படுகிறது என அரசாங்கம் குற்றம்சாட்டுகிறது ஆனால் அவர்கள் வழங்கும் செய்திகள், ராஜங்க அதிகாரிகள் உள்ளிட்டுப் பலராலும் பரவலாக வாசிக்கப்படுகிறது. இந்த இணைய தளம் வருவதைத் தடுத்தன் மூலம் இலங்கை மக்கள் யாழ்ப்பாண நிலவரம் பற்றிய செய்திகளை அறிந்துகொள்வதை அரசாங்கம் தவிர்த்துள்ளது.

திஸ்ஸமஹாராமவில் உள்ள ரன்மினிதென்ன என்ற இடத்தில் நடந்த விடுதலைப் புலிகளின் செயற்பாடு குறித்து தவறான செய்திகளை வழங்கியதற்காக 24 அக்டோபர் 2007 அன்றிலிருந்து ABC வானொலி ஒலிபரப்புகள் இடைநிறுத்தப்பட்டன. தவறுதலான செய்திகள் ஒலிபரப்பப்பட்டது குறித்து ஊடக அமைச்சு விசாரணைக்கு உத்தரவிட்டிருக்க வேண்டும் ஆனால் தவறுதலான செய்திகளை வழங்கியதை ஒரு காரணமாகக் காட்டி ஊடக அமைச்சு அவர்களின் ஒலிபரப்புகளை இடைநிறுத்தியதுடம், அந்த நிறுவனத்தின் ஒலிபரப்பு உரிமங்களையும் ரத்துசெய்தது. தாங்கள் வழங்கிய செய்தியை இராணுவம் சார்பாக பேசவல்லவரிடமும் அந்தப் பகுதியின் கிராம சேவை அதிகாரியிடமும் தெரிவித்து சரிபார்த்த பிறகுதான் ஒலிபரப்பியதாக ABC நிறுவனம் கூறுகிறது. இதே செய்தியை வேறுபல வானொலிகளும் தேசிய செய்தித்தாள்களும் அடுத்த நாள் வெளியிட்டிருந்தன. அந்த வானொலிக் குழுமத்தின் அனைத்து ஒலிபரப்புகளும் தடைசெய்யப்படுவதாகவும் அந்த நிறுவனத்தின் ஒலிபரப்பு உரிமங்கள் ரத்துசெய்யப்படுவதாகவும் ஊடக அமைச்சர் 25 அக்டோபர் 2007 அன்று கூறியிருந்தார்.[101] தங்களது ஒலிபரப்பு

---

[99] 'ராஜபக்ஷ ஆட்சியில் ஊடக சுதந்திரத்தின் சோகக் கதை' எழுதியவர்கள் தில்ருக்ஷி ஹந்துனெத்தி, ஆர்தர் வாமணன் மற்றும் நிர்மல கண்ணங்கர, *சண்டே லீடர்*, 25 நவம்பர் 2007

[100] காண்க,"இலங்கையில் தமிழ்நெட் தடைசெய்யப்பட்டது குறித்து 19ஆம் ஷரத்தின் அடிப்படையிலான அறிக்கை', 20 ஜூன் 2007, http://ict4peace.wordpress.com/2007/06/20/article19-statement-on-the-ban-of-tamilnet-in-sri-lanka/.

[101] 'ABC நிறுவனம் ரூ.450 மில்லியன் நஷ்டஈடு கோருகிறது', லங்கா டிஸ்ஸிடெண்ட், 30 அக்டோபர் 2007, http://lankadissent.com/index.php?option=com_content&task=view&id=2073&Itemid=74.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமங்களை ரத்து செய்த ஊடக அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாபாவின் உத்தரவை எதிர்த்து ABC நிறுவனம் உச்சநீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது. அவ்வழக்கு நிலுவையில் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. பொறுப்பேற்கவைக்கும் தன்மை மற்றும் சட்ட நடவடிக்கைகள் இல்லாத சூழ்நிலை

பத்திரிகையாளர்களை இலக்குவைப்பவர்கள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்களைச் செய்வோர் சட்ட நடவடிக்கைகளிலுருந்து காப்பாற்றப்படுகிறார்கள். இலங்கையில் குற்றவாளிகள் தண்டனைகளுக்கு அப்பாற்பட்டவராக சட்டத்தின் பிடியிலிருந்து நழுவிச்செல்வது என்பது ஒரு நெடுநாளைய கலாச்சாரமாகவே புரையோடிப்போயுள்ளது. கருத்துச் சுதந்திரம் ஒடுக்கப்படுவதாக எழும் குற்றச்சாட்டுகளில் பெரும்பான்மையானவை உரிய அதிகாரிகளால் உதாசீனப்படுத்தப்படவும் நிராகரிக்கப்படவும் செய்கின்றன. ஊடகப் பணியாளர்களின் கொலைகள் சரிவர விசாரிக்கப்படாமல் இருப்பதற்கு ஒரு நெரிய வரலாறே இருக்கிறது. இண்டர்-பிரெஸ் சர்வீஸ் அமைப்பின் பத்திரிகையாளர் **ரிச்சர்ட் டி சொய்ஸா** 1990 பிப்ரவரியில் கொல்லப்பட்டது உள்ளிட்டு பல வழக்குகள் ஒழுங்காக விசாரிக்கப்பட வேண்டும் என இலங்கையின் ஊடக அமைப்புகள் பிரச்சாரம் செய்துள்ளன.

1990ல் ரிச்சர்ட் டி சொய்ஸா சட்டவிரோதமாகக் கொல்லப்படுவதற்கு பொறுப்பானவர்கள் இத்தனைக் காலம் கடந்தும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவே இல்லை. ரிச்சர்ட் டி சொய்ஸா, பெரிதும் மதிக்கப்பட்ட ஒரு நடிகரும், பத்திரிகையாளரும் ஆவார். 80களின் பிற்பகுதியில் இலங்கை பாதுகாப்புப் படையினர் செய்த மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இவர் வெளிப்படையாக விமர்சனம் செய்திருந்தார். 19 பிப்ரவரி 1990 அன்று இவர் கொலையுண்டு கிடந்தார். 18 பிப்ரவரி 1990 காலை, ஆறு துப்பாக்கிதாரிகள், அதில் இருவர் பொலிஸ் சீருடை அணிந்தவார்கள், பொலிஸ் ஜீப்பில் வந்து டி சொய்ஸாவை அவரது வீட்டிலிருந்து கொண்டு சென்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். டி சொய்ஸாவின் தாயார், டாக்டர் மனோராணி சரவணமுத்துவிடம் புகைப்படங்களைக் காட்டி அடையாளம் காட்டச் சொன்னபோது, காவல்துறை மூத்த கண்காணிப்பாளர் ரொனி குணசிங்கதான், கடத்திச் சென்ற குழுவுக்கு தலைவராக வந்தவர் என்று அடையாளம் காட்டினார். முழு அளவிலான விசாரணை வேண்டுமென டாக்டர்.சரவணமுத்து வலியுறுத்தியிருந்தார். ஆனால் அவரும், காவல்துறை மூத்த கண்காணிப்பாளரும் தற்போது இறந்துவிட்டார்கள் என்ற நிலையில் வழக்கு கைவிடப்பட்டுவிட்டது.

செய்தியாளர் **மயில்வாகனம் நிமலராஜன்** கொலையிலும் விசாரணைகள் முடங்கிக் கிடக்கின்றன. 19 அக்டோபர் 2000 அன்று யாழ்ப்பாண செய்தியாளர் நிமலராஜனின் இல்லத்தை இனந்தெரியாத ஆயுதக் கும்பலொன்று நெருங்கினார்கள் என்று கூறப்படுகிறது. பின்னர் நடந்தவை குறித்து பத்திரிகையாளர்களின் பாதுகாப்புக்கான குழு (CPJ) தெரிவிக்கிறது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"வீட்டில் தனது அலுவல் அறையிலிருந்து கட்டுரை ஒன்றை அச்செய்தியாளர் எழுதிக்கொண்டிருக்கையில், கொலையாளிகள் அவரை ஜன்னல் வழியாக சுட்டுள்ளனர், பின்னர் அங்கிருந்து தப்புவதற்கு முன்னதாக வீட்டுக்குள் எறிகுண்டு ஒன்றையும் அவர்கள் வீசினர். யாழ்ப்பாணத்தின் மையத்தில் ஒரு உயர் பாதுகாப்பு வலய பகுதிக்குள் ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ள வேளையில் இந்தத் தாக்குதல் நிகழ்ந்துள்ளது. இந்தத் தாக்குதலில் அச்செய்தியாளரின் பெற்றோரும், 11 வயது உறவுக்கார சிறுவன் ஒருவனும் பலத்த காயமடைந்தனர். அச்சமயம் நடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது யாழ்ப்பாணத்தில் நடந்த வாக்களிப்பு முறைகேடுகள் மற்றும் வாக்காளர் அச்சுறுத்தல்கள் பற்றி நிமலராஜன் வழங்கிய செய்திகள், அவர் கொலை செய்யப்படுவதற்கு வழிவகுத்திருக்கலாம் என்று உள்ளூர் ஊடகவியலாளர்கள் சந்தேகிக்கின்றனர்.*[102]

பிபிசி உள்ளிட்ட பல்வேறு ஊடகங்களுக்கு மயில்வாகனம் நிமலராஜன் செய்திவழங்கி வந்தார். அவரது கொலை குறித்து சர்வதேச அளவில் போராட்டங்கள் நடந்தும், கொலையின் சந்தேக நபருடைய பெயர் நெப்போலியன் (இவர் EPDP உறுப்பினர் என்று கூறப்படுகிறது) என்று தெரிவிக்கப்பட்டும்கூட விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை.[103] 2000த்தில் நடந்த தேர்தலில் EPDP கட்சியினர் மேற்கொண்ட பிரச்சாரத்தின்போது மயில்வாகனம் நிமலராஜன் விமர்சனக் கருத்துகளுடன் செய்தி வழங்கியிருந்தார் என்பது, EPDPயினரின் 'ஒழித்துக்கட்ட வேண்டியோர் பட்டியலில்" அவரை வைத்தது என அவருடன் பணியாற்றியவர்கள் கூறுகின்றனர்.

டெய்லி மிர்ரர் பத்திரிகையின் பிரபலமான கட்டுரையாளரும், தமிழ்நெட் இணையதள செய்திச் சேவையின் மூத்த செய்தி ஆசிரியருமான **தர்மரட்ணம் சிவராம்** 28 ஏப்ரல் 2005 அன்று கொழும்பிலிருந்து கடத்தப்பட்டார். அடுத்த நாள் இலங்கை நாடாளுமன்றத்துக்கு அருகிலுள்ள திடலில், உயர் பாதுகாப்பு வலய எல்லைக்குள் குண்டுக்காயங்களுடன் அவரது சடலம் கண்டெடுக்கப்பட்டது. சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டார். ஆனால் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டுவிட்டார்.

விசாரணையில் ஏற்படும் தாமதம் குறித்து *தி நேஷன்* என்ற வாரசஞ்சிகை பின்வருமாறு கருத்துவெளியிட்டது:

---

[102] இலங்கை ஊடகங்கள் அறிக்கை 2000, ஊடகவியலாளர்களின் பாதுகாப்புக்கான குழு (CPJ), http://www.cpj.org/attacks00/asia00/Sri_Lanka.html.

[103] ஊடகவியலாளர் நிமலராஜன் முதலாம் ஆண்டு நினைவு நாள் அன்று இலங்கை ஜனாதிபதிக்கு எழுதி பிரசுரிக்கப்பட்ட கடிதம், 18 அக்டோபர் 2001 FMM இயக்கத்தால் எழுதப்பட்டு, சர்வதேச பொதுமன்னிப்பு சபை உள்ளிட்ட பல உரிமை அமைப்புகளால் கையெழுத்திடப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"விசாரணைகள் மெதுவாக செல்லவேண்டும் என்ற அழுத்தம் இராணுவ உளவுப் பிரிவிருந்து வருகிறது. அப்படிப்பட்ட இடத்திலிருந்து வருகின்ற அழுத்தங்களை உள்ளூர் காவல் நிலையங்களாலும் குற்றப் பிரிவு பொறுப்பு அதிகாரிகளாலும் தாக்குப்பிடிக்கவே முடியாது. தராகி என்றழைக்கப்படும் தமிழ் பத்திரிகையாளர் தர்மரட்ணம் சிவராம் கொல்லப்பட்டு ஒரு வருடம் கடந்துவிட்டது. மொபைல் போன்கள் இன்னபிற தொழில்நுட்பங்களையெல்லாம் பயன்படுத்தி சிறப்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாக கூறப்பட்டிருந்தாலும், சிவராமின் குரூரப் படுகொலை குறித்த விசாரணைகள் தொடங்கிய வேகத்தில் அப்படியே நின்றுவிட்டன."*[104]

இன மோதல்கள் தொடர்பில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் அதிகரித்துவரும் நிலையில், குற்றவாளிகள் தண்டனைக்கு அப்பாற்பட்டு இருப்பது குறித்து சர்வதேச பொதுமன்னிப்பு சபை பெரும் கவலைகொண்டுள்ளது.

இந்தக் கொலைகள் தொடர்பாகவும் ஊடகவியலாளருக்கு எதிரான பிற மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் இலங்கை அரசாங்கம் உடனடியாகவும் பலனளிக்கக்கூடிய வகையிலும், பக்கச்சார்பின்றியும் விசாரணைகளை மேற்கொண்டு, குற்றவாளிகளைச் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டும் என்று சர்வதேச பொதுமன்னிப்பு சபை கோருகிறது. சட்டத்தை மீறுபவர்கள், தங்களின் செயல்களுக்கு பொறுப்பேற்கும் நிலை உருவாக வேண்டும்.

[104] 'பத்திரிகையாளர் சம்பத் லக்மல் டி சில்வாவின் கொலை – தூதுவரின் கொலையில் மர்மம்' 6 ஜூலை 2006, *தி நேஷன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. அபிப்பிராயம் மற்றும் கருத்துச் சுதந்திரத்தை மதிப்பதும் அவை மதிக்கப்படுவதை உறுதிசெய்வதும்



Protestors, Colombo 2007 © LankaeNews

இலங்கையின் இன மோதல்கள் அல்லது ஊழல் குறித்து விமர்சனக் கருத்துகளுடன் செய்திகளை வழங்கினால், அச்சுறுத்தல்களும், துன்புறுத்தலும் ஏற்படுவதாக ஊடகப் பணியாளர்கள் தொடர்ந்தும் கூறிவருகிறார்கள்.

அதேநேரம், பக்கச்சார்பின்றியும் தொழில்முறையில் செம்மையாகவும் செய்திச் சேவைகளை வழங்க வேண்டிய அவசியம் இருப்பதையும் ஊடகங்கள் தாங்களாகவே உணர்ந்துள்ளனர். ஊடகவியலாளர்கள் தங்களுடைய தொழில்சார் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்புகளின் தொகுப்பு ஒன்று 2005ன் தொலங்கமுவ தீர்மானத்தில் இருக்கிறது.[105] நியாயமான, நடுநிலையான, பக்கச்சார்பற்ற ஊடகங்களை வளர்ப்பதற்கான தமது ஈடுபாட்டை நிரூபிக்கும் வகையில் ஊடக நிறுவனங்கள் அமைப்புகள் அரசாங்கம் என்று இரண்டு தரப்புமே ஒழுங்காக நடந்துகாட்டவேண்டியது அவசியம்.

மக்களுக்கு உண்மையான சேவை வழங்கும் ஊடகங்கள் உருவாகும் முயற்சிகளை அரசாங்கம் ஆதரிக்க விரும்புகிறது என்றால், கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளையை நசிக்கும் 2005, 2006ஆம் ஆண்டுகளின் அவசரகால விதிமுறைகளை அது மீளாய்வு செய்ய வேண்டும். அவசரகால விதிமுறைகளில் "பயங்கரவாதம்" என்ற பதம் வரையறுக்கப்பட்டுள்ள விதம் குறித்து தொடர்ந்து கேள்வியெழுப்பிவரும் சர்வதேச பொதுமன்னிப்பு சபை, அந்த வரையறையை அரசாங்கம் மீளாய்வு செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களின் பாரிய மீறல்களுக்கு மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினருமே பொறுப்பாளிகளாக அமைந்திருக்கின்ற ஒரு பின்னணியில், எழுதுதல் மற்றும் செய்திவழங்குதல் ஆகிய தம்முடைய தொழில்சார் கடமைகளை அச்சமின்றியும் தடையின்றியும் ஆற்ற ஊடகவியலாளர்களுக்கு இடமிருக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியம். இலங்கையில் மோதலில்

---

[105] ஜனநாயககரமான மற்றும் பன்முகத்தன்மை கொண்ட ஊடகக் கலாச்சாரம், ஊடகங்கள் மற்றும் ஊடகவியலுக்கான சமுதாய மற்றும் தொழில்சார் உரிமைகள் சாசனம், http://www.ifj-asia.org/files/tholangamuwa_declaration.pdf, செப்டம்பர் 9-11 2005ல் தொலங்காமுவவில் நடந்த இலங்கை ஊடகவியலாளர்கள் தேசிய மாநாடின் முடிவில் இந்த சாசனம் அங்கீகரிக்கப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினருமே கருத்துச் சுதந்திரத்தில் தலையிடவும் அதனை ஒடுக்க முயலவும் செய்திருக்கிறார்கள். அதிகரித்துவரும் அச்சுறுத்தல்கள், உயிரை மாய்க்கும் அளவில்கூட நடக்கும் நேரடியானத் தாக்குதல்கள் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படுவது குறித்து சர்வதேச பொதுமன்னிப்பு சபை பெரும் கவலைகொண்டுள்ளது. சர்வதேச மனித உரிமை சட்டங்கள் அனுமதிக்கும் அளவுகளையெல்லாம் தாண்டி ஊடகச் சுதந்திரத்தை ஒடுக்கும் இலங்கையின் வேறுபல காரணிகள் குறித்தும் எமது அமைப்பு கவலைகொண்டுள்ளது. இலங்கையில் பத்திரிகையாளர்கள் காணாமல்போகிறார்கள், செய்தித்தாள் மற்றும் பிற ஊடகங்கள் மூடப்பட்டும் தாக்கப்பட்டும் இருக்கிறன, அச்சங்களுக்கும் சந்தேகங்களுக்கும் மத்தியில் ஊடகப் பணியாளர்கள் வாழ்ந்துவருகிறார்கள்.

இந்நிலை தொடர்பாக இலங்கை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும், குற்றவாளிகள் தண்டனைக்கு அப்பாற்பட்டு வாழும் நிலையை எதிர்க்க வேண்டும். ஊடகப் பணியாளர்கள் மீதான தாக்குதல்களும், அச்சுறுத்தல்களும், துன்புறுத்தல்களும் சகித்துக்கொள்ளப்படவே மாட்டாது என்பதுபோல அவர்கள் நடந்துகொள்ள வேண்டும். அனைத்து ஊடகவியலாளர் கொலைச் சம்பவம் தொடர்பாகவும் சர்வதேச அளவுகோள்களில் விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும். ஊடகவியலாளர்களை இலக்குவைப்பதை மோதலில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினருமே நிறுத்தியாகவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. பரிந்துரைகள்

**இலங்கை அரசு அதிகாரிகளிடம் பின்வரும் கோரிக்கைகளை சர்வதேச பொதுமன்னிப்பு சபை முன்வைக்கிறது:**

- சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களின் கீழ் இலங்கைக்கு இருக்கும் கடப்பாடுகளை அது மதித்து நடக்கும் நோக்கில், உயிர்வாழ்வதற்கும், சுதந்திரமாக செயல்படுவதற்கும், பாதுகாப்புடன் இருப்பதற்கும் ஊடகப் பணியாளர்களுக்கிருக்கும் உரிமைகள் மதிக்கப்படவும் பாதுகாக்கப்படவும் வேண்டும். ஊடகப் பணியாளர்களின் கொலைகள், அவர்கள் மீதான அச்சுறுத்தல்கள் அல்லது பிறவகையான தாக்குதல்கள் சகித்துக்கொள்ளப்படவே மாட்டாது என்பதை அரசாங்கம் ஐயங்களுக்கு இடமின்றி தெளிவுபடுத்தவேண்டும். ஊடகப் பணியாளர்கள் தாக்குதலுக்குள்ளா அனைத்து சம்பவங்களும், தாக்குதலைச் செய்தவர் அல்லது பாதிக்கப்பட்டவர் எவராய் இருந்தாலும், தாமதமின்றியும், பக்கச்சார்பின்றியும், சுயாதீனமாகவும், பலனளிக்கும் வகையிலும் விசாரிக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட தாக்குதல்களில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படுபவர்கள் – தாக்குதலுக்கு உத்தரவிட்டிருந்த அல்லது இடமளித்திருந்த பொறுப்புமிக்க நிலைகளில் இருப்போர் உள்ளிட்டு அனைவருமே – சர்வதேச தரத்திலான நியாயமான வழக்கு விசாரணைகளின் முன்பு நிறுத்தப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்பட வேண்டும்;
- விடுதலைப் புலிகள், தமிழ் ஆயுதக் குழுக்கள் மற்றும் பிறரால் தாக்கப்படுவதிலிருந்து ஊடகப் பணியாளர்களைப் பாதுகாப்பதில் முறையாக ஈடுபட வேண்டும்.
- ICCPR ஒப்பந்தம் மற்றும் பிற சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் அளவுகோள்களின் கீழ் இலங்கைக்கு இருக்கும் கடப்பாடுகளை அது மதித்து நடக்கும் நோக்கில், அபிப்பிராயம் மற்றும் கருத்துச் சுதந்திரத்தை அது மதிக்கவும், பாதுகாக்கவும், நிறைவேற்றவும் வேண்டும். அதிலும் குறிப்பாக:
    - தங்களுடன் இணைந்து செயலாற்றும் பாதுகாப்புப் படைகள் மற்றும் ஆயுதக் குழுக்களை, ஊடகங்களுக்கு எதிரான அனைத்துவிதமான தாக்குதல்களையும் உடனடியாக நிறுத்தச் சொல்லி உத்தரவிட வேண்டும்.
    - தணிக்கை செய்தல், ஊடகங்களை மூடுதல், மோதல் நடக்கும் இடங்களுக்குச் சென்றுவருவதில் கட்டுப்பாடுகளை விதித்தல், ஊடகங்களைக் கண்காணித்தல் மற்றும் ஊடகப் பணியாளர்களை தடுத்துவைத்தல் போன்ற இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளுக்கு ஒவ்வாத செயல்களை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மற்றவர்களின் உரிமைகளும் நற்பெயரும் மதிக்கப்படுவதற்கும் தேசிய பாதுகாப்பு அல்லது சட்ட ஒழுங்கு அல்லது பொதுமக்களின் சுகாதாரம் மற்றும் நன்னடத்தை ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கும் நிஜமாகவே தேவை என்கிற அளவில் மட்டும் கருத்துச் சுதந்திரத்தின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படவேண்டும்.
- அபிப்பிராயம் மற்றும் கருத்துச் சுதந்திர உரிமைகள் பேணப்பட வேண்டும் என்ற ரீதியில் இலங்கையில் அனைவரும் தம்முடைய நம்பிக்கைகளையும் அபிப்பிராயங்களையும் பகிர்ந்துகொள்ள இடமளிக்கும் வகையில் அவர்கள் இணையத்தைப் பாவிப்பதை உறுதி செய்யக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்;
- உரிமம் வழங்குதல், அலைவரிசை கட்டுப்பாடுகள் மூலம் ஊடகச் சுதந்திரத்தின் மீது கட்டுப்பாடுகள் விதிப்பதை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

- தற்போது அமலில் உள்ள அனைத்து அவசரகால விதிமுறைகளையும் விலக்கிக்கொள்ளவோ அல்லது சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் அளவுகோல்களுக்கு ஏற்ப அவற்றில் மாற்றங்கள் கொண்டுவரவோ வேண்டும்.
- குறிப்பாக, கருத்துச் சுதந்திரம் மற்றும் பிற மனித உரிமைகளை ஒடுக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்ட அனைத்து அவசரகால மற்றும் பிற சட்டங்கள் ரத்துசெய்யப்படவோ சீர்திருத்தப்படவோ வேண்டும். பின்வரும் சட்டங்களும் இதில் அடங்கும்;
    - அச்சு ஊடக சபை சட்டம் 1973 எண் 5;
    - பாதுகாப்பு அவசரச் சட்டம் 1947 எண் 25 (PSO);
    - அவசரகால விதிமுறை (இத்யாதி விதிகள் மற்றும் அதிகாரங்கள்) 2005 எண் 1 (மற்றும் இவ்விதிமுறையை நீட்டித்த பிற்கால உத்தரவுகளும்);
    - அவசரகால விதிமுறை (பயங்கரவாதம் மற்றும் குறிப்பிட்ட பயங்கரவாத செயல்கள் தவிர்ப்பு மற்றும் தடுப்பு) 2006 எண் 7.
- கருத்துச் சுதந்திரத்திற்கான ஐ.நா.மன்ற சிறப்பு தொடர்பு அதிகாரி இலங்கை வர அழைக்க வேண்டும்;
- சர்வதேச மனித உரிமை சட்டங்கள் மற்றும் அளவுகோள்களுக்கு இணங்க தகவல் சுதந்திரச் சட்டம் ஒன்றை உருவாக்கும் நோக்கில் செயலாற்ற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடுதலைப் புலிகளிடம் பின்வரும் கோரிக்கைகளை சர்வதேச பொதுமன்னிப்பு சபை முன்வைக்கிறது:**

- ஊடகப் பணியாளர்களைக் கொல்வது, அச்சுறுத்தவது அல்லது பிறவகையில் தாக்குவது போன்ற செயல்கள் அனைத்தையும் நிறுத்த வேண்டும் என உறுப்பினர்களுக்கு உத்தரவிட வேண்டும்.
- ஊடகப் பணியாளர்களைக் கொல்வது, அச்சுறுத்தவது அல்லது பிறவகையில் தாக்குவது போன்ற செயல்கள் சகித்துக்கொள்ளப்பட மாட்டாது என்பதை உறுப்பினர்களிடம் தெளிவுபடுத்த வேண்டும். இதுபோன்ற தாக்குதல்களை நடத்தியவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள், அவர்கள் மீண்டும் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடக்கூடிய நிலைகளிலிருந்து அகற்றப்பட வேண்டும்.

**ஊடகச் சமூகத்தாரிடம் பின்வரும் கோரிக்கைகளை சர்வதேச பொதுமன்னிப்பு சபை முன்வைக்கிறது:**

- 2005ன் தொலங்கமுவ தீர்மானத்தில் கோடிடப்பட்டுள்ள கொள்கைகளை ஏற்றுக் கடைப்பிடிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ள ஒரு பெரிய மோதல் ஆனாலும் சரி, உலகம் மறந்துவிட்ட ஒரு மூலையில் நடக்கும் ஒரு இருட்டடிக்கப்பட்ட பிரச்சினை என்றாலும் சரி, நீதியும் நியாயமும் உரிமையும் அனைத்துத் தரப்பினருக்கும் வேண்டும் என்று கோரிப் போராடுகிறது சர்வதேச பொது மன்னிப்பு சபை. ஒரு மேம்பட்ட உலகத்தைக் கட்டியெழுப்புவதற்காக மக்கள் ஆதரவை ஒன்றுதிரட்ட அது எத்தனிக்கிறது.

## நீங்கள் செய்யக்கூடியது என்ன?

- சர்வதேச பொது மன்னிப்பு சபையில் உறுப்பினராவதன் மூலம் மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவரும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள ஒரு உலகளாவிய இயக்கத்தில் பங்காற்றுங்கள். மாற்றத்தைக் கொண்டுவருவதில் எமக்கு உதவுங்கள்.
- சர்வதேச பொது மன்னிப்பு சபை செயல்படுவதற்கு உங்களால் முடிந்த தொகையைக் கொடுத்து உதவுங்கள்.

மனித உரிமைகளைக் குலைக்கும் பயங்கர சக்திகளை எதிர்த்துப் போராடி கட்டுப்படுத்துவது சாத்தியமே என்று பல இடங்களில் ஆர்வலர்கள் நமக்குக் காட்டியுள்ளனர். ஆகவே இந்த இயக்கத்தின் ஒரு அங்கமாக இருங்கள். அச்சுறுத்தலையும் வெறுப்பையும் கட்டவிழ்த்துவிடுவோரை எதிர்த்துப் போராடுங்கள். சர்வதேச பொது மன்னிப்பு சபையில் சேருங்கள்.

ஒன்றாக சேர்வதால் நம்முடைய குரல்களை ஓங்கி ஒலிக்கச் செய்யமுடியும்.

## நான் உதவிசெய்ய விரும்புகிறேன

☐ சர்வதேச பொது மன்னிப்பு சபையின் உறுப்பினராவதற்கான மேலதிக விபரங்களைப் பெற நான் ஆர்வமாக இருக்கிறேன்.

பெயர்: ______

முகவரி: ______

______

______

நாடு: ______

மின்–அஞ்சல்: ______

☐ சர்வதேச பொது மன்னிப்பு சபைக்கு நிதியுதவி செய்ய நான் விரும்புகிறேன்.

தொகை: ______

எனது வங்கி அட்டையிலிருந்து பணம் எடுத்துக்கொள்ளவும் விசா ☐ மாஸ்டர்கார்ட் ☐

அட்டை எண்: ______

காலாவதியாகும் தேதி: ______

கையொப்பம்: ______

தயவுசெய்து இந்தப் படிவத்தை உமது நாட்டிலுள்ள சர்வதேச பொது மன்னிப்பு சபை அலுவலகத்துக்கு திருப்பியனுப்பவும். உங்கள் நாட்டில் சர்வதேச பொது மன்னிப்பு சபை அலுவலகம் இல்லை என்றால், திருப்பியனுப்ப வேண்டிய முகவரி:

Amnesty International
International Secretariat
Peter Benenson House
1 Easton Street
London WC1X 0DW
United Kingdom
(ஐக்கிய இராஜ்ஜிய பவுண்டுகளாகவும் £, அமெரிக்க டொலர்களாகவும் $, ஐரோப்பிய யூரோக்களாகவும் € பணத்தை ஏற்றுக்கொள்வோம்)

www.amnesty.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கை
# விமர்சனக் கருத்துகளை ஒடுக்குதல்

இலங்கையில் ஊடகப் பணியாளர்கள் பெரும் ஆபத்தை எதிர்கொள்கிறார்கள். ஏப்ரல் 2006ல் இருந்து அரச படைகள், விடுதலைப் புலிகள் என்று இருதரப்பிலிருந்தும் மோதல்களும் தாக்குதல்களும் பல மடங்கு உக்கிரமடைந்துள்ளன. மனித உரிமை மீறல்களையும் மனிதாபிமான சட்டப் புறக்கணிப்புகளையும் அனைத்துத் தரப்பினருமே பெரிய அளவில் செய்துவரும் ஒரு பின்னணியில், மோதல்கள் குறித்து செய்தி வழங்கும் ஊடகவியலாளர்கள் தமது பாதுகாப்பு குறித்து கொண்டுள்ள அச்சம் அதிகரித்துவருகிறது.

இலங்கையில் 2006 தொடக்கம் குறைந்தபட்சம் 10 ஊடகப் பணியாளர்கள் சட்டவிரோதமாகக் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஒருவர் பாதுகாப்புப் படையினரின் தடுப்புக் காவலிலிருந்த வேளையில் காணாமல் போயுள்ளார். அரசாங்கத்துக்கு அளவுக்கதிகமான அதிகாரங்களை வழங்கும் நெருக்கடிநிலை விதிமுறைகளின் கீழ் பலர் யதேச்சதிகாரமாக் தடுத்துவைக்கப்பட்டும் சித்ரவதை செய்யப்பட்டும் இருக்கிறார்கள்.

சில வேளைகளில் பாதுகாப்புப் படையினரின் ஒத்தாசையுடன் தமிழ் ஆயுதக் குழுக்கள் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகத் தெரிகிறது. குற்றவாளிகளை சட்டத்தினால் பிடிக்கமுடியாத ஒரு சூழல் நிலவுகிறது. செய்தியாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்களின் கொலைக்குப் பொறுப்பானவர்கள் என்று நம்பப்படுபவரில் இதுவரை ஒருவர்கூட விசாரணைகள் மூலம் சட்டத்தின் தண்டனைக்கு ஆளாகவில்லை.

இந்த நிலைமையை இலங்கை அதிகாரிகள் கட்டாயம் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். ஊடகப் பணியாளர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படும் தாக்குதல்களும், அச்சுறுத்தல்களும், துன்புறுத்தல்களும் சகித்துக்கொள்ளப்பட மாட்டாது என்று தெளிவுபடுத்தும் ஒரு செய்தியைப் பரவச்செய்வதுபோல அதிகாரிகள் செயல்படத் துவங்க வேண்டும். ஊடகவியலாளர் கொலைச் சம்பவங்கள் அனைத்து் தொடர்பாகவும் பக்கச்சார்பற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதை இலங்கை அரசு உறுதிசெய்ய வேண்டும் என சர்வதேச பொது மன்னிப்பு சபை வலியுறுத்துகிறது.

**7 பிப்ரவரி 2008 வரை**
**பிரசுரிக்கக்கூடாது**
சர்வதேச பொது மன்னிப்பு
சபை பட்டியல்: ASA 37/001/2008

amnesty international
www.amnesty.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org